ஸ்ரீ [illegible]ணியர் துணை

அடையாறு [illegible]

பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீமஹாபாகவதத் திரட்டு.

இது

[illegible]யார் மடாலயாதிபதி குருமூர்த்தி எனவழங்கும்

ஸ்ரீ சிதம்பர ஞானதேசிகரவர்களால்

ஸ்ரீமத் மகாபாகவதத்திலின்றும்

திரட்டப்பட்டு,

சென்னை, ஆந்திர நியலாஜிகல்

ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்,

சா. வடிவேலு செட்டியாரவர்களாலும்,

மங்கலம்-ஷண்முக முதலியாரவர்களாலும்,

சென்னை, கோமளேசுவரன் பேட்டை,

சச்சிதாநந்தம் பிரசில்

பதிப்பிக்கப்பட்டது.

1915.

MAHAMAHOPADHYAYA
[illegible]MINATHA IYER LIBRARY
MADRAS

ஓம் தத் சத்.    ௪08

ஸ்ரீகிருஷ்ணயநமஃ.

# ஸ்ரீமகா பாகவதத் திரட்டு.

## முதலாவது ஸ்கந்தம்.

### பாயிரம்.

சீர்பூத்த பாஞ்சடாராப்ச சித்தாகிக் கானலிடை
சீர்பூத்த தெனவுலக நிறைநதொளிதன பாற்றேனற
வேர்பூத்த முத்தொழிலு மினிதியற்றித் தனிநின்ற
கார்பூத்த திருமேனிக் கடவுண்மல ரடிநினைவாம

பிறந்தபொழு தேதுறந்து பிறைக்குழவி போன
டிபபப பின்போய்த் தொன்னூ, லறைந்தபுகழ வியாத
முனி யாதரத்தான் மதலாயென் றழைப்பச செவ்வாய்,
திறநதுகறை பொழிபுமலர்ச செழுந்தருவு மேடெனன
ன வுயிர்க ளியாவு, நிறைந்துறையுஞ் சுகமுனிவ னிணை
பிதழ்த்தா மரைமலர்த்தா ணினைதல் செய்வாம். 2

[சௌனகாதியர் கேள்வி.
சூதர் அதற்கு உத்தரம் கூறல்]

வந்த வெங்கலி வளர்தலிற் றருமங்க டவங்கள்
சிந்தை யுற்றொரு குறைவறச் செய்குவ தரிதா
மாந்த லின்றியா னந்தமாய் நண்ணிய ஞான
பெய்ந்த வாற்றினு லியைந்திடு மெனமதித் திருந்தே,

வேத † நான்கையும் விதித்தவன் விளம்புநற் புரா
மோது மொன்பதிற் றிரட்டியு முணர்தரு முரவே
காத லோடினைக் கண்ணனை நாட்டிடக் கண்டே
‡ மோக நீங்கினே முத்தியு மெய்தவெளி தாமால

உலகெலாந்தன தகல்வயிற் றொருங்குடை கிடப்பக்
கலைய ரும்பிய கதிரிள மதியெழில் கவற்றுந்
நிலக வானுதற் றேவகி திருவயிற் றுதித்தோன்
நலமு மாக்கதை கூறுவா யென்றுகூ றினரால்

முனிவ ரிந்திற முரைத்தலு முழுதுணர் சூத
னனகன் மாக்கதை கேட்கவுள் ளன்புமிக் கூர்ந்தான்
வினையி னீங்கிய மெய்த்தவப் பயனெனக் குருவைப்
புனித மாலெனா மடந்தையைப் போற்றினன் புகல்வான்

புரியும் பாதகம் போக்கிடப் புனிதநீர் படிந்தா
ராரிய மாதவ நாற்றுவா ராற்றிடு முற்றுன
மருவு வெம்பவந் தீர்த்திடு மால்கதை கேட்கப்
பெருகு மன்பினின் பிறப்பறு ஞானமெய் திடுமே.

[சற்கருமங்களிருக்க அங்ஙனம் அன்பெற்றிற கேனில்

துறவி னொன்பதத் தன்பில ராய்நனி துணிந்தே
பறவி லாதநற் கருமங்க ளாற்றினு மறிவின்

† நான்கெண என்றும் பாடமுண்டு.
‡ மோக என்றும் பாடமுண்டு.

பளமி லாதவ ராயுடல் வருந்தின ரன்றிக் [யால்.
னொருமை வானகதி யடைந்திடக் கிடைப்பதொன் றிலை

[சோபானத்தால் அத்வைத பங்கமேனின்.]

கேடில் வேதமு மகங்களுநல் கெழுமிய தவமு
டியோகமுந் தானமு நிகழ்த்திய கதியுங்
கூடு மாயையுந் தருமமுங் குலவிய வீடு
நாடு ஞானமு ‡ நவிற்றுநா ராயண னுமால். 9

[மீண்டுந் திருஷ்டாந்த முகத்தால் வற்புறுத்தல்.]

பின்ன பின்னமாய்த் தருக்களிற் பிறங்கிய தழலிற்
பன்னு கூத்தினிற் பற்பல வேடமுற் றவரின்
மன்னு மெவ்வுல கத்தினு மருவியேழ் பிறப்பாய்த்
துன்னு நல்லுரு வாகவுந் துலங்குவன் றொல்லோன்.

இலகு மேழ்பிறப் பினில்வரு சராசரத் தோடு
முலகெ லாந்தனி யுதிப்பது மொழிந்தடங் குவது
மலகி லாதவன் பாலல திலையவை யவமாங்
கலைய லாதுவே றுலகெனக் காட்டலு மிலையால். 11

திருந்து நல்லறி வானவன் குணத்தொடுஞ் சேர்ந்து
வருந்து முத்தொழி லியற்றுமா மாயையை மணந்த
பிருந்த னன்னெனத் தோன்றினு மிவையுளத் தறிவு
பொருந்தி நோக்கில்வெங் கானலிற்புனலெனப்போமால்.

[வியாசர் சிந்தித்தல்.]

நிலவ ரைப்பினி லுறைபவர் நெஞ்சகந் தெளிய
பலவு ரைத்தனம புராணநூல் பாரதந் தெரித்தே
மலைவ றப்பழ மறைவகுத் துரைத்தன மென்னே
யிலகி யென்னுளந் தெளிவுறப் பெற்றில தின்னும். 13

---

‡ நவிலினு எனறும பாடமுண்டு.

[வியாசருக்கு நாரதர் கூறுதல்.]

விளக்கழற் கொழியா வெண்மதிக் ககலா விரிதி
ரைக் கருங்கடன் முகட்டின், முளைத்துயர் பசும்பொன்
வரைவலந் திரியு மோட்டுவெங் கதிரவற் கேகா, வுளத்
திருள் கடியு மாயவன் றொன்னூ லுரைமதி யென்று
பைந் தேறற், றுளககற வொழுகு மன்னபைந் தொ
டையாழ் முனிவரன் சொற்றன னகன்றான். 14

[சுகர் சரித்திரங் கூறல்.]

என்னலு முனிவர் சொல்வார் யாதினும் பற்றொ
ன் றின்றித், தன்னையே நோக்கி நின்ற தபோதனன்
றன்மை சாற்றி, னுன்னிய வையங் கொள்வா † னொரு
பசுப் பயங்கொள் காலந், துன்னுவன் மனைக ளன்றித்
தொன்னகர் மனையின் வைகான். 15

மத்தர்போன் மூக ரேபோல் வனைதுகி லின்றி ஞான
வித்தக னொருநாட் சென்றான் வியாதமா முனிபின் செ
வத்திசை யரம்பை மாத ரணிதுகி லின்றிக் கூலங் [ல்ல
‡ தத்துவெண் டாளஞ் சிந்துந் தடாநதி யாடி னாரே. 16

நீடிய நதியி லாடு நேரிழை யரம்பை மாதர்
யீடறி சுகனைக் கண்டு மென்றுகில் வனைந்தி லாராய்
நாடிநான் மறைகள் சொன்ன நற்றவ வியாதனைக்கண்
டோடினார்கரைசென் றுற்றா ருடுத்தனர் நாணித்தானை.

வரம்பிலா மறையை நான்கா வகுத்தவன் வனப்பு
வாய்ந்த, வரம்பையர் தம்மை நோக்கி யரைக்கொரு /
துகிலி லாதா, னிரம்பிய வறிவன் சென்று நீங்கின பின்

† னோர்பசுப் பீர்கொள் என்றும் பாடமுண்டு.

‡ தத்திவெண் என்றும் பாடமுண்டு.

னார் யாழி, னரம்பைவெல் சொல்லீர் சொல்லு நற்றுகி
லுடுத்த தென்றான். 18

ஏடலர் கூந்தன் மாத ரிசைத்தவம் முனியை நோக்கி
பாடவ ரிவர்கண் மற்ற வரிவைய ரிவர்க ளொன்று
நாடித னுனக்குண் டாத நற்றவன் றனகக தில்லைய
ரிசொல் முனிவ வென்றே பேசின ரகன்று போனார்.

[ஸ்ரீ விஷ்ணு மகாஸ்துதி.]

எழிற்படை யெடுக்கி லேனென் றிசைத்தநின்
மொழிவிட் டுன்னை, விழுப்படை யெடுப்பித் தன்றி
விடுகல னெனயான் சொன்ன, மொழித்திறம் பிழையா
வண்ண முறுகுவெஞ் சினத்த வாழி, யழற்படை யெ
டுத்தா யன்பர்க் களியைநீ பெரிது மன்றே. 20

சுரும்புசூழ் தொடையல் சோரச் சுரிகுழ லவிழ
மார்பின், விரிந்தபொன் னுத்த ரீயம் வீழ்ந்திட விரைந
து தேர்விட், டெரிந்தபொற் றிகிரி தாங்கி யெறுழ்வலி
மடங்க லேறு, †கருங்களிற் றேறல் போலென் கண்ணு
றல் கண்ண தாமால். 21

எழில்விளை யாடு மார்பத் தெழுதிய கலவைச் செ
ஞ்சே,றழிதரப் பொடித்த ‡வேர்மற் றுடலஞ் சிலைக்கை
ப பார்த்தன், கொழுமணிக் கொடிஞ்சித் திண்டேர் குர
கதத் தூளி மூழ்கி, யொழுகுசே றுக வோடி யுற்றதெ
ன் னுள்ளத் தாமால். 22

சோரிகணை மாரி பாய்ந்து துனிந்தபொற் கவசத் தூடு
மரகதக் காந்தி கான்று வயங்குநின் பசுந்தார் மார்புந்
துரகதத் தூளி சேர்ந்து குழல்விராய்க் குறுவேர்வார்ந்த
முருகவிழ் கமலச் செவ்வி முகமுமென் முகத்த தாமால்.

---

† கருங்களிற் றெதிரல் என்றும் பாடமுண்டு.

‡ வேர்மா றுடலஞ் என்றும் பாடமுண்டு.

நிறைவளந் திகழ்பூ மேவு நான்முகன் வழுத்த வொட்டாய், மறைவளந் திகழுஞ் செய்ய மாதவ ராரா ராய, நிறைவளந் திகழும் வேலை நெருங்கிய விரார ரூபந், திறைவளந் திகழ்முற் பூசைச் சேற்றனை யென் சொல் கேனே. 24

நச்சரா வுச்சி மேய கானிலப் பொறைதிப் பாவர் நிச்சையாஞ் சூடேதன் றோர்து †மிலங்கிய தழலைமூட்டிக் கசமார் களிற்று வேந்தர் கடுவன மெரித்த கன்று பச்சைமா லேயுன் மாயை பகருதற் கெளிதன் றாமால்.

கசசம் - யானைகழுத்திடு கயிறு.

மூட்டமார் களத்தி ¶னின்று மொழியுமென் றமனை யெல்லாம், விட்டில னெனமுன் சொன்ன விசயனு னிழுதை நீக்கி, நாட்டினை ஞான முன்னை நானுட லொழிக்கு மின்று, காட்டினை நினது கோலங் கடந்தனன் பிறவி வேலை. 26

இழுதை - அறிவின்மை.

அருங்கதி ரம்பொ ரூடை யணிந்துமுன் வந்த தோற்றம், பொருந்திய மாயை யான போர்வையாற் பொதியப் பட்டுத், திருந்துமே லோரால் வாசு தேவ னென் றுரைக்கும் பேர்பெற், றிருந்ததிவ் வண்ண மென்றே யெனக்கறி வித்த தாமால். 27

பொருந்திய - அகடித கடன சாமர்த்தியம் பூண்ட.

உண்மையா லுனக்கு நாடி லுருவிலை யுரைக்கிற் பொய்க்கும், பெண்மையா மாயை யாலே பெருகுதல் லுருவென் றுளுந், திண்மைசேர் நின்னை யன்றித் திகழ்

---

† மெரிசினத் என்றும் பாடமுண்டு.

¶ னேற்று மொய்த்தவென் என்றும் பாடமுண்டு.

சக மில்லை யானால், வண்மையால் வழுத்து வாரியார்
வழுத்திடப் படுவா ரியாரே. 28

என்றிருங் கங்கை மைந்த னியற்றிய தவத்தி னு
ண்முன், னின்றகார் வண்ணன் கோல நெஞ்சினிற் றெ
ரிய நாடி, பொன்றிய குடம்பை தன்னை யொழித்தெழு
பறவை போலே, யன்றுடற் சுமையை நீக்கி யழிவில்வீ
டடைந்தான் மன்னே. 29

[தருமர் கருத்தைக் கூறல்.]

மண்ணிய மணிமுடி மன்ன னைச்செருக்
கெண்ணிய விருப்பொடு மிசைந்த னானலன்
கண்ணனுட் கருத்தினைக் கடக்க வஞ்சியே
நண்ணின னரசிய னுமை வேலினன் 30

மண்ணிய - அலங்கரிக்கப்பட்ட.

[ஸ்ரீபகவானைக் கண்ணுற்றுப் பெண்கள்கூறல்.]

காட்டுவா ரணமுன் சொல்லக் காத்துவெங் கஞ்ச
ன் வாயிற், கோட்டுவா ரணத்தைக் கொன்ற குரிசிலை
வீதி நோக்கி, வேட்டுநாண் மலரின் மேவும் விரிஞ்ச
னுங் காணு வண்ணரு, சூட்டுநா கணையிற் றுஞ்சுந்
தோன்றலித் தோன்ற லென்பார். 31

குரிசில் - பெருமையிற் சிறந்தோன்.

கண்ணனைக் கண்கள் கண்டு களித்திடக் கருங்கார்
போலும், வண்ணனை மனங்க ணீங்கா வண்ணமாய்
மகிழ்த லாலே, நண்ணிய யோகத் தாலே கண்ணனை
நாடு வோர்க, ளெண்ணிலா நந்த மாகி யிருப்பதின்
றறிந்தோ மென்பார். 32

மண்ணவர்க் கனேகங் காலம் வைகுண்ட மருவி
னோருக், கெண்ணிடிற் கணமாம் போல வெங்களுக்

கனேகங் காலங், கண்ணனிற் கலந்து வைகிற் கணமரைக்
கணமென் றாலு, மண்ணினிற் பிரியி னென்னோ வாயிர
முகமா மன்றே. 33

[தருமர் திருதராட்டிரர் நீக்கத்திற்கிரங்க அதற்கு நாரதர் போதித்தல்.]

நிலையிலாச் செல்வமே நினைத்து மைந்தனைக்
கொலைபுரிந் தனனெனக் குறித்தென் பாவிநான்
கலிபுனற் கங்கையிற் கவிழ்ந்திட் டான்கொலோ
வலவனென் றன்னவன் வலவற் கண்டரோ. 34

கரமிலாப் பசுமுதற் சரங்கள் காலிலா
மரமெலா முதலதா வரங்க ளாய்வரும்
புரமெலா நின்றுயிர் போற்றி யூட்டிடும்
பரமெலாம் பூண்டவ னொருவன் பார்க்கிலே. 35

உடையவன் மூக்குறுங் கயிற்றி னுய்க்கிடில்
விடையவன் கைவழி மேவு மாறுபோ
னடைபெறு முயிர்களோர் நாத னாலென்றுற்
படியிசை யொருவருக் கொருவர் பற்றெவன். 36

[தருமர் துறந்து செல்லல்.]

நாக்கடை புரட்டுபைந் † நாகக் காடிய
கார்க்கடல் வண்ணனைக் கருத்து ணாடினன்
மாக்கடற் றானைதன் மருங்கு சூழ்வது
நோக்கிலன் வடதிசை நோக்கி யேகினான். 37

விரிதரு குஞ்சியன் விரித்து டுத்ததோர்
மரவுரி யுடையினன் மலர்ந்த காட்சிய
னுரையில னாணிகழ்ந் தொற்றை வெண்குடைத்
தருமனாங் கேகிய தன்மை யென்சொல்கேன். 38

† ணைத் தாடிய என்றும் பாடமுண்டு.

[பரிட்சித்திற்குத் தருமதேவதைகூறல்.]

எண்ணுமிவ் வினைகள் சில்லோ ரீசனு லியன்ற தென்பார், பண்ணிய கருமம் வந்து பலித்ததென் றுரைப்பார் சில்லோர், நண்ணிய நவக்கோ ளாலே நடந்த தென் றுரைப்பா ரெண்ணோர், றுண்ணிய வறிவோர் செய்யு மனனென நுவலு வாரே. 39

[பரிட்சித்தை ரிஷிபுத்திரன் சபித்ததற் கிரங்கல்.]

நிந்தனை புரியினு நின்று தைப்பினுஞ்
சிந்தனை வெகுண்டிடார் சேரு மாயனை
வந்தனை புரிபவ ரென்று மாமன
நொந்தன னுகியே நுவன்றிட் டானரோ. 40

[பரிட்சித்துச் சுகரைப்பார்த்து வினவுதல்.]

இறப்புவந் தெய்துழி யெண்ணி னைப்பது
திறப்படக் கேட்பதென் செப்பு கின்றதெ
னறத்துறை யறிந்தநீ யறைதி யென்றனன்
மறத்துறை கடிந்தவேன் மன்னர் மன்னனே. 41

## உ - வது ஸ்கந்தம்.

[அதற்குச் சுகர் உத்தரங் கூறல்.]

மன்னவ னவ்வா றுரைத்திடக் கேட்ட மறைமுனி சுகன்வருத் துரைப்பான், கன்னியுந் துளவப் பசுந் தொடை புனைந்த கரியவன் றிருவுரு நினைந்து, மன்னமாய்மறையன் றறைந்தவன் சரித மஞ்செவி மடுத்துமாயவன்பேர், பன்னியு மன்றிப் பழவினைத் தொடர்ச்சிப் பற்றினை யெறியவே றுளதோ. 42

வார்திரை புரட்டுந் தடங்கடற் பொடித்த மழக
திர் பொழிவெயிற் கற்றை, காரிருங் குன்றிற் றவழுமா
கடுப்பக் கண்கவர் கவுத்துவஞ் சொரிந்த,சீர்கெழுசெக்க
ரொளிபரந் திமைக்குந் திருமறு மார்பனை யுள்ளத்,
தோரிரு கன்ன லாயினு முணரி னுடைந்துவல் வினை
யிரு ளோடும். 43

கழிபுகழ் கட்டு வாங்கனென் றுரைப்போன் கட
வுளர் சொல்லினுள் ளாவி, யொழிவதற் கிரண்டு கன்
னலுண் டினியென் றுணர்ந்தன னனைத்துவிட்
டொருவி,யழலவிர் மணிச்சூட் டரவினின் றுடு மமலனை
நினைத்துவீ டுற்று, னெழுபகல் கிடந்த வுனக்குமற்
றெண்ணி லென்னைகொல் பெறுவதற் கரிதோ. 44

மனத்தினைக் கடந்து வாக்கினுக் கெட்டா மாட்
சிய தாகிமா மறையு, மினைத்தென வின்னுந் தெரிவ
தற் கரிதா யெங்குமா யமலமாய் நின்ற, தனிப்பெருஞ்
சுடரை நினைக்குமா றுனக்குச் சாற்றுவன் கேண்மதி
யென்று, வினைக்குறும் பெறிந்த வியர்தனீன் றெடுத்த
விழுத்தவன் விரிக்கலுற் றனனால். 45

[பகவானது ஸ்தூலரூப வர்ணநம்.]

அதலமே முதல சேவடி நடுவே யந்தர நாபியேழ்
பரவை, யுதரமீள் குடுமித் தடவரைக் குலமென் புயர்
மர மயிர்நதி நரம்பு, மதிமன முதுநல் லறமுலைக் கன
ல்வாய் மல்குநீர் நாவளி யுயிர்ப்புக், கதிருமிழ் பருதி
கண்மலர் படைப்புக் கருணையங் கடைப் பிறழ்வே.

கேழ்கிள ருடுவெண் பல்லிருங் கூற்றுக் கினைத்
தொளி தவழுகேட் டெயிறு, வாழிமா மாயை முகிழிள
முறுவன் மாதிரஞ் செவிமறை கிளவி, தாழ்தவ லோக
நெற்றிமே லுலகு தலைபுயல் சுரிகுழ லாக, வேழிரண்

டுலகு முருவமாய் நின்ற விறைவனைச் சிலர்நினைந் திருப்பார். 47

[பகவானது பிங்களரூப வர்ணநம்.]

கங்கைவார் கழலுங் கதிர்செய்பொற் கலையுங் கடகமு மகுடமுங் குழையுஞ், சங்கொடு திகிரி வெங்கதை தண்பூந் தாமரை மலரிவை தாங்கு, மங்கையோர் நான்குந் திருமறு மார்பு மருள்புரி கமலலோ சனமுந்,திங்கள்வாண் முகமு முறுவலு மாகச் சிலர்புயல் வண்ணனை நினைப்பார். 48

ஈங்கிதன் றீங்கி தன்றென் றெவையும்விட் டொருவி நின்ற,வாங்கது தானே தானென் றறிவினு லறிந்து தன்னை, நீங்கலா வுணர்வி னுலே நினைந்துகொண் டிருப்பா னண்ண,லோங்கிய பரமா நந்த வுருவினை நினைந்தா னுமால். 49

தழுவுறு கிளைஞர் தந்தை தாய்முத லெவரு நாளிற், கழிவது கண்டு கண்டுங் கண்டிலார் போல வாழ்வா,ரொழிவற வுள்ளத் துள்ளே யுறைபரஞ் சுடரையோரார், விழைவென நின்ற துன்ப வித்தினை விளைக்கின் றுரே. 50

விடங்கலு ழெயிற்றுப் பேழ்வாய் வெயின்மணிச் சூட்டு நாகப், படங்கெழு பரவை ஞாலப் பாயலொன் றுண்டு செய்ய, குடங்கைமெல் லணையுண் டெங்குங் குலவுவற் கலைக ளுண்டா, லடங்கலா வார்வ வேர்மற் றரிந்தவர்க் கிலதெ னம்மா. 51

பெற்றன வுவந்து மாந்திப் பிறந்தநல் லமுத மெல்லாம், பொற்றரு நீழல் வாழும் புலவர்கட் டுண்ணநல்குங், கொற்றவன் றன்னைச் செய்யாள் கொண்கனை யுலகங் காக்கு, மொற்றையந் திகிரி யானை யுளத்திலென் னுணர்கி லாரே. 52

திருந்தித் துறைக ளெல்லாந் தீம்புனல் வறந்த வேயோ, விரிகட லமுத மூறும் விழுச்சுவைக் கனிய வாய்த்த, மரமெலா மாண்ட வேயோ மாநிதிச் செருக் கினாற்கண், குருடெபட் டவர்பா லென்னோ குறையிரந் துழல்கின் றாரே. 53

[சவுனகாதி முனிவ ரன்புநிலை கூறல்.]

இறந்தொழிந் ததுவெங் கூற்ற மென்றுளத் துணர்ந்தார் போலு, மறந்தலை மணந்த செங்கோ லவர்பா ரோழுங் காப்ப, நறுந்துழாய்க் கொண்ட றாது நடந்த தாட் கமலப் போது, மறந்தனர் மாக்கள் வாளா வருபகல் கழிக்கின் றாரே. 54

மழைதுளி மறுத்த கானின் வற்றனீண் மரமு மந்தண், குழைதர லன்றிக் குன்றுங் குழைதர வமுத மூறுங், கழையிசை வடித்தான் செவ்வி காண்கிலாக் கண்கண் மஞ்ஞைத், தொழுதியங் கலாப மேய துஞ்சவில் வறுங்க ணன்றே. 55

காதமோர் நான்குந் தெய்வக் கடிகமழ் கமலை கொண்கன், பாததா மரையிற் சாத்தும் பசுந்துழாய் மோந்து மோந்து,தீதற வுயிர்த்தி லானேற் † செற்றவ னுயிர்ப்ப தெண்ணி, னூதுலைக் குருகு மற்றுங் குயிர்ப்பது போலு மாதோ. 56

குருகு - உலை மூக்கு.

இடிக்குர லியானை வெண்கோ டிறுத்தவன் மலர்ப் பொற் றாளிற், கடித்துணர் புனையாக் கைகள் கையறு கைக ளாமாற், பொடித்தசெங் கதிர்போற் காந்தி பொழிமணிச் சூட்ட ராவி, னடித்தவ னுமம் பாடா நாவழுங் காத நாவே. 57

† செத்தவ என்றும் பாடமுண்டு.

பனியிரு விசும்பு தேடப் பழமறை முடியி னின்ற
தனிமுத லடியிற் றுழாத் தலைதலை யென்ன லாகா
நினைதொறு மினிய வாய நெடியவன் சரிதங் கேட்டுக்
கனிவுறு வுளமி ரும்போ கற்களோ வறிகி லேமால். 58

தவப்பொழி மாரி காக்கத் தடவரைக் கவிகை யன்
று, கவித்தவன் கோயில் செல்லாக் கான்மரத் திய
ன்ற காலை, புவப்பிணி னமுத மூறி யொழுகுமால்
சரிதங் கேளாச், செவித்துளை நச்சு நாகஞ் செறிவ
தோர் துளைமற் றுமால். 59

# 3 - வது ஸ்கந்தம்.

[உத்தவர் விதுரனுக்குக் கூறல்.]

கடல்வரு மதியினைக் கண்டு கண்டுமீ
னிடைவரு செந்துவென் றெண்ணு மாறுபோ
னெடியனை நரனென நினைத்த தேயன்றி
யடிதொழ யாதவ ரறிந்தி லார்களே. 60

வெந்திறல் விதுர னென்போன் விளம்பிய வண்ணங்
கேளா, வந்தமி லாழி மாய னமர்ந்தவக் காலத் தென்
னைச், சிந்தையி னினைந்தவ் வாறு செப்பினு னென்று
லென்போ, லுய்ந்தவ ரில்லை யென்று னெனச்சுக னோதி
னனே. 61

[மயித்திரேயர் விதுரனுக்குப் போதித்தல்.]

கனவிற் கண்ட கடுஞ்செயல் பொய்ப்பதும்
புனல்வி காரம் புனன்மதிக் குற்றது

நினையிற் பொய்ப்பதும் போனிகழ் மாயைசேர்
வினைக ளொன்றும் விமலனுக் கில்லையால். 62

பற்றெ றிந்தவர் நாடும் பரமனுக்
குற்று நோக்கி லுருக்குண மில்லையென்
றற்ற நீங்கு மருந்தவன் சொற்றலும்
வெற்றி வேற்கை விதுரன் விளம்புவான். 63

[சனகாதியர் வைகுண்டத்திற் பகவானைத் தருசித்து வணங்கல்]

முழுதுணர் சனக ளாதி முனிவரர் நெஞ்சி னூடிப் பழமறை முடிவிற் கண்ட பசுந்துழா யலங்க லானை விழியெதிர் காண்ட லோடு மெய்ம்மயிர் சிலிர்ப்ப விம்முங், கழிபெரு மகிழ்ச்சி யெய்திக் கைதொழு திறைஞ் சினாரே. 64

கோண்டனின் கோல வண்ணங் குறித்துளத் துணைர் வினாலே, கண்டவர் பிறவி வேலைக் கரைநனி காண்ப ரென்று, ளுண்டுகொ லெதிர்கண் டோருக் கொருபிறப் பிருதாட் போதில், வண்டென மனஞ்சே ரன்பு வழங் கென வழுத்தி னாரே. 65

[கரித்தமர் ஸ்துதித்தல்.]

சீரிளம் பருதிசெம் முளரி சேர்ந்தென
வாரழ லாழியுந் † திலங்கு செங்கையாய்
கூருமன் பினர்மனங் குறித்த தல்லதா
யோருரு வுண்டுகொ லுனக்கு நாடிலே. 66

உமிழுநூல் சிலம்பியாங் குண்ணு மாறுபோ
லிமிழ்கட லுலகெலா மெழில்கொ ளுந்தியங்

† தலங்கு என்றும் பாடமுண்டு.

கமலநாண் மலரிடைக் காட்டி யுண்டனை
யமலநின் னிலைமையா ரறிய வல்லரோ. 67

[வினாவை முற்படுத்திக் கபிலர்
தாய்க் குபதேசித்தல்.]

அகங்குழைந் தன்னையு மாங்குக் கைதொழா
நுகர்ந்தன மீளவு நுகர்ந்து பல்பக
லிகழ்ந்தன னீறில்வீ டெய்து மாறினிப்
புகன்றருள் வாயெனப் புதல்வற் போற்றினாள்.

பார்முதிர் பனிக்கடல் பருகு நுண்டுளிக்
கார்முகி லெனத்திகழ் கபிலன் கட்கடை
யார்தரு மின்னரு ளலையெ றிந்திட
மூரல்வாண் முகத்தினன் மொழிதன் மேயினான்.

[கருமநாசத்திற்கு முக்கிய சாதனமும் பலமுங் கூறல்.]

பனிபடு திரையெழு பருதி கண்டுசூழ்
களியிரு ளிரிவது கடுப்பக் கட்டமை
வினையிரு ளிரிதர விளங்கு மென்னையே
நினைதரின் மேவுறு நிகரின் முத்தியே. 70

[இனிச் சோபானக் கிரமமாய்ச் சாதனம் பலன்களை
வகையாகத்தேடித் தெளிவித்தல்.]

கலைபயின் றுயிர்க்கெலாங் கருணை செய்துறை
யலகிலா வறிஞர்பா லன்பி னோடும்போய்க்
குலவுதன் முத்தியிற் குறுகக் கோதகன்
றிலகுநன் னெறியதா யினையு மென்பவே. 71

ஈசனும் வேறியங் குயிரும் வேறெனா
நேசமுற் றெனைநினைந் தவர்க்கு மீசற்கும்

பேசுபல் லுயிர்க்குமோர் பேத மில்லெனு
மாசிலா தவர்க்கும்வந் தொன்று முத்தியே. 72

தந்தைநற் றய்தம்பி தம்முன் றனென்று
மைந்தர்கண் முதலினோ ரென்றும் வைகுவேன்
சிந்துசெங் கதிர்ச்செழும் பொன்னிற் செய்தசீர்
நந்தலி லுதநற் பணிகள் போலவே. 73

என்னுருப் படிமிசை யினிது நாடுவோர்
துன்னிய செல்வங்க டெய்ப்பர் துய்த்தபின்
பன்னுவெங் கூற்றினற் பயமு றரவர்
மன்னுமென் பதத்தினை மருவு வார்களே. 74

கூரெயிற் றுடலங் கூற்றங் கொல்வதுங்
கார்மழை பொழிவதுங் கதிரெ றிப்பது
மாருத முளர்வதும் வாரி நிற்பது
மாரழல் சுடலுமென் னுணை யாகுமால். 75

எத்திறத் தாயினு மென்னை யேமனம்
வைத்திடில் வல்வினை நடப்ப மாறிலா
முத்திவந் தெய்துமான் முறையிற் றோன்றிய
தத்துவந் தெரியினுஞ் சாரு முத்தியே. 76

என்னலுந் தத்துவ மியம்ப வேண்டுமென்
றன்னமேர் மென்னடை யன்னை கூறலும்
பன்னுவன் கேளெனப் பகர்தன் மேயினன்
கன்னியர் துளவணிக் கபில னென்பவே. 77

ஒலிமுத லாய வைந்து மோங்கிய பூத மைந்து
மலியுமிந் தியங்கள் பத்து மனமுத லுன்கு மாக
நலமிகு நாலா றுகு நவையறு ஞானத் தோடு
மிலகிய தத்து வங்க ளிமைந்திடு மையைந் தென்றே. 78

உடம்பெனப் படுவ தம்ம வொன்றினுக் கொன்று தோன்றி, மிடைந்திடு தத்து வத்தின் கூட்டத்தால் விளைந்த தாகு, மடைந்ததத் துவங்க ளெல்லா மன்றியே நிற்ப தேது, தொடர்ந்தமற் றதனைத் தானே யுயிரெனத் துணிவர் மாதோ. 79

பொய்வகை யாக மாயைப் புணர்ப்பினுற் பட்ட தன்றி, மெய்வகை தெரிய நாடின் மேவுறு குணனுமில்லை, செப்பின் யிரண்டு மில்லை செலவில்லை வரவுமில்லை, யுய்வதோ ருணர்வாய் நின்ற வுள்ளுயிர் தனக்கு மாதோ. ௮0

புனலுறு நடுக்கந் தன்னைப் புனலிடைத் தோன்றுகின்ற, பனிமதி மேல தாக்கிப் பகர்வதோர் பான்மை போல, மனமுத லாகி நின்ற மாட்சிசால் கரணத் துற்ற, வினையினை யுயிர்மேல் வைத்து விளம்புவர் புனைந்து மன்னே. 81

உரைத்திடு கனவு போல வுபாதிபொய் யாகு மென்றும், விரித்தமுன் றவத்தை யுள்ளும் விளங்குவன் புருட னென்றும், திருத்திய வறிவி னாலே தேர்ந்து கொண் டிருப்பான் முத்தி, தரித்திடு மும்மை யான தனுவொழித் தடைவ னென்றான். 82

உண்மெனகிழ்ந் துருக விவ்வா றுரைத்தது கேட்ட வன்னை, மண்ணினின் மணமு நீரின் மருவிய சுவையும் போல, நண்ணிய மாயை யோடே நனிகலந் தோனைத் தேர்ந்திங், கெண்ணுவ தெங்ஙன் மாயை யெவ்வகை நீங்கு மென்றாள். 83

[இரண்டு கேள்விக்கும் உபாய பூர்வகமாக
7 செய்யுட்களால் சமாதானங் கூறல்.]

என்றலுங் கபிலன் சொல்வா னியாதினும் பற்று நீத்து, நின்றபா தவத்தி னோர்பா னீங்கலா துறைந் தென் சித்தி, நன்றவர் மொழிதல் கேட்டா னவிற்ற ரும் பத்தி யோக, மொன்றிடு மொன்றுங் காலத் தூற் றிடு ஞான மாதோ. 84

அரணியி லனல்வந் துற்றவ் வரணியை யழிப்ப தென்னக், கருதிய ஞானம் வந்து கலந்துறு முபாதி நீக்கும், புரிதுயி னீத்தோன் றன்பாற் பொருந்திடாக் கனவு போற்பின், னுரைசெயு மாயை சேரா துண்மை யை யறிய லாமே. 85

விழுச்சிறப் புடைய வூழின் விளைவதை யறிய மாட்டா, னழித்திடு மாசைப் பல்வத் தளறெழ விழுந்து மூழ்கி, யிழைத்தனன் யானே யென்ன வெண்ணிய திறத்தி னாலே, தழைத்திடும் வினைக ளெல்லாந் தன்னை வந் தடையா நிற்கும். 86

அந்தர மீது காற்று லருங்கதி யடையா நின்ற, கந் தரங் காற்றி னாலிக் கதியெனக் கருதா தேபோ, லிந்தி ரன் வேத னாதி யிமையவ ராலும் வெல்லா, வெந்திறற் காலந் தன்னால் விளைந்தன வினையென் றோரான். 87
கந்தரம் - மேகம்.

இருவினைக் குறும்பு தீர்ப்பா னெனதுநா னவிற் றல் வேண்டும், வருபவந் துறுமென் றெண்ணி வைகி ட வேண்டும் பெற்ற, வொருவல னுவப்ப வேண்டு மு யிர்க்கெலா மிரங்கல் வேண்டுந், தருமவீ கானந் தன் னிற் றனித்தினி துறைய வேண்டும். 88

கலைமதி முகமுஞ் செய்ய கமலலோ சனமுங் காம
ன், சிலைபொரு நுதலுஞ் செக்கச் சிவந்தொளிர் பவள
வாயு, மலர்துழா யலங்கன் மார்பும் வலம்புரி பொறித்
த கையு, மிலகுபொற் றுகிலு மாக வென்னுரு நினைதல்
வேண்டும். ௯9

இழைத்திட வேண்டு மிபோக மியோகநன் கிழை
த்தா னாகிற், பழுத்திடத் தழலிற் சுட்ட பசுஞ்சுடர்க்
கனகம் போலத், தழைத்தெழு கின்ற வுள்ளந் தன்
னுழைப் பற்றி நின்ற, வழுக்கறு மந்தக் காலத் தம
லனை யறிய லாகும். 90

[அந்த ஞான மகமாயினும் உபாதி தார தம்மியத்தால்
பேதமாய் அவ்வுபாதியிலு மதிசயமுற்றமைகூறல்.]

புல்லெலாம் பாதி யாய புகல்சரா சரங்க ளெல்லா
ஞ், சொல்லிடி லொன்றுக் கொன்று துலங்கதி சயித்த
வாகு, மெல்லையி லவைக டம்மி னிலங்கதி சயித்த னு
வா, னல்லநற் பொருள்க டேர்ந்து ஞானமிக் குயர்ந்
து ளோனே. 91

[24 செய்யுட்களால் சித்தத்தில் விரத்தி யுண்டாகத்தக்க
வுபாய வகைகளை விஸ்தரித்துக் காட்டல்.]

தன்னைத்தா னறியா னாகிற் றலைத்தலை துன்பஞ்
சாரா, மின்னெனத் தோன்றி வீயு மாக்கைகள் பலவு
மேவு, மென்னதோ ராக்கை தன்னை யெடுப்பினு
மெடுத்து நின்ற, வன்னதோ ராக்கை நீங்க வாற்றலு
றுனை கூறும். 92

தலைத்தலை-எவ்விடங்களிலும்.

விழைவெ னப்படு கின்றது மென்மெல
வழல்வி ரிந்த கனகத் தரும்பிமென்
மழலை மாதர் மருங்கிற் படர்ந்துபைங்
குழவி மீது கொழுந்துவிட் டோங்குமால். 93

விரிதல்-ஒளியுடைமை.

குழனை நைத்திடக் கோத்தமுத் தாமென
வெழில்ப டைத்த வெயிற்றிடை வீழ்தரப்
பழிப டைத்துட னுளிற் பழுக்கவும்
விழைவி னுக்கு விளையு மிளமையே. 94

உழுது பல்வள முய்த்த மழவிடை
கிழவு பட்டிடிற் போற்றல் கெழீஇயதே
விழுமெய் யாங்கு முதிர்ந்திடில் வேட்டதன்
மழலை மாதரு மைந்தரும் போற்றிலார். 95

இம்பர் வாழ்வுழி யீறில தாகிய
வும்பர் வாழ்வதற் கொன்று மியற்றில
னெம்பொ றிக்கிரை தேடி யலம்வந்து
வெம்பு கின்ற வெறிவிருந் தாவனல். 96

தீக்கண் சிந்திடச் சீறி யமபடர்
வீக்க வந்து விழியெதிர்ப் பட்டிடி
லாக்கை சோர்தர வாங்குப் படுந்துயர்
வாக்கி லெங்ஙன் வகுத்து மொழிவதே. 97

எண்ணி லியோசனை யெண்பத்தா றாயிர
நண்ணு கின்ற வருநெறி நஞ்சுகால்
கண்ண ராய்க்குலங் கவ்வி யுடற்றசை
யுண்ணச் செல்வுழி யூறுமற் றென்சொல்கேன்.

தாவல்-கக்கல்,

பாறு கோடி படரக் குருதிநீ
ரூறு கின்றதன் னூனரிந் துண்டுபோ
யாறு கன்னலிற் செல்லு மழலெனச்
சீறு கூற்ற முறைகின்ற தென்புலம். 99

சீந்து கின்ற தெறுசினப் பாழிவாய்ப்
பாந்த ளன்னவர் பற்றி யலைத்திடக்
காந்து தீநர காழ்ந்து கழிந்தபின்
மாந்தர் மீளவும் வந்து பிறப்பரால். 100

சீந்துகின்ற - மூக்காற்சீறுகின்ற.

ஒளிகொ ணித்தில மொண்பவ ளச்செறு
விளைய வித்திய தென்னநல் வீரியந்
தளர்நி றத்தெழு தாய்கரு விற்பனித்
துளியிற் சென்று பொருந்தித் துலங்குறும். 101

செறு-வயல். எழு-கிளரும்.

ஒரு மைந்து பகலி னுடைதிரை
நீரின் வந்தெழு மொக்கு ணிகர்த்திடு
மேரு லாய்வளர்ந் தீரைந்து வைகலி
லாருந் தூநிற வண்டம் பொருவுமால். 102

ஒன்று திங்களி னுற்றிடும் புன்றலை
சென்ற திங்க ளிரண்டினிற் றெண்டிரை
துன்று கின்ற சுடர்ப்பவ ளக்கிளை
வென்ற செங்கையுங் கால்களு மேவுறும். 103

மயிர்ந கங்கண் டரீ இத்திங்கண் மூன்றினிற்
செயிரில் கண்செவி மூக்குச் செறிந்திடு

மியலி னூற்றிடு மீரிரு திங்களிற்
பயிலப் பெற்றிடும் பல்வகைத் தாதுமே. 104

தாது-இரசம். இரத்தம், எலும்பு, சுக்கிலம், தசை, தோல், மூளை என்னும் சப்ததாது.

அஞ்செ னப்படு திங்க ளடைந்துழித்
துஞ்ச லின்றிச் சுடுபசி தோன்றுறு
மெஞ்ச லின்றி யியன்மதி யாறினிற்
பஞ்சு போலுமே மார் பையி னகப்படும். 105

துஞ்சலின்றி - உயிர்த்து.

திங்க ளேழி லறிவு சிறந்தெழத்
தங்கு தொல்லைப் பிறவிக டானறிந்
திங்கு தோன்று மிடரினித் தீர்கெனு
வங்கை கூப்பி யமலனை யேத்துமால். 106

குவிந்தி ருந்த மலத்திற் குளித்தெழாத்
தவழ்ந்து பல்புழுத் தன்னை யரித்திடக்
கவிழ்ந்து சென்னிக் கிடப்பக் கவைவளைத்
தவிழ்ந்த பைங்குட ரார்த்திட வார்ப்புறும். 107

கவை - கவர். வளைத்தவிழ்ந்த - சூழ்ந்தவிரிந்த.

காய்த லூற்ற கரிப்பிற் புளிப்பினின்
மேய தாய வுவர்ப்பின் மெலிவுறு
மேயுந் தாய்பசித் தீயி னெரிந்திடுந்
தாய ருந்துதல் கொண்டு தளிர்ப்புறும். 108

காய்தல் - எரிச்சல். கரிப்பு - உறைப்பு.

உற்ற திங்க ளொருபது சென்றிடின்
மற்றோர் மாருதம் வந்து தலைப்படாச்

சுற்றிச் சென்னிகீ ழாக்கிடத் தோன்றுமா
லற்றைத் துன்ப மறையப் படுவதோ. 109

தோற்றஞ் செய்துழித் தொன்னில மீதுளார்
காற்றுப் பட்டுக் கருவினிற் றோன்றிய
மாற்றி லாத மதிமறைந் தோவற
வாற்றல் யாவது மின்றிக் கிடந்தழும். 110

அறப்பெ ருமுன் னருத்த வருந்துழித்
துறப்ப வாடித் துயர்வுறு மூர்வன
பறப்ப வற்றிற் படருறு மென்மெல
வுறப்பெ றுதன வுள்ளிக் கலுழ்ந்திடும். 111

ஆண்டு பத்துட னைந்து கழிந்திடக்
காண்ட குந்திறற் காளை யெனப்படா
மாண்ட நல்லெழின் மாதர் மணிவடம்
பூண்டு விம்மும் புணர்முலை காமுறும். 112

அம்பொற் றாதுகோ தஞ்சிறை வண்டிமிர்
வம்பு லாங்குழன் மாத ரெனப்படும்
பைம்புன் மூடிய பாழ்படு கூவலி
னம்பி வீழு முலகு நகைக்கவே. 113

தாது - பூந்தாது. இமிர்தல் - மொய்த்தல்.

வேதன் பெற்றதன் பெண்ணை விரும்பவப்
பேதை மானுருக் கொண்டு பெயர்ந்திடக்
காதல் கூர்கலை யாய்த்தொடர்ந் தானென்றான்
மாத ராசை மறுப்பவர் யாவரே. 114

பிரமா மரீசியாதி, கசியபாதி, தேவதா மநுஷ்யாதிகளில் அகண்டித புத்தியுடையோர் யாவர் என்பது.

பாற்க டற்றலைப் பட்ட கொடுவிடந்
தோற்க வெங்கொலை சூழ்ந்து குழைபொரும்
வேற்க ணார்வினை யாட்டு விலங்கினைப்
போற்கு வாய்முது மூப்புறப் பொன்றுமால். 115

குவாய்முது - மிகவுமுதிர்ந்த.

[ஆயின், இதற்கு விமோசனமில்லையோ வெனின்.]

பிறந்தி றந்து படுகின்ற பேரிடர்
சிறந்த சங்கொடு பங்கய ரேகைசேர்
நறுந்து ழாய்புனை நம்பன் மலரடி
மறந்தி டாது மனக்கொளிற் றீருமே. 116

[உபாசிக்கத்தக்க தின்னதேனக்
காரணகாரிய விபாகஞ் செய்து காண்பிப்பதற்காக
அத்திருவடி மகிமை கூறல்]

புவிய ளந்தவன் பொன்னடித் தாமரை
தவழுங் கங்கையந் தண்புனல் பொன்னென
வவிர்ச டாமுடி மீதுவைத் தன்றுகொல்
சிவனு மோர்சிவ னாகித் திகழ்ந்தனன். 117

ஆய்ந்து வேள்வி யரிறப வாற்றிடி
மேலந்து கொங்கைய ரம்பைய ரின்னகை
மாந்தி யின்புற்று வைகிய தன்பயன்
வீய்ந்த காலையில் விண்வழுக் குற்றிடும். 118

கற்ப மொன்று கழியக் கழிந்திடும்
பொற்பு வாய்ந்தபொன் னாடுபொற் றாமரை
கற்பெ ருந்தவ னாடுநில் லாதென்று
ற்ப தாழியா னீள்பத மொன்றுமே. 119

விளைவ தோர்பயன் வெஃகலன் மாயவற்
களியி னல்கி யருந்தவ மாற்றிடிற்
கிளருஞ் செங்கதிர் மண்டலங் கீண்டுபோ
யொளிது ளும்பு முயருல கெய்துமால். 120

வெஃகலன் - விரும்பாதவனாய்.

காதல் விட்டுக் கருதி யபேதமா
யேத நீங்கின ரெய்துவர் முத்தியிற்
பேத மாகு முபாசனை பெற்றிடின்
வேத னாயினு மீளவுந் தோற்றுவான். 121

ஆவி வேறெனப் பேதம டைந்திடுந்
தேவர் மாதவர் சேர்சன காதியர்
பூவி னானொடும் போயடைந் தன்னவன்
மேவு நான்றிவண் மீளவுந் தோற்றுவார். 122

மலத்தி னிற்புழுப் போல்வனை யாழிசூழ்
நிலத்து தித்து நிரய முறுந்தொழி
னலத்த தாமென நண்ணுவர் ஞானமா
முலப்பி லுண்மையை யோர்ந்தறி யார்களே. 123

சூட்டு நாகஞ் சுமந்த நிலத்தவர்
வேட்ட வாறு நடக்க விளங்கிழாய்
பாட்டு வண்டிமிர் பைந்துள வோன்பத
நாட்ட முற்றுநீ நற்றவஞ் செய்தியால். 124

மோக நீங்கி முயன்றிடின் மாதவ
மாக மொன்றுத லின்றி யபேதமாய்
மாக நாடர் வழுத்த வருஞ்சித்தோ
டேக மாகி யிமைகுவை நீயென்றான். 125

என்று கூறலு மேரிள முல்லையை
வென்ற மென்னகை மெல்லிய றன்னுள

நன்று தேறி நலங்கொ ளமுதினைக்
கொன்ற தீஞ்சொற் குமரனை யேத்தினாள். 126

வந்துசெம் பவள நீல மால்கடற் கிளைத்த தேப்
பச், சிந்துமொண் சுடர வாசித் திசைதிசை விரிந்த
செங்கோட், டுந்தியங் கமலப் போதி லுதித்துல கனை
த்து மீன்றான், றந்தைநீ யுன்னை மற்றோர் தனையனென்
றுரைக்க லாமே. 127

மின்வயிற் பிறந்த சோதி வெருவர வெயில்சூழ்
கின்ற, பொன்வயிற் பிறந்த காந்தி பொழிந்தசெங் கம
லை கேள்வ, வுன்வயிற் றோர்பா லெல்லா வுலகமு மிருக்
க நீவந்,தென்வயிற் றிருந்தா யென்ன வேழையே னெ
ண்ண லாமே. 128

பொலன்முக டுடையக் கோத்த புனைநெடுங் கடவி
லாலி, னிலைமிசைக் கங்கை வெள்ள மெடுத்துவார்ந்
தொழுகும் பொற்றாண், மலரடிக் கமலம் பற்றி மணி
நகைத் துவர்வாய் வைத்துக், குலவுபைங் குழவி நீ
யென் குழவியா யிருக்க லாமே. 129

பொலன்-பொன்.

முனைத்தனை யுலகுக் கெல்லா முன்னநீ யுனக்கு
ஞாலம், விளைத்தலுங் காத்த றானு மழித்தலும் விளை
யாட் டாமா, 'லளிக்கட னினது தன்மை யறிகுந ரியா
ரே யென்ன, வளைத்தளிர்ச் செங்கை கூப்பி வாணுதல்
வழுத்தி னாளே. 130

பவளவுத் தரத்த வாகப் பானிலா முத்திற் செய்த,
தவளமா ளிகையின் றோங்கித் தடங்கிய மனையு நெஞ்
சங், கவர்தரு கடவுட் செம்பொன் விமானமுங் கமழ்

பூங் காவுந், துவரவிட் டொழிந்து தண்ணார் துறைநதி யொன்று சேர்ந்தாள். 131

மின்றிகழ் பசும்பொன் ஞாரம் வெண்டுகின் மாலை சாந்தம், குன்றெனக் குவிந்த கோலக் குலமணி யிவைக ளோடாள், கன்றுதேர் கறவை யென்னக் கபிலன்மேல் வைத்த காத, லொன்றுமாங் ககன்றி லாளவ் வோடரித் தடங்க ணாளே. 132

மாவுரி யுடைய ளாகி வார்ந்துநெய்த் திரண்ட மன்றற், புரிகுழற் சடைய தாகப் புகரறத் தவநன் காற்றிப், பரனடிக் கமலஞ் சேர்ந்தாள் பனிமொழிப் பவளச் செவ்வாய்த், தெரிவைநல் லாக்கை தெய்வத் திருநதி யாகிற் றன்றே. 133

[தேவஹூதி விருத்தாந்தத்தைச் சொல்லி முடித்தவிதம் கபிலர் விருத்தாந்தத்தையுஞ் சொல்லி முடித்தல்.]

அடலுடை யிலங்கை வேந்த னசைத்தன னெடுத்த காலை, விடுசுட ரொழுகும் வெள்ளி வெண்டிரள் வீழ்ந்த தென்னச், சுடர்மணி யருவிக் குன்றந் தோன்றிய திசையில் வீங்கும், கடலிடங் கொடுப்பச் சென்று கபிலன்வீற் றிருக்கின் றானே. 134

மணி-முத்து.

[இந்நூல் மகிமை தோன்றப் பலன் கூறல்.]

இல்லையே மறுமை யென்போ ரறிவில ரிவர்கட் கிந்நூல், சொல்லுத லாகா துள்ளந் தூயவர்க் கியம்பல் வேண்டு, நல்லுணர் வோடுங் கேட்டோர் நண்ணுவர் துறக்க மென்று, வொல்லையிற் கூறி மீட்டு முரைத்தனன் மயித்தி ரேயன். 135

## 4 - வது ஸ்கந்தம்.

[துருவனுக்குத் தாய் கூறல்.]

பனிமல ரண்ணை லோங்கும் பதத்தினை யடைந்த வாறு, மனுமிகச் சிறந்த வாறு மாயனைக் கருதி யன்றே, தனயநீ கங்கை பூத்த தாமரைத் தாளி னானை, நினையி லென் னெய்தா தென்ன நெஞ்சகந் தெருட்டி னாளே.

[தாய்வார்த்தையின் பரிபாலனார்த்தம் வெளிப்பட்ட துருவனுக்கு நாரதர் கூறல்.]

தாழ்பவர் தம்மைக் கண்டு தலையெடுத் திருத்தல் வேண்டு,மூழ்வினை வினைவி னாலே யுயர்ந்தவர் தம்மைக் கண்டு,வாழ்கல மியாமு மென்று வலித்தலோர் மாட்சி யன்று, லேழுயர் களிநல் லியானை யின்னிளங் குழவி போல்வாய். 137

வலித்தல்-ஏங்கல்.

[நாரதரால் உறுதிப்படுத்தப்பட்ட துருவன் பகவானைக்கண்டு துதித்தல்.]

தாமரைப் பொகுட்டு வாழுந் தடஞ்சிறை யன்ன மன்ன, தாமரைத் தலைவி கொண்க தரைமகள் கொழுந வுந்தித், தாமரைப் பெற்றெடுத்த தனிமுத லுனது செங்கட், டாமரை யருள்பெற் றன்றோ தந்தன னுலகந் தானே. 138

தண்டுழாய் மாலை மார்ப தாமரைக் காடு பூத்த கொண்டலே விளங்கு நீலக் குன்றமே யுனது பாதப் புண்டரீ கங்க ளல்லாற் போது தா விறைஞ்சப் பெற்றாற் குண்டுகொ லுயர்வீட் டின்ப முதவுவ தொன்று தானே.

பொற்றபூந் தருவைக் கண்டும் பொற்பில தொன்று வேட்டுப், பெற்றதே போலு மன்றே பெறலரு முத்தி நல்கு, மொற்றையந் திகிரிச் செங்கை யொருமுத னின்னைக் கண்டு, மற்றொரு பொருளை வேட்டுப் பெறுவது மதிக்குங் காலே. 140

மூவா முதலே முத்தொழிலு மூவ ராகி யினிதியற்றுந், தேவா தேவர் சிகாமணியே சிந்தா மணியே தெள்ளமுதே, நாவா லுன்சீ ரெவ்வாறு நவில்வே னென்ன நகைமுகிழ்த்துப், பூவாற் பொழில்பூத் தருளுந்திப் பூவை வண்ணன் புகல்கிற்பான். 141

பொழில்-உலகப்பொது.

[துருவன் பகவான் புகன்றருளிய வரத்தைப் பெற்று மீளல்.]

நஞ்சு குழிமி யெழும்வேற்க ணங்கை யுரைத்த வுரைகிடந்து, நெஞ்சு சுடநீள் பதம்வேட்டு நின்றே நெகிழ்ந்த தாமரைக்கண், மஞ்சைக் கண்டுங் கேட்டிலமான் முத்தி யென்று மகிழ்கூரான், றுஞ்ச லில்லாச் சுடர்மணிப்பூண் டொடிக்கைத் துருவ னகர்சார்ந்தான்

குழுமி-கூடி. தொடி-கங்கணம்.

[பிருதுமன்னனுக்குச் சநகாதியர் போதித்தல்.]

பொறிகளை யடக்கித் தன்னைப் புலப்பட வறிந்தானாயி, னுறுதுயிற் கனவு தன்னி னுற்றிடும் படைகளெல்லாஞ், செறிதுயி னீங்கிற் பொய்யாந் திகழ்பவனொருவன் றன்போ, னெறியுறு முபாதி நீங்கு நிறைந்ததோ ரறிவாய் நிற்பான். 143

படை-போர்ப்படை.

ஐயதா மறிவோ டிவ்வா றமர்வதற் கெளிதா மேது
மையுறு மாலை வந்து மயக்குமோ ரரவு போலும்
பொய்யுமாய் மெய்யு மாகிப் பொலிதரு மாயன் முளாஞ்
செய்யதா மரையிலன்பு செய்வதென் றுரைசெய் வாரே.

உரவுநீ ருலக மெல்லா முண்டொளி கிளைக்குஞ் செஞ்சூட், டரவணைத் துயிலு மண்ணலடிப்புணை பற்றி யன்றிக், கரையழி பிறவி வேலை கடப்பரி தென்று கூறி, மருவிரி தெரியன் மன்னன் மனந்தெளிந் தேகி னானே. 145

உரவுநீர்-உவர்நீர் (கடல்).

[பிராசீன மன்னனுக்கு நாரதர் போதித்தல்.]

ஆற்றிய வாக்கை வீயு மாயினு மதனு ணின்று, தோற்றிய லிங்க மென்று சொல்லுமத் தனுவி யாதான், மாற்றருங் கரும மெல்லா மனச்செய லாத லாலே, யேற்றிடு மின்ப துன்ப மிலிங்கமற் றனுவுக் காமே. 146

§ அமைதனி னமைந்து நின்ற வணிமதி போல வென்றுஞ், சுமையுறு தூல மென்னத் தோன்றிய வுட லினின்று, மிமையவ ராலும் வெல்லா திலங்குறு மிலி ங்க மென்னச், சமைவுறு தனுவின் றன்மை சாற்றுவன் கேட்டி வேந்தே. 147

§ அமைதனின் மறைந்து என்றும் பாடமுண்டு.

ஐவகை வாயு வீரைந் தாகிய புலன்கள் புந்தி, மை வகை யையஞ் சேரு மனத்தொடு மருவி லிங்க, மெய் வகை பதினே ழாகும் விளங்கிய தனுவின் செய்கை,

பொய்வகை யாகுஞ் சீவன் பொருந்தினன் போலு மாதோ. 148

மனத்தினுக் குற்ற செய்கை சீவனை மருவி நிற்றல், நனத்துறு கதியவ் வானிற் கதிர்மதிக் கணுகல் போலும், புனத்துறு சலூக மென்னப் பொருந்திய லிங்கம் வேறோர், நினைத்துறு மாக்கை பற்றி நீங்கிடு நின்ற வாக்கை. 149

புனற்றுறு என்பது அடிநோக்கிப் புனத்துறு எனநின்றது சலூகம்-அட்டை.

ஆதலா லாக்கை சேரா தறிகொடு பொருந்த வெண்ணிற், கோதுறு மிலிங்க மென்று கூறுடன் மாய்க்க வேண்டு, மோதுடல் பெய்யென் றுலு முறுமுணர் வின்றி நீங்கு, மேதமின் ஞானம் வந்துற் றிலங்குமந் நாளின் மாதோ. 150

அயர்தரு வேள்வி யின்ப மழிந்திடு மதனை வெஃகல், புயலுறழ் மேனி நம்பன் பொன்னடிக் கமலம் போற்றி, யுயர்வற வுயர்வீட் டின்பம் பெறுதிநன் றுணர்ந்தோ யென்னுப், பயிலுறு திவ்ய நல்லியாழ்ப் பண்ணவன் போயி னானே. 151

பண்ணவ னகல வொன்றும் பற்றில னாகிச் செங்கட், கண்ணனை யுளத்து ளுடிக் கபிலர திருக்கை சார்ந்து, விண்ணவர் வழுத்தும் வண்ணம் விழுத்தவம் பலவு மாற்றி, யண்ணலந் தனிவீட் டின்ப மடைந்தன னரசர் கோமான். 152

[பிரசேதசாக்கியர் பதின்மருக்கு நாரதர் உபதேசம்.]

இல்லறஞ் சிலபக லியற்றி வைகலாற்

றெல்லைநல் லறிவெலாந் தோற்று விட்டனம்

வல்லிதின் முத்திசேர் வழியு ரைக்கெனா
நல்லிசை நாரத னண்ணைக் கூறினான். 153

கார்முகில் வண்ணனைக் கருதி லார்களை
யோரிரு காற்பசு வென்ன வோதுவார்
கூறுமன் பினர்கடா மென்று கோதிலா
நாரத மாமுனி நவிற்று வானரோ. 154

விரிதரு தண்புனல் வேரிற் பெய்திடின்
மரமெலாந் தழையுமா போல மாறிலா
முருகுலாந் தண்டுழாய் முதல்வற் போற்றிடி
னாரவுநீ ருலகெலா முவக்கு மென்பவே. 155

வெய்யவன் கதிரினான் மேவுந் தண்புனல்
செய்யவக் கதிரினாற் சேரு நாசம்போற்
கையுறு முலகெலாங் கருணை மாலுழைப்
பொய்யெனத் தோன்றியும் பொருந்து நாசமே. 156

கந்தரம் வான்மிசைக் கவின வொல்லையில்
வந்தின் மறைவது போல மாலுழைச்
சுந்தர வுலகெலாந் தோற்றி நின்றபின்
னந்தமு மவனுழை யடையு மென்பவே. 15

பாடுமின் பசுந்துழாய்க் கொண்டல் பல்புகழ்
சூடுமின் மாயவன் றூய தாண்மலர்
நாடுமி னாகணை யானை நன்றெனப்
பீடுசால் நாரதன் பெயர்ந்து போயினான். 158

# 5 - வது ஸ்கந்தம்.

[பிரியவிரதராஜனுக்குப் பிரமாவுபதேசம்.]

எண்ணுறு காம முதற்பகை யடக்கா திருள்படு கானகத் தேகி, நண்ணினு மாயை வலியினைக் கடவார் நவிற்றிய பகைவெறுத் தறிந்தோர், மண்ணகம் புரந்து மகவொடு மகிழ்ந்து வைகினு மாயையை மருவார், பண்ணுறுங் கருமங் கனவெனப் பார்த்துப் பார்புரந் தருளெனப் பணித்தான். 159

[சடபரதர் சரித்திரம்.]

வரதன் மாயன் மலரடிக் கன்புசெய்
பரதன் செய்திறம் பன்னுதி நீயென
விரத மேவிய வேந்துரை செய்தலுஞ்
சரத மாதவத் தோனது சாற்றுவான். 160

பந்த ‡ நீங்கும் பரதன் பருப்பதத்
தெந்த வண்ணமா லெய்த நினைக்கினு
மந்த வண்ணமா லாங்குற வன்புசெய்
புந்தி யான்புல கன்னுழைப் போயினான். 161

‡ நீக்கும் என்றும் பாடமுண்டு,

புக்கு றைந்து பொருவரு மாதவ
மிக்கி யற்றிவீ டெய்துற வைகுநா
டக்க யோகத்தின் றன்மை யழிந்திட்
வக்க ணுற்ற தறைவனென் றோதுவான். 162

கோண்டவிற் பிளிறு மியானைக் கூர்நுதி மருப்பிற் றோன்றி, வண்டொடு சுரும்பு மூச மன்றலம் பொதி

வாய் விண்டு, கண்டனுண் மடற்றேன் சிந்துங் கண்டகி யென்னு மாற்றுத்,தண்டுறை யொழுகு நன்னீ ராடுவான் றலைச்சென் றானே. 163

நுதி - முனை, வண்டு - பெண்வண்டு, மூச-மொய்ப்ப, பொதி - நெருங்கிய.

நிறையுளை யரிமா னேறு நிழல்சுளிக் களிறு நாடி யுருமென வுரறி யார்க்கு மொலிசெவி படுதற் கஞ்சிக் கருநனி கலங்கி யங்கட் கவையடி யினமா னீன்ற வொருபசுங் கன்று நீரோ டொழுகியாங் குற்றதன்றே.

உரறி - சினந்து.

கைம்முகர் தெடுத்து மென்மான் கன்றுயர் கரையி னுய்த்து, மெய்ம்முகந் தெளிந்த தூயோன் விரிபுன னெறியி னாடி,நெய்ம்முகங் கமழுஞ் சூலநிழற்படையண்ணல் போல, வம்மறி யேந்தி யேகி யன்பொடும் வளர்த்திட் டானே. 165

குன்றின்வா னருவி வீழ்ந்து குழித்திடு மறையிலாமா, கன்றுள்ளிப் பொழிந்த தீம்பால் காதலிற் பருகவூட்டு, மென்றிது கறிக்கு மென்று வெழுந்துதன் கையாற் கொய்து, துன்றிய பசிய பச்சைத் தோட்டுமெல் லறுகு நீட்டும். 166

தேறித்தெழுந் தொழுகுந் தெய்வத் தீம்புன லாற்றுத் தண்ணந், துறைத்தலைக் கிடந்த பச்சை மரகதஞ் சுடரமண்மே,லெறித்தவஞ் சுடரைப் பைம்புல் லென்று தன் னெருத்தங் கோட்டிக், கறிப்பநா வளைத்த ஞெக்கிக் கதிரிள முறுவல் காட்டும். 167

முன்னுபூந் துறையிற் றண்ணீர் மாந்துவான் படருங் காலுங், கொன்னழற் சீற்றப் பேழ்வாய்க் கோட்

புலி கவரு மென்னுப், பின்னெழுந்தேகு மாலைப் பிறை நுதன் மடந்தை வேட்ட, பொன்னுழை தொடர்ந்து சென்ற புயனிறக் கடவுள் போன்றே. 168

துளிக்கருங் கமஞ்சூற் கொண்ட றுயில்குளிர் சோலை தாழ்ந்த, நளிச்சினை மறைவின் பாங்கு நண்ணிய தென்று தேடு, மொளிக்கறை மதியிற் றுஞ்சு மோங்கெழி லிளமா னென்னப்,பளிக்கறை முகட்டி னேறித் துஞ்சுதல் பரிந்து பார்க்கும். 169

கமம்- நிறைவு.

பாந்தளஞ் சேக்கை யானைப் பரவுறும் பொழுது நாடும், வாய்ந்தபூங் கமலக் கையால் வருகவென் றழைக்கும் வந்து,மோந்துதன் மேனி நக்க முகமலர் மலர்ச்சி கூரு, மேந்தின னெடுக்கும் புல்லு மெழின்மணித் தோளி னேற்றும். 170

மின்னுழை மருங்கு லார்போல் விழித்திடு மிளமான் கன்று, தன்னுழை வளர மாலைத் தண்மதி புரையுந் தக்கோ, னின்னவா றொழுகி யாவி யிறந்திடும் பொழுது மான்மேன், மன்னிய நினைவு தன்னுன் மானுரு வாயினுனே. 171

தெறிநடை மடமா னுகப் பிறந்துமுற் பிறப்பிற் சேர்ந்த வறிவுவிட் டகலா தாக வருவியஞ் சாரற் குன்று மெறிதிரை நதியு மாடிச் சில்பக லிறப்பத் துஞ்சி மறைபயி லங்கி ராவின் வழியினிற் றேன்றினுனே. 172

முற்றுணர் வுடைமை யாலே முனிவரர் கிளர்ந்த வாறு,கற்றில னெழுதா நுண்ணூற் கலைத்திறங் கேட்டிலானும், பற்றிலன் மனத்தி னியாதும் படுபகை நட்

பொன் றில்லான், பெற்றனை வருந்தி யொன்றும் பேசில
ெனழுகி னனே. 173

நங்குலத் துதித்த தோன்ற னவில்கிலன் மறைமற்
றென்னத், திங்களிற் கலைகள் வாய்ந்த தெய்வதக் கிழவ
ரெல்லாந், தங்களிற் புலம்பி நைந்து தாற்றிளங் கமுகு
சூழ்ந்த, பைங்கழைக் கரும்பு வேலி பழனநீ காத்தி
யென்றார். 174

வினைவினை யின்றி நின்றோன் வேதியர் பணித்த
வண்ண, நனைவினை பொங்கர் வேலி நளிபுனற் பழனங்
காத்தும், பனைவளைத் தடக்கை வேழம் படர்வரை யரு
விச் சாரற், றினைவிளை புனங்கள் காத்துந் தெள்ளிதி
னொழுகு நாளில். 175

நனை-தேன்-பூமொட்டு. பொங்கர்-சோலை. நளி-குளிர்ச்சி.

அழற்கதிர் பருதி வெம்மை யரசுவீற் றிருக்கும்
பாலைக், கிழத்திகொள் பலிக்கு வந்து கிடைத்தன னிவ
னென் றெண்ணித், தழைத்தெழு மூவகை யாலோர்
வேட்டுவத் தலைவன் பற்றி, வழித்தனன் குருதிச்
சாந்த மலர்த்தொடை சூட்டி னனே. 176

இன்னமு தொழுகு மாலை யிளம்பிறைக் கண்ணி
சூடுங், கன்னிமுன் னெய்தக் கன்னி கட்கடை கனல
நோக்கி, யன்னவன் றன்னைக் கொல்வா னமைந்தவர்
சென்னி சிந்த, மின்னுமிழ்ந் திலங்கும் வாளால் வெய்தி
னிற் றுணித்து வீழ்த்தாள். 177

நிறைந்தபே ரொளியை நெஞ்சி னினைத்துணர் து
யோன் றன்னை, யெறிந்திட வுற்று ரொள்வா ளேறுபட்
டிறந்து ளாரே, லறந்தலை மணந்து நின்ற வறிவினர்க்

கிழுதி யென்னு, மறந்தலை மணந்தார் வாழ்த லுண்டு கொன் மதிக்குங் காலே. 178

எறிதல்-வெட்டல்- மணந்து-கூடி.

உரனுடை யொருவ னிவ்வா றுழுகுநா ளொலி நீர் வேலி, யிருநில வலயங் காக்கு † மாருக னென்னும் வேந்தன், மருளறு ஞான மெய்த மாமணிச் சிவிகை யூர்ந்து, கருணைபாய் கமலச் செங்கட் கபிலர திருக்கை செல்வான். 179

முனிவொடு விழைவி லானை முழுவலி மாக்கள் பற்றிப், புனைமணிச் சிவிகை யாங்குப் பொறுக்கெனப் பொறுத்த லோடு, மினிதினிற் பொறுத்தி யென்னே யிளைத்திருந் தாய்கொலென்னக், கனியிதழ்விண்டு கூறுக் கட்டுரை கூற லுற்றான். 180

இளைத்தலும் பருத்த றானு மியாக்கையின் குண மற் றன்றே, கிளத்திடி லுயிர்க்கு முண்டோ வென்ன லுங் கேட்ட வேந்த, னுளத்தினி னடுக்க மெய்தி யூர்தி நின் றிழிந்து வல்லே, யளித்திட வேண்டு மென்று வமலனைத் தொழுது சொல்வான். 181

இந்தனத் தழலின் வெம்மை யியைந்தவெம் பதலை நீருள், வெந்திடு மரிசி போல விளம்பிய துயரத் தாலே, நொந்திடு மாக்கை யுற்ற றுவலருந் தாப மெல்லா, நந்தலி லுயிர்க்குண் டென்றே நாடுமெ னுள்ள மையா.

ஆரைநீர் பொறுத்தல் வேண்டு மறிந்தில னளியேன் மையல், வேரறத் தகற்றி மெய்ம்மை விரித்திட வேண்டு மென்ன, மூரல்கொண் முகத்த னாகி முழுவது

† ரகுகண என்றும் பாடமுண்டு

முணர்ந்த தூயோன், றேர்வரு மறைகளெல்லாந்
தெள்ளிதிற் கூற லுற்றான். 183

ஐ-சுவாமி.

தாளிணை சுமந்து நின்ற தழைத்ததோர் மார்பு
மார்பந், தோளிணைசுமந்த தேந்து தோளிணைச்சுடர்ந்து
மின்னும், வாளுடை யரச னென்ன வரும்பொருள்
சுமந்த மற்றென், கோளுறு மிவைகளெல்லாங் குறிக்
கின்மண் ணுரு மன்றே. 184

வியப்புறு மனவினால் வெறுப்பு நீருறுஞ்
செயிர்ப்பறு வாளையத் தீச்சு டாதுபோ
லயப்புறு மனத்தினை நண்ணுந் தாபத்தீ
யுயிர்க்கில வறிந்தவ ருரைக்குங் காலையே. 185

திரியொடு நெய்செறி வுற்ற செஞ்சுட
ரெரிகலங் கீறுறுத் திலங்கு மாறுபோல்
விரியுமுக் குணத்தொடு மேவின் மாமன
முரைதரும் பிறவியை யொழிப்ப தில்லையே. 186

எரிதருங்கிருதவுற் றிலங்குமென்றும் பாடமுண்டு. கிருதம்-கோமளம்.

பன்னுமுற் பிறப்பினிற் பரத னென்னயா
னின்னிலம் புரந்திடா தகற்றி யாவும்விட்
டுன்னிய தவத்தொடு மொழுகு நாளிலோர்
கன்னிமா னுழைமனங் கலந்தி றந்ததால். 187

அவ்வுழை யுருவமு மடைந்து விட்டபின்
னிவ்வுரு வெடுத்தன னின்ன மொன்றினுங்
கவ்வைசெய் மனங்கசு வாது நின்றனன்
செவ்வியோய் பவக்கடற் செலவு மாற்றியே. 188

சீலமுற் றுயர்ந்தவர்ச் சேரின் வீடுறு
மாலையுற் றறிவிலார் மருங்க டைந்திடில்
வேலையுற் றலைதரும் பென்ன வெம்பவக்
கோலமுற் றிறந்திறந் திடரிற் கூடுமால். 189

இடையுறு மென்பினை நரம்பி னார்த்திடாப்
புடையுறு மிறைச்சியாற் பொதிந்து போக்கற
மிடைதரு தோலினுள் மேவப் பட்டதோ
ருடலினை யானென வுரைக்கற் பாலதோ. 190

பண்ணுறுங் கருமத்தாற் பவக்க டற்கரை
நண்ணுவ னெனென நயந்தி ருத்தல்வா
மெண்ணுறும் புலிமிடைந் திருக்குங் காட்டினைக்
கண்ணிலன் கடந்திடக் கருதல் போலுமே. 191

காட்டினிற் கலந்துறை யிலங்கு கானலை
யாட்டுதெண் டிரைவரு நீர தாமென
வேட்டிடு மாறுபோல் விடய வின்பமே
நாட்டமுற் றறிவிலார் நலிவ ருள்ளமே. 192

பொன்னினை விழைந்துழைப் புகுந்து வாடுவோர்
பன்னிய குளிர்நனி மாற்று வோமெனத்
துன்னுவெங் கானழ றுலங்கு வாய்நரி
தன்னைவெங் கனலெனச் சார்தல் போலுமே. 193

வருஞ்சுரந் தனில்வழி தவறி யோர்குழிப்
பொருந்திவெங் கரிவரப் புலம்பு வாரென
வரும்பினிக் குழிவிழுந் தழுந்திக் கூற்றுவன்
விரைந்துகண் ணெதிருற வெருளு வாரரோ. 194

பறவைவெம் பசியினிற் பழுத்துக் காட்டகத்
துறையுமுள் ளிலவையுற் றுணங்கு மாறுபோ

னெறிதவ ருலுத்தர்தந் நீள்க டைத்தலை
யறிவில ரடைந்திடைந் தழுங்கு வார்களே. 195

தீட்டரும் பழமறைச் சென்னி மேலுறச்
சூட்டிய மால்பதத் துணை நினைக்கிலார்
வீட்டரு மிடரிருள் விரிந்த வெம்பவக்
காட்டினை யெங்ஙனங் கடக்க வல்லரோ. 196

[இங்ஙனம் அவிசார சித்தத்தாதலின் விசார
மிஃதெனக் குறிக்கின்றார்]

கருதுசே யன்னைகா தலியப் பாருளோர்
பொருவருந் தாதைநற் புதல்வ னாயக
னரசனென் றனையநீ யடைதல் போலொரு
பிரமமே மாயையிற் பேர்கள் பெற்றதே. 197

(சேய்தாதை என்றும்,அன்னை புதல்வன் என்றும்,காதலி நாயகன் என்றும், பாருளோர் அரசனென்றுங்கொள்க).

ஈனுல கிடர றவினிது கொண்டநீ
யானெனுஞ் செருக்கினே டிராக மாதியாங்
கானுறை குறும்புகள் கடிந்து தீங்கற
வூனமின் ஞானமா முலகுங் கோடியால். 198

குறும்பு-பொல்லாங்கு.

என்றவ னுரைத்தனு மிறைஞ்சி வேந்தனுஞ்
சென்றனன் பாற்கடற் சேர்ப்பன் பூங்கழன்
மன்றலந் தாமரை மனத்து ளுடினன்
வென்றனன் வல்வினை வீடுற் றனரோ. 199

[பரதகண்டத்தின் மகிமை யுரைத்தல்.]

வருண நான்குநான் காச்சிர † மத்தினின் மருவி,
யரிய பாவத்தா னிரயத்து மறத்திறற் பலவாம்,

† மத்திற மருவி என்றும் பாடமுண்டு.

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.


பொருவில் விண்ணினு ஞானத்தால் வீட்டினும் புகுத் துங், கரும பூமியிப் பாரத வருடமாங் கழறின். 200

புரியுஞ் சத்துவ கருமத்தோர் பொன்னுல கடை வார், மருவி ராசத கருமத்தோர் மானிட ராவா, ருரை செய் தாமத கருமத்தோர் நரகங்க ளுறுவார், விரவு மவ்வினைப் பயன்விழை யார்கள்வீ டடைவார். 201

ஆற்று நல்வினைப் பயன்பல மாந்தின ராங்காங், கூற்றி ருந்தே தெழுகுபொற் றருநிழ லுறைவோர், சோற்று மாயவன் செய்யதா ணிழலுற நொய்திற், றேற் று வேங்கொலோ பரதகண் டத்தெனத் துணிவார்.

போற்பு வாய்ந்தபொன் னுட்டிடைப் புங்கவ ரிங்கே, கற்ப வாயுள்சேர்ந் துறைதலிற் கருதுவீ டடைய, நற்ப தாம்புய நாடிமா னுமமுச் சரிப்ப, வற்ப வாயுள்சேர்ந் தாங்குதித் திடலழ கென்பார். 203

வாம முற்றவிப் பாரத வருடம்வந் துதித்து
நாம முத்தியி னுய்ந்திட ஞானம்வந் தடையக்
காம மற்றமுன் செய்திலம் வினையெனக் கரைவார்
போம தித்திடிற் பொன்னுல கெனவறி புலவோர். 204

வாமம்-செல்வம்.

[சர்வமும் பகவத் சொரூப மெனக்கூறல்.]

எண்டிசை நரக மீமே ழுலகமென் றிசைத்த வெல்லா, மண்டமா வண்டந் தானு மப்புறத் துள்ள யாவு, மொண்டிறன் மாயன் றால வுருவமா முறைக்குங் காலை, வண்டியிர் தொடையா யிவ்வா றறிந்திடின் மரு வும் வீடே, 205

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
MADRAS-41

## 6-வது ஸ்கந்தம்.

[சுகர் பகவநாமத்தின் மகிமை கூறல்.]

காராய் விசும்பாய்க் கதழ்வளியாய் வெங்கனலாய்
நீராய் நிலனாகி நின்றதனி நேமியா
னோரா யிரநாமத் தொன்றொருகா லோதினர்மற்
றாரா யினுமவ் வளறுபடி யார்களே. 206

பத்திசெய் தாயினும் பகைசெய் தாயினும்
வித்தக னொருவன்பேர் விளம்பற் காயினு
மொத்துநா ராயணா வெனவு ரைப்பரேற்
றொத்துவெம் பாதகங் குலைந்து நீங்குமே. 207

தும்மினு மிருமினுந் துயர மிக்குளம்
விம்மினும் வீழினும் வினைசெய் போழ்தினு
மம்மவிந் நாலெழுத் தரைவ ரேலவர்
செம்மலர் மால்பதஞ் சேர்த றிண்ணமே. 208

நெறியினிற் பிழைநத வசாமிளன் றனு நேமியந் தடக்கையா னுமை, மறிவில னொருகாற் கூறலா னுயர்வி டைந்தன னம்மமற் றறிந்து,நறைவிரி துளவப் படலை யந் தாரா னுமமே யுரைசெயப் பெற்று, ருறுவினைத் தொடர்ச்சி நீங்கிவீ டைத லுரைப்பதென் னரசவென் றுரைப்பான். 209

[சுகர் செல்வச்செருக் காகாதெனல்.]

அண்ணலங் குரவன்வந் தடைந்த தாயிரங்
கண் ணுடை யிந்திரன் கண்டி லானெனின்
மண்ணிடைக் காண்பர்கொல் வந்துற் றார்தமை
யெண்ணாரு நிதிச்செருக் கெய்தி னாரரோ. 210

[தேவேந்திரனுக்குத் ததீசிமகாரிஷி

என்பளித்தமை கூறல்.]

ஆரமுற் பட்டமெண் ணாகு மென்புமற்
றோர்பொருட் டாகவிண் ணுலகு காவல்செய்
வேரியந் தாரினான் விழையப் பெற்றது
சீரிதென் றுளமகிழ் சிறந்திட் டானரோ. 211

நேயவென் பிந்திர நீகொள் வாயெனத்
தாயினு மன்புறுந் ததீசி யென்பவ
னேயவெவ் கானனீ ருக்கு நீரெனுங்
காயம்விட் டறிவொடுங் கலந்திட் டானரோ. 212

நீர்=ஒப்பு.

மன்பெருஞ் சிறப்பினான் மாலை வெண்குடை
மின்பொழி மணிமுடி வேந்த னல்கென
வென்புமாங் களித்தன னிருந்த வத்தினோ
னன்பினர் யாதுமற் றருள்க லாததே. 213

[தேவேந்திரனுக்கு விருத்திராசுரன் போதித்தல்].

வெற்றி யுற்றிடினும் வீர மற்றொழிய வெய்ய
தோல்விநனி மேவினுங்,கற்ற மேலவர்மகிழ்ச்சியோடுறு
கலக்க மென்பது மடைந்திடார்,கொற்ற மாயவ னளித்த
மாயைசெய் குணங்க ளென்பருல கோர்கடாம், பற்றி
நின்றசெய லொன்றி னன்மரப் பாவை செய்தசெயல்
போலுமே. 214

நாக மீதுநட மாடு மாயனரு ளண்ணு வோர்கள்
சம மாகவே,சோக மோடு நலனுடு வார்களெனிற்சொல்

னு மாயனரு ளன்பனை,மாக நாடுடைய மானவேலவவ மான மென்றுமன நாணமிலன், போக வென்றுரை செய் வாறு ணர்ந்துடல் புழுங்கி னுனவி விழுங்கினுன்.

[சித்திரகேதுவுக்கு அங்கிராமுனியும்,
சூழந்தையும் போதித்தல்.]

தந்தை யென்றுந் தநயர்க ளென்றுநற்
சிந்தை யன்பொடு சேர்தலுந் தீர்தலு
நந்து றுந்திரு நன்னதி மேலுற
வந்த நீரு மணலு நிகர்க்குமால். 216

ஒன்றி னுற்படைத் தொன்றி னளித்ததைத்
துன்று மொன்றிற் றொலைத்திடு மாழியான்
வென்றி சேர்வினை யாட்டெனு மாயைதா
னின்று நீயிதற் கென்கொ விரங்கலை. 217

கனவைப் போலவுங் கானலி னீருடன்
றனிசெய் யிந்திர சாலத்தைப் போலவு
மனதின் கற்பனை யால்வரு மாக்கையை
வினையின் கட்டுற மெய்யெனப் பாவதோ. 2.8

சேய ரும்பொருட் செல்வ மிவையென
நேயம் வைக்கி னிகரில் பயந்தரு
மாயுங் காலிவ் விருப்பறுத் தாழிசேர்
மாயன் றாளின் மனதுவை மன்னனே. 219

மூல மாமுதற் றேவர்க டந்திடாக்
கால மியாவர் கடக்கவல் லாரெனச்
சீல நன்மொழி பற்பல செப்பவு
மாலை வெண்குடை மன்னன் மயங்கினுன். 220

ஆய காலே யருளுடை நாரதன்
போய வாவி யழைத்துப் புவியர
சேயு மாறுட லெய்துறி தந்தையுந்
தாயு மாழ்கித் தளர்ந்தன ரென்றனன். 221

மைப்புயலைக் கிழித்தெழுந்த மின்னுப்போன் மாய்பிறவி, யுப்புறுவெண் டிரைப்பரவை யுறுமணவிற் பலவாமா,லெப்பிறப்பிற் றந்தைதா யின்றிரங்கி யழுகின்றார், செப்புதிநீ மறைவல்லோய் தெளிதினியா னறிந்திலனே. 222

தந்தையிவ னன்னையிவ ளெனச்சாற்று முறை திறம்பி, வந்துதிப்பர் பிறவிதொறும் வழங்குபணிப் பொருள்போன்றே, யந்தமிலா வாநந்த மாகியறி வானபொரு, ணந்தவிலாத் தாமெனவே நாடியறி யாதவரே.

[சித்திரகேது அம்பாளுடையசாபத்தால் விருத்திராசுரனாகி மோட்சமடைதலைச் சுகர்சொல்லல்].

அவிழ்பொலன் கடுக்கை வேணி யந்தணன் சனகனாதி, தவமுது முனிவர் கேட்பத் தத்துவ முரைத்த மேனைக்கிக், கவிரிதழ் மயிலை யாருங் காணவோர் மருங்கு வைத்து,நவில்வதென் ஞான மென்ன நகைத்துரை யாடினானே. 224

பொலன்=பொன்மைநிறம்;கவிர்-முண்முருக்கம்பூ இதழ்-உதடு.

நகைத்துரை யாட லேனைக்கி நாமவே லவுணனாகென்,றகத்துறு வெஃகுளி பொங்கி யம்பிகை சபிக்கவன்னோன், பகைத்தலால் வந்த வென்றும் பற்றினால் வந்த வென்றுஞ்,சுகத்தொடு துக்க மெண்ணார் துகவிலா ரென்று சொல்வான். 225

அன்னோ நீ சபித்த லென்ற னருவினைத் தொடர்ச்சி யன்றோ, மன்னிய வின்ப துன்ப மாயையின் புணர்ச்சி யாமே, தன்னைநன் குணர்ந்து பார்க்கிற் சார்வதோர் வினையு முண்டோ, பன்னுதி யெனத்தாள் வீழ்ந்து பர வினன் போயி னானே. 226

வித்தியா தரர்கட் கெல்லாம் வேந்தனாய் விளங் கும் வைவேற், சித்திர கேது வென்பான் செப்பினன் சேறல் காணு, பைத்தபாம் பணியு முக்கட் பரமனே முதலி னோர்கண், முத்தனோ ரகந்தை யில்லா னென மொழி வியந்திட் டாரே. 227

அறந்தரு மிமைய வல்லி யவ்வழிச் சபித்தலாலே, பிறந்தன னவுண னாகப் பிறந்துமுற் பிறப்பின் ஞான, மறங்கனிந் தொழுகும் வெவ்வாய் வச்சிரப் படையின் வேந்த, னெறிந்துழி † யடைந்து வீட்டி னெய்தின னினிதின் மாதோ. 228

[காசிபர் பெண்களுடைய மாறுபாடுகூறல்.]

மடந்தையர் வதன நல்ல மதியென வசனந் தேவர், கடைந்தநல் லமுதமென்னக் கனிறுமென் றாலுமுள்ளம், விடங்கொடு புரிந்த வாள்போல் வெங்கொலை விரும்பு மந்த, வடங்கலா மனஞ்செல் வண்ண மாதரி னியம்பு வாரே. 229

புல்லுநன் கொழுநன் பெற்ற புதல்வரென் றாலு மன்பாற், சொல்லுமோர் வயிற்றிற் றோன்றுந் துணைவரென் றாலு மாதர், கொல்லுவர் கோப முற்றாற் கூசி டார் சிறிது மென்னு, வல்லலுற் றழுங்கி யன்னாட் கொருவர மளிக்க லுற்றான். 230

† யழிவில் என்றும் பாடமுண்டு.

# 7-வது ஸ்கந்தம்

[பரிச்சித்துவினவலும், சுகர்போதித்தலும்.]

விருப்பொடு வெறுப்பொன் றில்லா மெய்ப்பொரு ளமரர் வாழ்த்தச், செருக்களத் தவுணர்த் தேய்த்த திறமெவன் றேவ ராலென்,னுரைத்திடு மசுர ராலென் னுறுமிவை யுரைத்தி யென்ன,மருக்கம ழலங்க லாற்கு மறைமுனி கூற லுற்றான். 231

உலகெலாம் படைக்குங் காலை யுரையிரா சதத்தார் போன்று, நிலைபெற வளிக்குங் காலை நிகழ்த்துசத் துவத்தை மேவி, வலிகெழு தாம தத்தை வாய்ந்தவர் போன்று மெல்லாந், தொலைவுற வொழிக்குங் காலை சொல்லுதா மதத்தர் போன்றும். 232

தோற்றுவன் சத்தாய்ச் சித்தாய்ச் சுத்தமாய்ச் சுகமாய்த் தோன்றிப்,போற்றிய நாம ரூபம் புகல்குண மொன்று மின்றி, யாற்றுமோர் வினையு மின்றி யமர்ந்தவன் விகார மெல்லாஞ், சாற்றிய குணங்க டாமே சார்ந்திடு முரைக்கின் மாதோ. 233

தங்கிய புகழ்சேர் கின்ற சத்துவ குணம்வெல் காலைப், பொங்கிய வவுணர் தேய்வார் புனைமுடி யமரர் வெல்வார், கொங்கவிழ் தாம மார்ப கூறுதா மதம்வெல் காலை, மங்குவ ரமரர் வெல்வா ரனைகழ லசுரர் மாதோ. 234

மாயையால் வகுத்த போராய் வருத்திடப் படுவோ ராகித், தாயுமாய்ச் சேயு மாகுந் தனிமுதற் குறுவ

துண்டோ, நேயமா ரிராச சூய நிகழ்த்துழித் தரும னிவ்வா, ருயுகா ரதனைக் கேட்ட தறைகுவ னுழி வே ந்தே. 235

மறத்தொடு பிறந்த ஞான்றே மாயனைப் பழித்தல் செய்த, திறற்சிசு பால னண்ணல் சேவடி படர்ந்த தென்னென், றறத்தின்மா மதலை கேட்ப வஞ்சுவை யமுத மூறி, யுறக்கிளர் தொடைய னல்யாழ் முனிவர னுரைக்க லுற்றான். 236

புகழ்தலும் பழித்த லாலும் புகன்றிடு முடலுக் கல்லா, னிகழ்தரு குணங்கண் மூன்று நீங்கியோன் றாகிச் சித்தாய்த், தகைபெறுஞ் சத்தாய் நின்று தயங்கு மோர் பொருட்கு முண்டோ, விகல்செய்யா னெனதெ ன் பார்தம் மிழுதைபா ரியம்பு வாரே. 237

மருவு காமத்தாற் பயத்தினால் வன்சினே கத்தாற் பொருவெ றுப்பினால் விருப்பினாற் புனிதனை நினைக்கி னுரைசெய் முத்தியி னுறைகுவர் காமமுற் றுணர்ந்தே யரிய முத்திசென் றடைந்தனர் கோவிய ரன்றே. 238

கஞ்சன் வெம்பயத் தாற்றிகழ் கண்ணனை நினைவுற் றெஞ்ச லற்றவீ டெய்தின னினிதுவந் தடைந்தார் நெஞ்சு வப்புறு சிநேகத்தா னினைந்துநின் போல்வார் செஞ்சி லைச்சிசு பாலனே முதலிய தீயோர். 239

வெறுப்பி னுனினைந் தடைந்தனர் வீட்டினை விரும்புந், திறத்தி னுநினைந் தடைந்தனர் திருமறை தெளிந்தோர், குறிப்பு முத்தொழில் குணங்களா னடாத்துமோர் கொண்டற், கறத்தின் காதல வெறுப்பெவன் விருப்பெவ னம்மா. 240

[இரணியன் தாயாருக்குப் போதித்தல்.]

நெறியிற் காண்குறு நித்திய மாகியொன் றுரு,மறி வை வேறுவே றுய்விழி யறியுமா போல, வுறையு மா யைசேர் குணத்தினுண் டாமுட லுடல, முறையிற் கூடலு நீங்கலு மூறுல கியல்பே. 241

கனவு போல்வரு மொருகுணம் வருத்திடக் கலங்கி, நனிவ ருந்திடுமொருகுண நன்கறிந் தியம்பின்,வினைக ட ந்தமெய்ப் பொருட்கொரு வினைசெய விலை, யினைய வோர்கதை யியம்புவன் கேட்டியென் றிசைப்பான். ()

ஓது சீர்த்தியா னுசீரதே யத்துறை வேந்தன்
றூது சேர்தொடைத் தரியல ராற்களத் திறக்க
மாத ரார்மனை யாரொடு மைந்தர்கள் சூழ்ந்து
போது நேர்விழி புனறரப் புலம்பியங் கழுதார். 243

வந்து வெய்யசெங் குருதிநீர் மருவிய களத்திற்
சிந்தை நொந்துகண் ணீரொழு கிந்தெனச் சிந்திப்
பந்த மோடழு வார்துயர் பறைதரத் தெருட்டி
யந்த கன்சிறு பிள்ளையா யாங்கடைந் தறைந்தான். 244

பறை-ஒரளவு.

வெறுத்து வாரியி னொருபொருள் வீழ்த்தினும் விரும்ப, மறுத்து வந்துதன் மருங்குறு மவற்குரித் தாகி, னிறுத்தொர் செப்பினுள் வைத்தறை நின்று தான் றனே, பொறுத்துக் காப்பினு மறைந்துபோம் போம்பொருண் மாதோ. 245

பொய்ம்மை யர்முடற் பொருளினிற் புகன்றவுண் மையையு, மெய்ம்மை யாம்விழுப் பொருளினில் விள ம்புபொய்ம் மையையும், பெய்ம்மை போற்றுனி பிரச

மார் குழலினர்ப் பேணி, யைம்மை யாம்பொறிக் கலம்
வரு மறிவிலோ ரறைவார். 246

பெய்தல்- செறிதல். பிரசம்-கள், வண்டு.

தழுவு தாவரத் தெங்கணுந் தனித்துறை தழல்போற்
பழுதி லாமலெவ் விடத்தினும் பரம்பொரு ளிருக்கு
மெழுவெங் கானலி னீரென விவ்வுட லிறக்கு [ந்தே.
மழுவ தென்கொனீர் பொய்யைமெய் யாமென வறி

கண்ணி வீழ்ந்ததன் பெடையினைக் கலந்தழு குலி
ங்க, மண்ணில் வீழ்தர மாய்த்தனன் வாங்குவில் வேட,
னெண்ணி மாய்ந்தவற் கிரங்கல னிறக்குமிவ் வுட
லென், றண்ண னல்லறக் கடவுள்சொற் றன்னவர் தெ
ளிந்தார். 248

குலிங்கம்- அடைக்கலங் குருவி.

[பிரகலாதன் சரித்திரம்]

பாடு மோருழிப் பச்சை மால்புகழ்
நாடு மோருழி நல்ல காருருச்
சூடு மோருழிச் சொற்று ழாய்முடித்
தாடு மோருழி யன்பு முற்றியே. 249

மண்ணில் வானின்மற் றுலகின் மன்னிவா
ழெண்ணி லாவுயி ருடம்பி யாவையுந்
தண்ணந் தாமரைத் தலைவி மேவிய
கண்ண னாகவே காணுங் காட்சியான். 250

காட்சி- அறிவு.

பித்த னென்னவும் பிரச மாந்திய
மத்த னென்னவு மான மொன்றிலா
முத்த னென்னவு முன்னு மாயவன்
பத்த னென்னவும் படரு மாங்கவன். 251

உண்ணி லேகினுற் றுரையி லோர்செயல்
பண்ணி லோசைநீர் படியி லன்பொடும்
பெண்ணு மாணுமாய்ப் பேடி மாகியே
நண்ணு மாயவ னும மோதுவான். 252

[பிரகலாதன் குழந்தைகளுக்குப் போதித்தல்.]

அல்லவை குரவ னேனு மறைந்தவை கேட்க லாகா
நல்லவை யாவ ரேனு நவின்றிடக் கேட்க லாமாற், சொ
ல்லுவ னுமக்கு மெய்ந்நூ றொடையல்யாழ் முனிவன்
சொற்ற, வல்லிதிற் கேண்மி னென்ன மருவுமம் மைந்
தர் சொல்வார். 253

ஒத்தன நீயும் யாமு முனக்குமற் றுரைத்த தெங்
ஙன், றத்துவம் விரிந்த செம்பொற் றுமரை யுறைவோ
ன் மைந்த, னித்திற நவில்வா யென்ன வெரிமணிச்
சுடிகை நெற்றிப், பைத்தபாம் பணையா னன்பன் பாற்
படக் கூறினனே. 254

பால் - இயல்பு.

இருந்தவ மிழைத்தற் கெந்தை யேகிய காலை நோக்கிச்
சுரும்புண விரிந்த பைந்தார்ச் சுடர்முடி யமர ரீண்டிக்
கருங்கழ லவுண ரெல்லாங் களப்படப் பொருது நூறி
யருஞ்சிறைப் படுத்தி னனென் னன்னையை யமரர்
கோமான். 255

இடருறு சிறையேன் வைப்பா யேழையை விடுதி
யென்னத், தொடையல்யாழ் முனிவன் வந்து சொற்ற
னன் சொற்ற லோய், மடவால் வயிற்று மைந்த னுயிர்
த்தபின் மகவைக் கொன்று, விடுவலென் றுரைத்தல்
செய்தான் விண்ணவர்க் கிறைவ னம்மா. 256

கோற்றொடி வயிற்று மைந்தன் கொல்லுதற் குரிய
னல்ல,னாற்றலந் திகிரி மாய னன்பனென் றருளிற் கூறி,
மாற்றினன் சிறையான் கேட்ப மாழ்குமென் னன்னை
நெஞ்சந், தேற்றுவான் போல மெய்ந்நூ றெள்ளிதிற்
கூறி னானே. 257

ஆங்கவன் காட்சி மெய்ந்நூ லறைதர வயிற்றி னுற்
றேன், றீங்கற வுணர்ந்த வாறு செப்புவன் கேண்மி
னென்னைப், பூங்கழ லவுணர் பெற்ற புதல்வருக் கியம்ப
லுற்றான், வாங்குவிற் கனக னீன்ற வயங்கெழிற் சிறு
வன் மன்னே. 258

[சாதுக்கள் சுபாவத்தைப் பலத்தோடு முணர்த்தல்.]

போக்கி டாமலம் புலன்களும் பொசித்திடும் போ
கங், காக்கை யேமுத லுயிர்களுங் கலந்திடும் பெரியோ,
ராக்கை யாவியோ டெவ்வள வுறையுமவ் வளவு, நீக்க
மின்றிமால் பதநினைந் துயர்பத முறுவார். 259

[அசாதுக்கள் சுபாவத்தைப் பலத்தோடு முணர்த்தல்.]

அரிது மானிடப் பிறவிவந் தடைவதிங் கடைந்தா,
லுரைசெ யாயுண்மிக் குறையினு னாற்றின்மே லுறை
யார், விரகி லாவினை னோர்களாய் மெலியுமூப் பின
ராய்க், கருது † நாள்சில கழிப்பர்கண் படையின ராகி.

உறையு யாயுளிற் பாதியு மொழிப்பர்மற் றொழி
ந்து, குறையு நாட்களு மனைவியர் குமரரென் றவர்மே,
லிறையுங் காதலி னீக்குவர் நெடியனை மனத்து,லிறையு
மோர்கிலார் பிறப்பிறப் பிற்கிட யாவார். 261

* † நாளவம் என்றும் பாடமுண்டு.

[மேலும் அவர் சுபாவத்தைக் காட்டி வியப்பித்தல்.]

தோற்று மேழ்வகைப் பிறவியு மிரிதாத் தொலைத்து, மாற்று மானிட ராயிவண் மருவியு மாய, ஞற்றல் சேர் பத யன்பொடு நினைந்துவீ டடையார், கூற்றி ஞற்றுயர் வாரவர் மடமையார் குணிப்பார். 262

பாவத் தால்வரும் பொய்புடல் யானெனப் பகரு, நீபத் தால்வரு மிருவினைக் கட்டொடு நிகழ்த்திற், கூபத் தேவிழு மறிவிலாக் குருடர்முன் றுன, தாபத் தீச்சுட ைநந்துவார் மடமையார் தணிப்பார். 263

நீபம்-நிபம், கோள்.

[சாஸ்திரக்ஞர் புத்தியீனத்தை விளக்கிப் புத்திர, தன, ஏடணைகளின் பிரபாவங்கூறல்].

பன்னு நூல்பல தேர்ந்துநற் பரம்பொரு ளறியா, தின்னல் பார்த்திடா ரழியுமோர் பரர்பொரு ளெடுத் தற், குன்னு வாரெனின் † மைந்தர்க ளுலகினி லொளி சேர், பொன்னின் மேற்செலும் விழைவையார் போக்கு வா ரம்மா. 264

[கற்றறி மூடத்தைக் குறிப்பித்துத் தாரேடணையின் பிரபாவங் கூறல்]

ஓது நூல்பல வுலகியன் முழுவது முணர்ந்தும், பேத நீங்கிடத் தம்மைநன் கறிந்திடார் பெரிதாங், காத லாகிய விலங்குசேர் விலங்கெனக் கருத, மாதர் பால் வினை யாடுவ ரெனினெவர் மறுப்பார். 265

[இனி உறுதி மொழிகளால் தெருட்டல்.]

பாத வங்களின் றளிரொடு பூமுதற் பலவு மோதில் வேறுவே றுருவென வொளிருமா போலக்

† மைந்தர்காள் என்றும் பாடமுண்டு.

கோது சேரரு விகாரமாங் குணமுடற் கன்றிப, பேக
நீங்கியே பிறங்குமெய்ப் பொருட்கிலை பேசின். 266

காட்டின் மேவிய கானலிற் புனலெனக் காதல்,
புட்டு மாயையின் முறைமுறை போந்ததத்துவத்தின்,
கூட்ட மேயுட லவ்வுடற் குலவுநன் மதியா,லூட்டு போ
தமே நவையிலாப் பொருளென்று நவில்வார். 267

பன்னு மாக்கைசே ரவபவ முதலிய பலவு, முன்
னி யிங்கிதன் றெனமுறை முறைமையா யொழித்துச்,
சொன்ன புந்தியிற் கரியெனத் தோற்றிய வறிவை,யின்
ன தேபரம் பொருளென வறிவதிங் கியல்பே. 268

கூறு மங்கியுந் தூமமும் போற்குண குணியாய்,
வேறு வேறுசேர் பொருளெலா மேவியொன் றாகி, யீறி
லாமுத லாயுடற் கிசைவிகா ரங்க,ளாறு மெய்ப்பொருட்
கில்லையென் றறிவதே யறிவு. 269

புந்தி முக்குணம் பொருந்திமூன் றவத்தையும்
பொருந்து,மந்த மின்றிய வவத்தையி லறிவெனவமரு,
நந்த மின்றிய பரம்பொரு ளுமெனக் கருதிற், பந்த
முற்றவெவ் வினையறப் பரத்தொடொன் றுவரே. 270

நிலவு மோர்வினை யின்றியே நித்திய மாகி
யுலகெ லாநிறைந் துயிரென வொருமுத லென்ன
விலகு சித்தென வெண்ணறுஞ் சுத்தமா யிருக்கு
மலகில் சோதியை யறிவதற் கென்னரி தம்மா. 271

கனவு துஞ்சுதல் காரண மாய்வரு மதுபோல்
வினைசெய் வெவ்வுட றூற்றிடும் பேதைமை வினைவான்
மனதி. னூற்றிரு மாயவன் மலர்ப்பதத் துணையை
நினையின் வீடுறு நீங்குமவ் வினைப்பயன் வினைவே. 272

வரும்பெ ருப்புகழ்க் குருவொடு மருவிடப் பெற்றுற்
றிரும்பு மாயவ னடிதொழுத் தீங்குவிட் டுள்ள
திரய்பு மாலடிக் † கன்பெனி னெஞ்சமார் புளக
மரும்பு மாக்கைநெஞ் சானந்த வெள்ளமூற் றெழுமே.

ஆர்—நிறைவு, ஊற்றெழும்—ஊற்றெடுக்கும்.

காம மானது கெவிட்டிடாப் பெருதவே கருது,
நாம ரூபத்தோ டுறைபவர் நலனழிந் திறந்து, போமெ
ன் றுலும்பொய்ப் பொருளையே காதலித் துழல்வா,
ரீமஞ் சேர்ந்துட லெரிவதுங் கண்டில ரேகொல். 274

அபன்பு ரந்தரன் முதலினோ ராக்கையும் பிறவி,
நயந்த ரும்வினை யிழைத்திட லொழிந்திடார் நவிலின்,
வயம்வ ளர்ந்தசீர் நேமிமா லுக்கிரு வினையின்,பயன்
விளைந்திடா தளித்திடிற் பரத்தொடோன் றுவரே.

வயம்—வலி.

தேவ ராயினு மவுணர்க ளாயினுந் தெரிக்கும்
பாவை மார்களே யாயினும் பறவைமா நரரோ
டேவ ராயினு மாலுழை யிருத்துமன் பினரேற்
றுவி லாதவி டடைந்துறை வாரிது சரதம். 276

அன்பு செய்வதிங் கரிதிலை யன்புசெய் வதுதான்,
பொன்பி றங்கிய வணியெலாம் பொலிந்திருப் பதுபோ
ன், மன்பு கழ்ச்சரா சரங்களாய் மாயனென் றுரைக்கு,
நன்பெ ரும்பொரு ளிருக்குமென் றுளத்துறு டுவதே.

பத்திசெய் தமலன் செய்ய பதத்துணை சேர்மி
னென்னுத், தத்துவஞ் சிறுவர்க் கெல்லாஞ் சாற்றினன்
சாற்ற வன்னோ, ரத்தலை யறிவு மன்பு மடைந்தனர்
மறையோ ரஞ்சி, யித்திற முரைத்து மென்று வியம்பி
னர் கனகற் கம்மா. 278

† கன்புநன் னேசமார் புளக என்றும் பாடமுண்டு.

[இரணியன் கேள்விக்குப் பிரகலாதன் கூறல்]

தண்டுளி நறவு காலுந் தாமரைப் பொகுட்டின் மேய, வண்டுவீ ழோதிமின்னின் வயங்கவோர் மழைக்கா ரென்று, கண்டவர் மருளும் வண்ணங் கடலிடைக் கிடந்த மாய, னுண்டுகொ ளுலகத் தென்ன வுருமென முழங்கி னானே. 279

கடலினு முளனே வண்டு † கஞலவா யவிழு மந்தண், மடலினு முளனே யோங்கு மலையினு முளனே மன்னு, முடலினுள் ளுயிர்போ லெல்லா வுலகினு முளனே வெய்ய, வடலுடை யாழி தாங்கு மமலனென் றறைந் திட்டானே. 280

கஞல-நெருங்க.

(பிரகலாதன் ஸ்துதி)

அஞ்சன வண்ணத் தண்ண லகங்குழைந் துருகி யாங்குக், கஞ்சநாண் மலரி னன்ன கதிர்வளைச் செங்கை தன்னால், செஞ்சுடர்க் குழவி யன்னான் சிறுபுறந் தடவந் தென்கொன், மஞ்சநீ விழைந்தாய் வேட்ட வரநினக் களிப்ப னென்றான். 281

சிறுபுறம் - பிடரி.

விழைவற வெறிந்தோர் நாடும் விழுப்பெருஞ் சுடரே தூய, பழமறைக் கொழுந்தே பச்சைப் பசும்புயல் வண்ணா நின்னை, வழிபடு மன்பே யன்றி வரமெவன் பெறுவ தென்னாத், தொழுதனன் வழுத்த லுற்றான் றாயபே ரறிவி னானே. 282

பூவுறை மணம்போ லெல்லாப் பொருளினு முறைவோய் நின்பொற், சேவடி தொழுது போற்றார் தேவ ரென் றானு நீச, ராவர்பொல் லாத நீச ராயினும் வண

† கஞலவாய் வீழ என்றும் பாடமுண்டு.

ங்கி யுன்சீர், நாவினல் வழுத்திற் றேவ நாயக ராகு வாரே. 283

எங்குநீ யுறைந்திட் டாலு மிலங்குகண் ணுடி பார்க்கி லங்கவர் முகங்க டாமே யறிவர்போ லன்பி னேர்முன் றங்கெழி லுருவத் தோடுஞ் சார்குவையறியும் வாறுன் பொங்குசீர் பிரம னுலும் புகல்வதற் கடங்கா தம்மா.

உருடருஞ் சகடு போல வொழிவிலாப் பிறவி யுற் றேன், மருடருஞ் பிறவி யின்னம் வருங்கொலென் றஞ்ச லல்லாற், றெருடரு நின்னைக் கண்ட தேவர்போ லஞ்சி லேனிங், கருடர வேண்டு மென்பா லாளரி யுரு வத் தையா. 285

அஞ்செவி யான வண்டுன் னருங்கதைத் தேறன் மாந்த, நெஞ்செனு மன்ன மூன்று னிரையிதழ்க் கமலம் வைக, தஞ்சமா நினது நாமஞ் சாற்றுக வென்னு வென்று, மெஞ்சலில் வரந்தந் திங்ங னிடர்க்கட லகற்று வாயே. 286

ஆதியி லொருத்த னுகி யந்தமென் றுரைக்கும் போது, மேதமி லொருவனுகி யியையுமிந் நடுவிற் பேத, மோதுயிர் பலவு மாகி யுறைவபோ லுறைவா யுற்ற, சோதியுன் விளையாட் டெல்லாஞ் சொல்லயார் வல்லர் மாதோ. 287

ஆதியா மாயை யாகி யகத்தகங் கார மாகிப், பூத மாய்ப் பொறியா யந்தப் பொறிக்குறுங் குணங்களாகிப், பேதமா மு.யிரா யொன்ருய்ப் பிறங்குசித் தாகிவைகுங், கோதிலா வுன்னை யன்றிக் குறிக்குமோர் பொருளு முண்டோ. 288

வேட்டிடு மனையார் போகம் விரும்பினர் வேறு வேறு, நாட்டுணை சிலர்கைப் பற்றத் தானையைச் சிலர் கைப் பற்ற, வாட்டமுற் றலைவர் போல வருந்துமைம் புலனும் போக, நாட்டமுற் றலக்கப் பட்டோர் நலி வருன் னருணண் ணுரே. 289

தோற்றுறில் வியுங் காலைத் துயருறு வதற்கு மஞ்சி, யேற்றதாய் வயிற்றில் வந்தே யிடருறு வதற்கு மஞ்சி, மாற்றருஞ் சுழல்காற் றுற்று மறுகுமோர் சருகு போல்வார், போற்றிடார் நின்னை யன்னோர் புலமையை யென்சொல் கேனே. 290

வெற்றிவே லவுணற் கொன்று விழுச்சிறப் பணி த்தோ யிங்ங, னுற்றவெஞ் சீற்ற நீங்கி யுவந்தரு ளென்று பல்காற்,பற்றெறிந் துயர்ந்த வைந்தாம் பருவத்தோன் பரவ லோடு, மற்றமில் வெகுளி போக வாளரி மகிழ்ந்த தன்றே. 291

அரும்புகழ்ப் புதல்வ வுன்ற னன்பினுன் மகிழ்ந் தே னுள்ளம், விரும்புடற் போக நெஞ்சில் விழைந்தி லை நீயென் றுலும், பொருந்துமோர் மனுவின் காலம் போற்றுசீர் வேந்த னுகி, யிருந்தபின் னெனது பாத மெய்துக வெனச்சொன் ணுனே. 292

மாணிட மடங்க லானோன் வழங்குதல் கேட்ட மைந்த னீனிற முகிலே நின்னை நிந்தையே புரிந்த தாதை யூனமாம் பாவ மெல்லா மொழியநீ யருள்செ யென்னத் தேனலர் துளவத் தாரான் சிறுவனை நோக்கிச் சொல் வான். 293

உன்னையிங் குயிர்த்த வாற்று னுரைக்குநின் குல த்து முவே, மென்னுநின் மரபு ளோரு மியைந்தனர்

புனித மென்று, லன்னவன் புனித ஞதற் கையமென்
னவனுக் கீமே, மென்னுநல் வினைசெய் யென்ன மைந்த
னவ் வினைசெய் தானே. 2 4

[வருணச்சிரம முரைத்த வத்தியாயம்.]

வருண நான்குநான் காச்சிர மந்தனை வகுத்துத்,
தெரியு மாறுநீ செப்புதி யென்றுதீங் கெறிந்த, தரு
மன் கேட்டலுந் தவஞ்செய்நா ராயண னெனுமா,லுரை
செய் தானெனக் கென்றுநா ரதமுனி யுரைப்பான். 295

சமத மந்தவந் தண்ணளி பொறுமைமெய் தருமம்,
விமல ஞானமோ டியிர்க்கெலாம் விரும்புமன் பினை
ராய்க், கமலை கேள்வனைக் கண்ணனைக் கருதின ராகி,
யமர்த லெக்குலத் தவர்க்குநல் லறமென வறைவார்.

ஓதலோதுவித் துறைதனன் மகமுவந் தாற்ற,
நீதி லாமகம் விரும்புவோர் செயப்புரி வித்த, லீத லே
ற்றலென் றறுதொழி லியற்றுதற் குரியார், வேத
நான்கையும் விளம்புமந் தணரென விதிப்பார். 297

அரச ருக்கற மருமறை யோதலம் மகங்கள், புரி
தன் மாநிலம் புரந்திடல் பல்படை பயிற்றல், வெருவி
டாதுவெஞ் சமத்தெதிர் விசயமுற் றடைதன், மருவு
மன்பொடும் வழங்கலென் றறுவகைத் தாமே. 298

வனிக ருக்கற மறைபயின் றிடன்மகம் புரித
றணிவில் வாணிப முழவுசெய் திடல்பொரு டருத
லணிசெய் யானிரை காத்தலிங் கறைந்தமூ வருக்கும்
பணிசெய் துற்றலே பின்னவர்க் கறமெனப் பகர்வார்.
மடந்தை மார்க்கற மனைத்தொழில் பழுதற வியற்றி
யடைந்த தெய்வநற் பதியென வனுதினம் வணங்கிக்

கிடந்தி டாதவர் பணித்தவா புரிந்தவர் காதற்,றொடர்ந்
த தாதைதா யேவலுந் தொழுதுசெய் குவதே. 300

சொன்ன வேதியர் முதற்சொலுந் துகளிலா வருண
மன்னு நால்வகைத் தலைசலான் மற்றைய குலத்தோர்க்
குன்னு நல்லறந் தத்தம குலத்தொழி லுவந்து
பன்னு பாவநீத் தியற்றுத லெனப்பக ருவரால். 301

உழுது வித்திய விளைபயிர்க் குரியவ ராகிப்
பழுதி லாதுகாத் திலரெனிற் பயன்பெறார் போல
வழுவி லாவுரித் தாகிய வறத்தினை மறப்போ
ரழிவி லாநல னடைந்திடா ரருந்துய ரடைவார். 302

பிரமசா ரியர்க்கறம் பேசி னைந்தெனும்
பருவமே முதற்பக ரான்டு நாலினு
ளுரைசெய்சி ரிருபிறப் புற்ற தென்னமுப்
புரிமுன்னூன் முறைமுறை பூண வேண்டுமால். 303

குருகுல வாசமாயக் குலத்து லையட்
றுரைதரு குரவனிவ் வுண்டி மாந்தென
விருபொழு தும்மயின் றெண்ணெய் நெய்முதன்
மருவலா காவென மாற்றல் வேண்டுமால். 304

சீலமேமா டுழையதண் மௌஞ்சி சேர்ந்தலர்
காலையு மாலையுங் கதிர்வெய் யோனையுங்
கோலநற் கனலையுங் குருவை யுந்தின
மாலற வணங்குவர் மறைக ளோதுவார். 305

வாசமார் கருங்குழன் மடந்தை மாரொழி
னேசமோ டௌத்திடை நினைந்தன் ளூர்திறம்
பேசிடா துறைவது பிரம சாரியர்க்
காசிலா வறமென வறைபு நூல்களே. 306

இல்லறம் பூண்டவர்க் கெண்ணெ யேமுத
னல்லென மருவுத னவையின் றுமரோர்
சொல்லிய நாட்களிற் றுணைவி மார்முலை
புல்லலு முரித்தெனப் புகலு நூல்களே. 307

வானகத் தமரர்மா முனிவர் தம்மொடுந்
தேனகத் திருந்ததார்த் தென்புலத்தவர்க்
கானமுக் கடன்கழித் தறத்தி னின்றவர்
கானகத் தேகுதல் கருது வார்களே. 308

மனைவியை மைந்தர்பால் வைத்தும் வைத்திடா
தனையவ ளொடும்வனத் தடைய லாமதிற்
றனிவன மனைவியோ டுறையிற் சாலைசெய்
தனல்வளர்த் தோமநன் காற்றல் வேண்டுமால். 309

மைந்தர்பான் மனைவியை வைத்து மன்னழல்
சிந்தையி லடக்கினர் செல்லிற் சாலைநீத்
தந்தமில் பனிவெயி லமர்ந்து மாமலைக்
கந்தர முறைந்துமே கழிப்பர் காலமே. 310

வாட்டமற் றறிவுவந் தடையின் வன்னியாய்க்
காட்டகத் தேகலுங் கடனங் கேகினோன்
மீட்டகத் துறைவதை விரும்பி வீறுசேர்
நாட்டகத் துறுவது நவையென் பாரரோ. 311

உழுகுநர் விளைத்தநெல் லுண்டி மாந்திடார்
விழுசரு குவைநென்மேல் லடகு வேண்டுவார்
தழைவுறு மயிருகிர் தவிர்த்தி டாரவர்
மொழிநறை யெண்ணெய்தார் முதல நீக்குவார். 312

குவை-குப்பை, மேடு. அடகு-இலைக்கறி.

துறந்தநல் லெதிசெயல் சொல்லி லங்கியைச்
சிறந்ததன் னுளத்திடைச் சேர்த்திச் செய்குண
நிறைந்திடு புலன்களு நிகழ்த்தைம் பூதமும்
பிறந்ததின் முறைமுறை பெரிது போக்கியே. 313

நிகழ்த்திய மனம்பொறி பூத நீங்கிடா
தகத்திடை யடக்ககங் காரந் தன்னையு
மகத்தினி லிருத்தியம் மகத்தை மாயையிற்
புகுத்தியம் மாயையை யறிவிற் போக்கியே. 314

தத்துவ மித்திற மடக்கிச் சத்தெனச்
சித்தெனக் குலவுவன் செப்பு கின்றசீர்ப்
புத்தியி னுசையும் பொருந்து மானமும்
வைத்தில னாகியே வயங்கு வானரோ. 315

ஒருபதிக் கொருதின மாக வேயுறைந்
திருநிலத் தேகுவ னியைந்த தண்டமுங்
கரகமுந் தாங்குவன் கருது சின்னமாய்
வருகன வெனச்சக மனத்திற் காண்பனால். 316

உன்னிய மறைமுடி வோது வானன்றிப்
பன்னிய வேறுநூல் பகர்ந்தி டானவன்
றுன்னிய வுலகவர் சொன்ன நல்லற
மன்னிய நூற்குரை வரைந்தி டானரோ. 317

முனிவுசெய் யானுடன் முதிர்ந்து போமென்று
மினிதுசெய் யானுட லென்று போமென்று
நினைதல்செய் யானிலை நிற்க வோர்மடம்
வனைதல்செய் யானுயிர் வருத்தி டானரோ. 318

திசைபுகழ் துறவறஞ் சேர்ந்து ளார்களி
னிசைதரு சின்னம்விட் டெவர்கொ லோவென

வசைதரு மூகர்போன் மத்தர் போலவு
மசகரம் போலவு மாகு வானரோ. 319

உலகெலாந் தன்னிடத் துறைவ தாயுந்தா
னலகிலா வுலகெலா மமர்வ தாகவு
மிலகுசீ ருளத்தொடு மியைந்து நோக்குவா
னிலவுமோர் பேதமாய் நினைந்தி டானரோ. 320

அறிவினின் முதிர்ந்தச காங்கொ லாமென
மறையவன் றுறவறம் பூண்டு மன்னுசீர்
நிறைதரு சையமா நெடுங்கி ரித்தலை
யுறையுமோர் கதையுனக் குரைப்பன் கேட்டியால். 321

மிக்கசீர்ப் பிரக வாதன் மேதினி முழுது நாடிப், புக்குழி யசக ரம்போற் பொருந்துமோர் முனிவன் றன்னை, யெக்குலத் துதித்தா னென்று மெந்தவாச் சிரம னென்றுந், தக்கநெஞ் சையங் கொள்வான் சையமால் வரைகண் டானே. 322

அருவரைச் சார லெய்து மசகரன் றன்னைக் கண்டு, பெரிதுநீ தவஞ்செய் கின்றாய் பெருத்தனை யென்கொ லென்ன, வெரிகதிர்ப் பருதி மார்ப விளைத்தலும் பருத்த-ற் னு, மொருவுறு முடனுக் கன்றி யுயிர்க்குமற் றில்லை மாதோ. 323

என்றருந் தவத்தின் மிக்கோ னிசைத்தது கேலோடு, நன்றுரைத் தனைநீ யார்கொ னவையற வுரைக்க லாமே, லொன்றிட விசைத்தி யென்னு மொளிரும் வேற் கனக னீன்ற, வென்றிசெய் மதலைக் கந்த மெய்ம் - - ரம்ப னுற்றான். 324

உரையொழிந் திறந்து ளோரு முற்றனர் பெரிய ரென்றும், புரையறு சிலசொற் சொல்லிப் புனிதமே

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
MADRAS 600 090

பொருந்து வார்நீ, யரிதிவ ணடைந்து கேட்டா லறை வதி னழகு முண்டோ, கருதுடற் காம முற்றே கணக் கில்பல் பிறவி யுற்றேன், 325

மறையவர் குலத்துட் டோன்றி மயக்குடற் காமம் விட்டே, யறிவறிந் திங்ஙன் வந்தே னம்மமா னிடராய் வந்தும், நிறைவறு காமம் விட்டு நினைந்திடார் தம்மை யன்னோர்க், குறுவதோர் சுகமு முண்டோ வொழிவி லாத் துயர மல்லால். 326

சைவல மறைக்குந் தண்ணீர் தம்மருங் கிருப்ப தோரார், பொய்வலம் பொருந்துங் கானற் புனலையே விரும்பு வார்போன், மெய்வலந் திகழுந் தம்மை விருப் புவிட் டறியா ருண்மை, கைவல மறைப்பார் காமப் பொருளையே கருது வாரே, 327

வலம் - இடம்.

ஆசையா லருந்தா ராகி யருநிதி வருந்திப் பெற் றோர், நேசமா ரரசர் கள்ளர் நெடும்பகை முதலி னோ ராற், காசுலாம் பயமுட் கொள்வார் கண்படை தானுங் கொள்ளார், நாசமே யடைவர் காமம் விட்டவர் நலன் றுய்ப் பாரே. 328

உழப்பினு லீட்டி வைத்த வுறுசுவைத் தேற னு ண்ணு, திழப்புறுங் காமர் தேனு மெழுகல வெதிர்ந்த மாந்தும், விழுப்பெரு மலைய ராவு மேதகு குரவர் கண் டாய், மழைப்புய லனையா யென்று மறைமுடி வியம்பி னுனே. 329

உளநனி யுவந்து கேட்ட வொண்புகழ்ப் பிரக லா தன், .வினைவுறு விருப்பி னோடே வெறுப்புவிட் டுயர்ந்

தோன் றன்னை, முளரியங் தடக்கை கூப்பி முறைமுறை வணங்கி நாளும், வளமுறை நகரஞ் சேர்ந்தான் மான வேலரச மாதோ. 330

[இல்லறத்தார் கதியுரைத்தல்.]

நித்தியமை மித்தியகஞ்சேர் நிந்தையில்கா மியவினை கள், பத்தியொடு புரிந்துவரும் பலன்விழைபார் பசுந்து ளவோன், சித்தமகிழ் தாவுதவித் திருமால்சீர் சொலக் கேட்கின், முத்தியினைப் பொருந்துதற்கு முந்துநெறி யாய்விடுமே. 331

தனக்குரிய வறத்தைவன்னி தணக்கவொண்ணு வில்லறத்தோர், அனற்கரும முதலான வறமொழித்து விடலாகா, வனத்துறைவோர் மீண்டுமொரு வன்பதி மே வுதலாகா, நினைத்தொழித்த முப்பாவி னேசம்வா லெதிக்காகா. 332

இருவினையாஞ் சகடுபுல னெனும்புரவி பூண்டுதிக, ழுமைமுதலேந் தெனும்வழிபோ முடற்றேரி லுறையு யிரா, மரசன்மதிப் பாகனொடு மறிவெனும்வா ளாலெறி ந்து, கருதியகா மாதிபகை கடந்திடின்மா லுலகுறுமே.

காதலெனுங் கொடியநெறி கலந்துலவிற் காமாதி யோதுபல குணவேட ருஞற்றுவினை விலங்கினொடும் பேதமுறு பிறவியெனும் பெருங்கடலில் வீழ்வரெனிற் சூதுலவு பலன்விழைந்து தொல்வினையார் புரிபவரே.

விரிவுறுநட் பொடுபகையை விட்டுமனை யறத்திரு ந்து, மருவுசெயப் படும்பொருளு மன்னுதொழில் செய்பவருங் கருமமுமோர் பிரமமென்றே கண்டுவினை புரிவோருந், தெருளுறுசீ ரெதியாவோர் சேர்கதியே சேர்குவரே. 335

அரியதொழில் சேர்தானை யறியிலொரு நூலாம் போன்,மருவியதாம் பிரமமென்றேமதிப்பதுபா வாத்து விதங்,கருமமெலாம் பிரமமெனக் காணல்கரு மாத்துவி தம், விரவியுல கவருளத்தின் மேவுபெரு ஞானமெ லாம். 336

ஒன்றெனநன் குற்றறித லொழிவறுஞா னாத்து வித, மன்றல்கமழ் மலர்த்தொடைபோய் வருத்தவிம்மூ வத்துவித, நன்றுமனத் திடைதெளிந்து நவையறுதம் வினைபுரிவோர், துன்றுவினை யொழித்தமுனி துன்னு கதி மன்னுவரால். 337

# 8 - வது ஸ்கந்தம்.

[ஸ்ரீ பகவானைக் கஜேந்திரனழைத்தல்.]

வாரண மாற்ற லோய்ந்து வானுறத் தடக்கைநீட்டிப்
பூரண வுலக மெல்லாம் பூத்தளித் தழித்து நின்ற
காரண பரமா னந்தக் கடலிடைக் குளித்தோர் நெஞ்சு
மாரண முடிவு மேய வமலவென் றழைத்த தன்றே. 338

[கடல்கடைந்தபோது தேவர்கள் ஸ்துதித்தல்]

குணமாய்க் குணியாய்க் குலலயமாய்க் கொழுந்தீம் புனலாய்க் கனலாகித், தணலா வளியாய் வெளியாகித் தன்மாத் திரையாய்ச் சார்பொறியாய்க், கணமாய் முக்கா லமுமாகிக் கருணைக் கடல்போற் பாற்கடலிற், பணவா ளரவி லறிதுயில்செய் பரமா வெங்கட் கருள் வாயே. 339

ஓரேழ் பிறவி யுடனுயிரா யுலக மனைத்து மோரு ருவாஞ், சீரா யுறைவாய். நின்னை யல்லாற் செப்பும் பொருள்வே றென்றுளதோ, தோரார்க் கிருளாய்த் தெளிந்தவர்க்குச் சித்தா யுறையுஞ் செழுஞ்சுடரே, யாரா வமுதே யெங்களுக்கிங் கருளா யென்றன் றேத்தினரால். 340

மூவுரு முறையிற் றங்கி முத்தொழி னடாத்து முக்கட், டேவனே யுலக மெல்லாந் திருவுரு வாகி நின் றாய்,காவென வணங்க லோடுங் கலங்கன்மி னீவி ரென் னத், தாவருங் கொடிய நஞ்சந் தனைநுகர்ந் தருளி னனே. 341

விடமும்வர் தீசன் கோல மிடற்றினி னீல வண்ண, வடிவுபெற் றணிய தாகி வயங்கிற்றுப் பெரிது மென் றாற்,கொடியரும் பெருமை யோரைக் கூடின்வெங் கோ து நீங்கி, யொடிவறு நலம்பெற் றுய்த லுரைப்பதென் னுலகி னம்மா. 342

விண்ணவ ரமுத முண்ண வெகுண்டெழுந் தனு ணர் நொந்தார்,கண்ணனை நினைந்து ளோர்தாங் கருதிய பயன்கொண் மாறு, மண்ணலை நினையா தாசை யடைந் தவ ரரிய போக, நண்ணினு மடைந்தி டாது நலிதனு மியற்கை யாமே. 343

[பரீட்சித்துக்குச் சுகர் போதித்தல்.]

தன்னுழை யுதித்த மாயையை மருவிச் சாற்றிய பெயரொடு முருவம், பன்னுபற் பலமாய் முக்குணத் தோடும் பழகினன் போன்றிருந் தாலுந், துன்னிய விருள்சே ரலங்கல்வெவ் வரவாய்த் தோன்றியோர்

சுடருறத் தானை, மன்னுதல் போன்மா யவன்குணங்
கடந்து வயங்குவன் மதிக்கிலென் றுரைத்தான். 344

[பிரகஸ்பதி பகவான் தேவர்களுக்குக் கூறல்.]

குருவரு ளடைந்தோர் வெற்றி கொள்ளுத லுண்
மை யன்றோ, மருளுறு மும்மை யன்றி மருவிய குர
வற் போற்ற,திருளுறு துயர வாரி யெய்துவோ ரொரு
வ ருண்டோ, பொருவலி யுமக்கிங் கில்லைப் போயொ
ளித் துறைதல் வேண்டும். 345

[வாமனாவதாரத்தில் மாவலியோடு சொல்லுதல்.]

திருவுஞ் சீருந் திறனு மிசைபந்தவுன்
பெருமை யாரிவண் பேசவல் லாரென
வுரைசெய் மாதவ னோதுமென் காலினன்
மருவு மூவடி மண்டரு வாயென்றான். 346

தண்ட லைப்பெருந் தண்ணடை யும்மன்றற்
றெண்டி ரைச்செழுந் தீவுக ளும்மன்றான்
முண்ட கத்திரு மார்பவோர் மூவடி
மண்டரு கெனன் மற்றிவ ணென்னென்றான். 347

* தண்ணடை - நாடு.

பேசக் கேட்டவப் பிள்ளையுஞ் சொல்லுவான்
றேசம் பெற்றிடிற் றீவினை யுள்ளுமா
னேசத் தீவையுற் றுறு நிலைநிலா
தாசை நோய்க்குமோ ரற்றமுண் டாகுமோ. 348

பெற்ற தானுவப் பெய்தும் பெருமையோர்
குற்ற நீங்கிக் குலவுவர் முத்தியி
லுற்ற தன்றி யுறுதகை யுள்ளுவோர்
சுற்ற மோடு கெடுதலுஞ் சூழ்தலை. 349

* தலை - சித்தம்.

உடற்குள் வந்தெழு மொள்ளழற் போன்றுபின்
கிடைத்தி டாப்பொருண் மேற்கிளர்ந் தோடியே
நடக்கு மாசையை நண்ணு முவப்பிறு
லடக்கு மந்தண ரேயறி வாளரே. 350

## 9 - வ து ஸ் க ந் த ம்.

[துருவாசகர் சக்கரத்துக்குப்பயந்து ஸ்ரீபகவானை யடைந்தபோது அவர் கூறல்.]

மன்னு மன்பர்தம் முள்ளமென் னிடத்தினில் வதியு, மென்ன துள்ளமு மன்பர்தம் பாலியைந் திருக்கு, மன்ன வன்பரா தீனமில் லாதிலே யலர்மேற், பொன்னி னும்மெனக் கினியவ ரவர்களே புகலின். 351

சுற்ற மாதிமெப் பொருள்களும் பொய்யெனத் துணிந்து, மற்றென் பாதமே மனக்கொளு மவர்க்கிடர் மருவி, லுற்று நீக்கிடா துறைவமோ வன்பர்பா லுவந்து, பெற்ற கன்றுகாண் கறவையிற் பெட்புறு முள்ளம். 352

## 10 - வ து ஸ் க ந் த ம்.

[பிரமா முதலான தேவர் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி தேவகிவயிற் றிருக்கும்போது ஸ்துதித்தல்]

சுடர்ந்துவில் லுமிழுஞ் செம்பொற் றோடவிழ் மலரி னுனும், விடம்பொதி மிடற்றி னுனும் விண்ணவர்

குழுவு மீண்டித். தடங்கட லுலக மெல்லாந் தன்வயிற் றிருப்ப மற்றோர்,மடந்தையால் வயிற்று வாழு மாயனை ப் பரவ லுற்றார். 253

வில்—ஒளி.

தெளிக்குநான் மறையு மின்னந் தெளிவதற் கரிய தெய்வ, விளக்கமே ஞான நந்த வெள்ளமே யுனது மாயை, வளைத்திடப் பட்டோர் நின்னை மதிப்பரே மூவ ராக, வுளத்தெளி வுற்றோர் பார்ப்ப ருன்னைமற் றொருவ னென்றே. 354

ஆக்கமு மழிவு மின்றி யகண்டமா யமல மாகி, வாக்கொடு மனத்துக் கெட்டா வள்ளலே யறத்தின் வாழ்வே, தீர்க்கவுந் தீயோர் தம்மைச் செய்வினை நலத் தி னோரைக், காக்கவும் மன்றோ கோடி கடவுளை லுரு வு தானே. 355

பாழிவாய்ச் சுடிகை நெற்றிப் பஃறலைப் பாந்தண் மீதே யூழிவா யண்ட கோள முடைபடக் கோத்த தெண்ணீ ராழிவாய் வளர்வாய் மற்றுன் னடிப்புணை பற்றப்பெற்றோ ரேழிரும் பிறவி வேலை யெளிதினிற் கடப்ப ரன்றே.356

சுடிகை - நெற்றிச்சுட்டி. பஃறலை - பலதலை.

இருட்குறும் பிரியத் தோன்று மிளங்கதிர்ப் பருதி போல, மருட்பெருந் திமிர மோட மாண்டக விளங்கு ஞானப், பொருட்கதி ரில்ல தாமே பூந்துழா யலங்கண் மாலே, யருட்கடல் பிறந்தி லாயே லாழிசூ ழுலகிற் கம்மா. 357

ஆதிநின் னாம மெல்லா மஞ்செவி* நிறைத்தும் வா யா, லோதியு மழகு வாய்ந்த வுருவுகண் களிப்பக் கண்

டுங், கோதில்வீட் டின்ப மெல்லாங் கொள்ளைகொண் டுண்ப ரன்றே, மோதுவெண் டரங்க முன்னீர் முதுநில மாக்க டாமே. 358

கற்றையங் கதிர்கால் பைம்பொற் கிண்கிணி கவை யிஇய தெய்வச், சிற்றடிக் கமலப் போது தீண்டவென் னேற்ற தேயோ, வொற்றையந் திகிரிச் செல்வ வொரு பெருங் கமலத் தாளா, லற்றைநாட் பொதியப் பெற்ற வங்கண்மா ஞாலந் தானே. 359

மாயையால் விளைந்த வண்ண மல்லது வாய்மை யாக, மாய்தலும் பிறத்த ருனு மன்னுயிர் தனக்கு மில் லை, மாயையிற் றீர்ந்து நின்ற மற்றுனக் குண்டு கொல் லோ, மாயநின் றேற்ற மெல்லா மதிக்கிலோர் விளையா ட் டன்றே. 360

[ஸ்ரீ பகவான் பிறந்தபோது வசுதேவரும் தேவகியும் ஸ்துதித்தல்].

ஈனுநல் விளங்கதிர்ப் பருதி † யோர்குலாய்
வானுற வயங்குசெவ் வண்ணங் கோடியாற்
பானிறங் கோடியாற் பாது காத்திட
நீனிறங் கோடியான் னீறு செய்யவே. 361

செய்யதா மரைமலர்ச் செல்வி காதல
பையராத் தாங்கிய பரவை மண்மிசை
வெய்யகோ லரசரை வீட்டற் கன்றுகொ
லையகா ருருவம்வந் தடைந்த வண்ணமே. 362

மன்னவன் படைச்செயன் மன்னன் செய்கையாய்ப்
பன்னுதல் போற்றனிப் பரம மாயையுன்

† யேயென என்றும் பாடமுண்டு.

முன்னமே யியற்றிய மூவ கைச்செய
னின்னுடைச் செயலென நிகழ்த்தல் செய்வரே. 363

என்றன னேத்தனு மீன்ற செல்வியுந்
துன்றுபூந் துளவினான் றேற்றங் கண்டன
ளன்றுவந் துவகைநீர் நாட்டங் கான்றிடக்
கன்றுகாண் கறவையிற் கசிந்து போற்றினாள். 364

கானுயிர்த் ததுபுனல் கனல்க றங்குகால்
வானுயிர்த் தவன்றனை வகுத்து நின்றபூந்
தேனுயிர்த் தலர்ந்ததார்ச் செம்மன் மற்றுனை
நாதுயிர்த் தனனென னகையு டைத்தரோ. 365

கழிந்தொரு நான்முகன் காலந் தீர்தனு
மழிந்துமண் முதலிய வனைத்து † மீதுற
வொழிந்துநீ சேடனென் றுரைப்ப நின்றனை
செழுஞ்சுடர் நின்னிலை செப்பற் பாலதோ. 366

வெஞ்சின நிருதர்தம் வேரறுத் திடச்
செஞ்சிலை நிமிர்கடை குழைத்த சேவக
கஞ்சனென் றுரைபெறு கடுங்கட் கூற்றினுக்
கஞ்சின னஞ்சின னளிக்க வேண்டுமால். 367

[அசோதைக்கு ஸ்ரீபகவான் சகலமுந்
தனக்குள் காட்டல்.]

நங்காய்மண் ணருந்தினனின் குழவியென வில்லை யென நவின்றானைக், கொங்கார்ந்த செங்கமலக் கோற் றொடிகைப் பிடித்தனள்வாய் காட்டுகென்ன, வங்காந்த மணிவண்ண னம்பவளத் துவர்வாயி னழகு கான்ற, செங்காந்தண் முகிழ்விரலந் தீங்கிளவி யுலகனைத்துந் தெரியக் கண்டாள். 368

† நின்னுற என்னும் பாடமுண்டு.

விண்கண்டாள் விண்விளக்கும் வெண்கதிருந் தண்சுடரும் விளங்கக் கண்டாண், மண்கண்டாண் மண்வளைக்கு மாகடலும் போகுயர்மால் வரையுங் கண்டா, டண்கொண்ட வெண்கோட்டுத் தளவநெடும் வனங்கண்டா டனையுங் கண்டாள், பண்கொண்ட வண்டரற்றும் பசுந்துளவோ னிவனெனவோ பரவி னளே. 369

தளவம்—முல்லைக் கொடி.

முருகொழுகு முகிழ்விரியு மொய்த்துளவோன் மாயையினுன் மறைத்த லோடும், பருகுமவள் போனேக்கிப் பழுத்தொழுகு மன்பினளாய்ப் பரவு மன்னை, பொருகளிறே வருகவளர் போரேறே வருகவெழிற் பூவை வண்ண, வருகவெனத் துகிரில்லினை மணிமுத்தங் கொண்டனளுண் மகிழ்வுற் றளே. 370

[பிரமா கன்றைக் கோண்டுவேந்துவிட்டுச் சுவாமியைத் துதிசெய்தல்]

அற்ற மில்லென வண்ட மனுவென
முற்று கின்றவா னின்முழு மெய்யுறு
மொற்றை யண்டத் தொருவழி வைகுவேன்
றெற்றெ னத்துணி வேன்கொனின் சீர்த்தியே. 371

அற்றம்—மறைவு; தெற்றென—தெளிய.

வெங்கதிர்ப் பருதி முன்ன மேயமின் மினியும் விள்ளாப், பொங்கிருட் கங்குல் சேர்ந்த புன்பனி யிருளு மன்றே, யங்கண்மா னால முண்டோ ராலிலைப் பள்ளி துஞ்சுஞ், செங்கண்மா மாய நின்பாற் செய்த வென் மாயை தானே. 372

அடைத்துழாய்ப் படலை மாலை யமலநின் னிலைமை தோரார்க், குடைப்பெரு மாயை தன்னு லுருப்பல

காட்டு வாயாற், படைக்கையா ளுகி மற்றப் படைப்பெ லாங் காப்ப னீயாய்த், துடைப்பமுக் கண்ண னுகித் தோன்றுமா போல மாதோ. 373

அல்லியங் கமலச் செங்க ணமலனீ யாகத் தன்னை
நல்லுணர் வதனு ளுடு நற்றவ முடையார்க் கன்றோ
மெல்லிணர்க் கண்ணி மேய வெஞ்சின வரவு போல
வில்லதா மெல்லை யில்லா விருள்படுந் தோறறந் தானே.

மண்ணெலா முண்ட செல்வ வயிற்றகத் துறையா நின்ற, வொண்ணிறக் குழவி தாளா லுதைத்தலாற் பிழையென் ருேரா, ரண்ணனின் னகல்வ யிற்று ளகப் படா பொருளு முண்டோ, வெண்ணினின் வயிற்று வாழ்வே னிழைத்ததெப் பிழைய தாமால். 375

வெஞ்சினந் திருகு நஞ்சம் விளைந்தவெம் முலைப் பா லூட்டும், வஞ்சனை யரக்கி தானும் வந்துநின் னடி யிற் சேர்ந்தா, ணெஞ்சுவந் தமுத மூட்டு நேரிழை யவ ரோ டாவிற், கஞ்சன வண்ண வென்னே வளித்திமற் றறிகி லேனல். 376

திருவினர் பெரிது மந்தோ திருவினர் பெரிது மந் தோ, விரியல்வெண் டோட்டு முல்லை வியன்புலத் துறையப் பெற்ருே, ரருவமா யொன்றுய்ச் சித்தா யகண்டமாய்ப் பரமா னந்த, வுருவமாய் ‡ நின்ருன் றன்னே டுறவுகொண் டிருக்கின் ருரே. 377

[பரிச்சித்துக் கேள்விக்குச் சுகர் கூறல்.]

தன்னுயிர் மேற்செல் காத ருனுயிர்ப் பதற்குண் டோகொன், மன்னுயி ரனைத்துஞ் செங்கண் மாயவ

‡ நின்ருய் நின்னே என்றும் பாடமுண்டு.

ஞாத லாலே, யின்னுயிர்க் குழவி தன்மே லியைந்தது பெரிதும் காதன், மின்னுயிர்த் திலங்கும் வேலோ யென்றனன் மீட்டுஞ் சொல்வான். 378

[நாககன்னிகைகள் ஸ்தோத்திரம்.]

போருதி ரைக்கட லுடுத்த நீள்புவி புரக்க வந்த மணி வண்ணபொற், றிரும ணக்குமணி மார்ப கொற் றமுறு செம்மு கத்திகிரி யங்கையா, யரும றைத்தலை யின் வைத்த சேவடி யகன்ற பைத்தலையின் வைப்ப தற், கெரிசி னத்தவிட வரவ மெத்தவ மிழைத்த தோ வென வழுத்தினர். 379

[கோவர்த்தன மெடுத்தபோது தேவேந்திரன் ஸ்துதித்தல்.]

உரைவா யிகந்துள் ளுணர்வுங்கடந் தோங்கி நிற் பாய், தரைவாய்ப் பிறந்து தனிநல்லறங் காத்தல் செய் வாய், விரைவாய் மலர்மே லுறைவாய்வரை வீற்றி ருப்பாய், திரைவாய்த் துயில்வாய் நினையெங்ஙனந் தேர்வல் யானே. 033

மாற்றற்ற பொற்று மரையாள்புணர் கின்ற மார்ப, வாற்றற் றிகிரிப் படையாய்வெறுப் பார்வ மில்லாய், சீற்றத் திழைத்த செயலீது பொறுத்தி யென்னப், போற்றிப் பணிந்தான் பசும்பொன்னகர் போற்றும் வேந்தன். 381

ஒளியுற்ற பொன்னாட் டெரின்ப மருந்தி யுள்ளங் களியுற்ற னைபக் களிமம்மு ரகன்று நெஞ்சந் தெளிவுற் றிடவித் திறஞ்செய்தனு மென்று செங்க ணளியுற்ற தாரா னனிகூர்ந்துரை யாடினனே. 382

[பரிச்சித்துவினவும், சுகர்விடையும்.]

எனலு மன்னவ னென்னைகொ லறந்தலை மணக்கப், பனியி ருங்கடற் பாரகம் புரக்கவந் துதித்தோ, னனை ய வாச்சிய ராய்நல நுகர்ந்ததோ வறங்கொன், முனைவ வென்றலு முரல்வாண் முகத்தினன் மொழிவான். 383

அழல னைத்தையு நுகர்ந்தில தேகொலோ ளழலி, னெழில்வி ரிந்தசெஞ் சடைமிசை யின்னமு துறைக்கும், குழவி வெண்பிறைக் கொழுங்கொழுந் தணிதரு வெவ்வாய், மழுவ லான்கடல் வல்விட மா ந்தின னன்றே. 384

இழைப்ப ரியாவையு மிறையவ ரிறையவ ரொ ழுகு, மொழுக்க மியாவரு மொழுகமேற் கொள்ளுத லொவ்வா, விழுச்சி றப்புடை யிறையவர் விதியினில் விதித்த, வழக்கி னிற்பதே யறனெனப் பழமறை வழ ங்கும். 385

நிறுத்தி யாரையு நெறியினி னெகிழ்ந்துதண் டேற, லுறைத்த தாமரை யொண்மலர்ப் பொகுட்டினி லுறையு, மிறைக்கு மோரிறை யாகியெவ் வுயிருமாய் நிறைந்த, வறத்தின் வித்தினுக் கறமெவன் பாவமென் னம்மா. 386

[முசுகுந்தர் ஸ்துதித்தல்]

இறக்கு முடல மியானெனப்பட் டிறந்து போய வித்தனைநாட், பிறப்பின் மக்கட் பிறப்பம்ம பெறுதற் கரிதா லினிப்பிறவாச், சிறப்பு நெறிதந் திடவேண்டுந் தெவிட்டா வமுதே யருட்கடலே, துறக்கு முனிவ ருளக்கமலந் துறவாத் தெய்வச் சுடரொளியே. 387

[உருக்குமணி ஸ்துதித்தல்]

முற்றத் துறந்து பற்றின்றி முருகு பருகு மதுக ரம்போற், பெற்ற பெற்ற வழியருந்தும் பெரியோ ரன்றித் திருவுந்திப், பொற்ற கமலத் துலகேழும் பூத் தோய் செல்வக் களிமயக்க, முற்ற மாக்க ணினையெய் ந ணுணர்வு படைத்து விளைழகிற்பார். 388

ஏடு படுபூந் துளபமுகி லெல்லா வுலகு மிறந்துபட, நீடு தடங்கோட் டாலிலைமே னீலப் புயல்போ னிமிர் பசும்பொற், கோடு பிடுங்கித் திகிரிவரை கொன்று நெ டுவா னடையவளைத், தாடு திரைகோத் ததிர்கடலி லா ர்க்கு வெருவி யமர்ந்தனையால். 389

ஆலக் கருஞ்சே றுமிழ்பகுவா யரவிற் கிடந்த வாரமுதே, நீலப் பொருப்பே யருட்கடலே நெடுநீர் வேலி யுலகளிக்கும், மாலே திகிரி மழைமுகிலே மணி யி லொளியு மலர்மணமும், போலத் திகழ்வா யெங்கு நினைப் புகலார்க் கென்கொல் புகலம்மா. 390

அழியா வுயிர்யா வையுந்தருநா ளமர்ந்த கமல மலர் வேட்கை, பொழியாய் போல விழுத்தவத்தோ ருள் ளக் கமலத் துறைசுடரே, மொழியால் வழுத்தற் கெளி தோநின் முழுச்சீ ரென்ன வருள்பெருகி, வழியா வித ட்டா மரைமலர்க்கண் வள்ள லுள்ள மகிழ்கூர்ந்தான்.

சேட்டி ளம்பிறைக் கொழுந்தெனத் திகழ்கரு பால்வெண், கோட்டு வாரணங் கூப்பிடத் துயிலெழு கொண்டன், மோட்டு முட்புற முருக்கின்மொய் யிணை யென விரிந்த, சூட்டு வாரணங் கூப்பிடத் துயிலெழுந் தனனால். 392

இனைத்தெனத் துணிந் தெழுதிடாப் பழமறைக் குலங்க
ளனைத்து மெட்டுதற் கரியதோ ரானந்த மயமாய்
நினைப்ப ரும்பர தத்துவ மாய்நிறைந் தோங்கு
தனிப்பெ ருஞ்சுடர் தன்னையே நினைத்தன னிருந்தான்.

[இராஜ சூயத்தில் சகாதேவன் கூறல்.]

பூப்பவன் றானும் பூவாப் பொழிலெலாம் பூத்து
நின்று, காப்பவன் றானு மூழிக் கடையினிற் கன
லுந் தியாற், றீப்பவன் றானு மாயர் தேமொழி மாதர்
செங்கை, கூப்பிடத் துகில் வாரிக் குளிர்மரத் திவர்ந்த
கோவே. 394

உலகெலாங் கண்ண னன்றி யொன்றிலை யுணருங்
காலைக், கலவமா மயிலெ ருத்திற் கவின்கனிந் தொழு
கு மேனி, மலர்துழா யலங்கன் மாலை மாயனுக் காற்று
பூசை, யலர்தலை யுலகுக் கெல்லா மாற்றிய பூசை
யாமால். 395

[ஸ்ரீபகவான் சமந்த பஞ்சகத்திற் கோபிகாஸ்திரீகளுக்
குபதேசித்தல்.]

இருத்துநா மெங்கு முங்க ளிடத்திலு மிருக்கின்
றேமா, லுரைப்பின்மற் றும்மை நீங்கி யுறைந்ததை
யுண்டு கொல்லோ, வருப்பிள முலையீ ரென்று வரும்ப
விழ் பசும்பொற் கோட்டுத், தருக்கொடு வந்த நம்பி
தன்னிலை தெளிவித் தானே. 396

[வசுதேவருக்கு முனியுபதேசித்தல்]

விரைகமழ் துளவி னானை மெய்ப்பொரு ளென்று
நாடி, யருவினை யெறிதல் செய்யா தவனையோர் மகனெ
ன் றெண்ணி, யிருவினை வினையி னாலே யெறிந்திட

நினைத்தல் கங்கைத், திருநதி விடுத்தோ ராறு சென்ற
டைந் தாடல் போலும். 397

வியனில மன்ன தக்க வினைப்பயன் விழையா தாற்றின்
மயலறு மற்ற போத மாண்டமெய் யுணர்வு தோன்று
முயர்வற வுயர்ந்த வுண்மை யுணர்வுவந் துற்ற காலை
யியலிரு வினையி னீட்ட மிரியுமென் றியம்பி னூரே.

[வசுதேவர் ஸ்ரீபகவானை வரங்கேட்டல்.]

விண்ணிடை யொலியுங் காற்றி லூறும்வெங் கனலி
தன்னி, லொண்ணிற வொளியு நீரி லுற்றவஞ் சுவையு
மோங்கு,மண்ணிடை மணமு நீயே மற்றுனை மகனென்
றெண்ணு, தண்ணன்மெய்ப் பொருளென் றெண்ணு
மறிவுதந் தருளல் வேண்டும். 399

யாவுமாய் நின்ற நின்னை யிறைவனென் றறிந்தா
லன்றி, வீவிலா வினைக ளெல்லாம் வேரறக் களைய
லாமோ, பூவைபோ னிறத்தா யென்று புகல்வுழிப்
பூவை போலத், தேவகி வந்து செவ்வாய் திறந்தனள்
செப்ப லுற்றாள். 400

[ஸ்ரீபகவானை வேதம் ஸ்துதித்தல்.]

வியக்குஞ் செவ்வி விரைமலர் மெல்லிய
னயக்கு மார்ப நளின மலர்ந்துபார்
பயக்கு முந்திப் பரமநிம் மன்னுயிர்
மயக்கு மாயைநீ மாற்றிட வேண்டுமால். 401

முடியு மாரமு மொய்கதிர்ப் பட்டமுந்
தொடியுஞ் செஞ்சுடர் தூற்றுபொன் னூதல்போற்
படியு நீருங் கனலும் பவனமு
நெடிய வானமு நின்னல தில்லையால். 402

திருந்து நின்கதைத் தெள்ளமு தத்தினைப
பரிந்து நாளும் பருகுவ தல்லது
வருந்தி யைம்பொறி வாடற வீழ்சரு
கருந்து வார்கொ லறிவின ராழியாய். 403

பகைத்து நாடிநர் பற்றுமற் றற்றனை
யகத்து நாடுந ராய விருவரு
நிகர்த்துன் சேவடி நீழல்வந் துற்றனர்
மிகுத்து நின்னிலை விள்ளுவ லென்கொலோ. 404

மடலவிழ் கமலம் பூத்த மழைமுகி லனையாய் மற்றுன்,
றடமல ரனைய செம்பொற் றுணிழ லடைந்தா ரன்றே,
விடமுமிழ் கனல்கட் பேழ்வாய் வெருவரு முருவக் கூற்
றி, னடுதிறல் வெகுளி வேகத் தாழ்ற் குளிக்க லாரே.

விட்டலர் பசும்பொற் றோட்டு வேரியங் கமலத்
தோனு, மெட்டிநின் னிலைமை யின்னு மிற்றெனத் தெ
ரித றேற்றான்,வட்டவாய்த் திகிரிச் செங்கை வள்ளலவ்
விரிஞ்ச னீனப், பட்டவர் தெரிவர் கொல்லோ பார்க்கி
னின் னிலைமை தானே. 406

புனிதமற் றுன்னை யல்லாப் பொருள்பரப் பிரம
மல்ல, வெனவெடுத் துரைப்ப தல்லா லீறொடு தோற்
ற மின்றித், தனிமுத லாகி நின்ற சச்சிதா நந்த மூர்த்தி,
நினைவருஞ் சுடரே நின்னை நிகழ்த்துமா றறிகி லேமால்.

[இராச கன்னிகைகள் ஸ்துதி]

பள்ளத்தி னிற்பரந்து பாய்புனல்போன் முன்னமனை
கள்ளத்தி னுண்டகனற் கண்ணனுழைப் போய்த்திரும்
வுள்ளத் தினரா யுருவமட வார்விரக [பா
வெள்ளத் தழுந்தி மெலிந்துசில கூறினரால். 408

## 11-வது ஸ்கந்தம்.

[வசுதேவருடைய வினாவிற்கு நாரதருபதேசித்தல்]

அன்ன நாளினி லழல்சுடப் பசும்பொன்வார்ந் தன்ன, வின்ன ரம்புள ரியாழ்முனி வருதல்கண் டெதிர் போய், மன்னர் மன்னவன் மானவேற் றிறல்வசு தே வன், பொன்னந் தாதுதாட் போதுதூய்ப் பணிந்தனன் புகல்வான், 409

அரிது மானிட வாக்கைபெற் றிடல்பெறு மாக்கை
யெரியு மின்னென விறந்திடு மிறந்திடா முன்ன
மரக தப்பசும் பாசடைத் துளவநாண் மாலைக்
கரிய வன்றனக் கன்பரைக் காண்டலோ வரிதே. 410

விரிதி ரைத்துயின் மெய்ப்பொருண் வெளிப்படு ஞான்று
வருதி நீயொரு மதலையா யென்றதை யல்லாற்
றருதி யாலுயிர் தருநெறி யென்றுகேட் டிலனு
லருள வேண்டும்வீ டுறுந்திற மெனமுனி யுறைவான்.

மதமார்கரி முன்சொல வந்தருள்கார்
கதையார்நற வுண்டு கருத்தொடுபல்
விதமாகும் வினைப்பயன் விட்டெழில்சேர்
பதநாளும் வணங்கினர் பாகவதர். 412

அறைகின்ற சராசர மியாவுமெழி
னிறைகின்ற வுருத்திரு நேசமுறு
மிறையென் றறி கின்ற விலங்குமுளத்
துறைகின்றவ ருத்தம பாகவதர் 413

நிகரின்றி வளர்ந்த நெடுந்திருமால்
பகர்கின்றநல் லன்புசெய் பண்புடையோர்
புகரொன்றிய புந்திகொள் பேதையரென்
றகமொன்றிய வன்பு சிமிந்கமருள். 414

எண்ணும்முறை மூவ ரிடத்தினிலு
நண்ணும்படி செய்யு நலத்தினர்தாந்
தண்ணந்துணர் துன்னிய தாமமணி
வண்ணந்திகழ் திண்புய மத்திமரே. 415

துதிபெற்ற மலர்த்துள வோன்வடிவாய்
வதிவுற்ற வுருக்களின் மாத்திரமே
யிதமுற்றுறை கின்றன னென்றுதொழும்
விதமுற்றவர் மேவு பிராகிருதர். 416

அறமார்மனை யாரொடு மன்புசெயுந்
திறமாரெழின் மேவு சிறார்களொடு
மிறையோயிவன் யாமெம தென்பதற
வுறைவோர்களு முத்தம பாகவதர். 417

கருமத்தை யியற்று கருத்தருளத்
தருண்முற்ற வழுக்கறு மற்றவுட
னுரமுற்றறி வுற்றிடு முற்றிடிலோர்
பிரமத்தொடு மொன்றுவர் பேதமுறார். 418

பிழையுற்ற மனத்தொடு பேதைமையால்
விழைவுற்று விகன்மம் விளைத்தவர்க
டழைவுற்ற சினப்படர் தள்ளவுளங்
குழைவுற்று வருந்துவர் கும்பிதொறும். 419

போற்று கின்ற புனித மறைமுறை
யேற்று நின்றங் கியற்றல் கருமமாஞ்

சாற்று கின்ற மறைமுறை சார்ந்திடா
தாற்று கின்ற தறையில் விகன்மமே. 420

ஒரு கருமமு முள்ளுவர் தாற்றிடா
தரிதின் வைக லகன்மமென் றுருமால்
கரும மாற்றுழிக் கார்நிற வண்ணன்மேற்
புரியு மன்பில தேற்புக ரெய்துமே. 421

உழுது வண்டௌர் தாருறை வோய்புவி
முழுது முண்ட முதல்வனை யன்பொடுந்
தொழுது நல்ல தொழில்புரி வோமொரு
பழுது மின்றிப் பயன்பெறு வாரரோ. 422

அலகி லாவறி வான வரும்பொரு
ளுலகெ லாமுட லாக வுவந்துறைந்
திலகு பேர்விராட் டென்னவு முத்தொழில்
குலவு மூவ ருருவமுங் கொண்டதே. 423

கருதருங் கலியி லம்ம கார்முகிற் கொழுந்து போலுந்
திருமகள் கொழுந னாம கீர்த்தனஞ் செய்யு மாந்தர்
மருவுவா ரொருவீ டென்னில் வழங்கிய கலியி னன்று
பொருதிரு வுகமு மில்லை யுரைக்கினிங் கரச மன்னோ.

எற்றுநீர் பரந்து கோப்ப விறந்திடும் பூத மைந்து
மற்றிற வாது நின்ற மாயையின் றலைவன் றன்னைப்
பெற்றனை மதலை யாகப் பெறுவதென் பேறு சொல்லாய்
முற்றுநீ ருலகங் காத்த முத்தவெண் கவிகை வேந்தே.

அல்லியங் கமலம் பூத்த வஞ்சனப் புயலிற் றோன்று, மல்லலைத் தெழுந்த திண்டோண் மாயனைக் கண்ணிற் கண்டும், புல்லியு மோந்து மன்பு பூத்துளங் களிப்பப் பெற்றாய், சொல்லரு நெறிநீ சேர்தல் சொல்வதென் சுடர்செய் வேலோய். 226

[உத்தவர்க்கு ஸ்ரீபகவான் தத்துவமுபதேசித்தல்.]

அவ்வழி மால்கருத் தறிந்த வுத்தவன்
செவ்வழி படர்தரச் சிந்தை யுற்றனை
யிவ்வழி நிற்பிரிந் திறையு மூய்கல
னுய்வழி யென்னையு முடன்கொண் டேகுவாய். 427

பைத்தவெவ் வரவினிற் பதம்வைத் தாடிய
வித்தக வென்றுமுன் வீழ்ந்து போற்றுறு
முத்தவ னுளங்கொள வுரைத்தன் மேயினன்
றத்துவ நெறிமுறை தலைவ னங்கரோ. 428

ஊற்றினிற் களிறு துஞ்சு மொளியினிற் பதங்க மாயு, நாற்றத்தில் வண்டு வீயுஞ் சுவையின்மீ னுச மெய்து, மேற்றதோ ரிசையி னாலே யிறந்திடு மசுணங் கல்வி, யாற்றலிற் புலன்க ளைந்து மடக்கிட வேண்டு மன்றே. 429

ஐயமில் லறிவி னாலே யழிவின்றி யகண்ட மாகி, மெய்யெனும் பொருளைநாடி மேவருங் கான னீர்போல், வையக மாதி யாக வழங்கிய வுலக மெல்லாம், பொய் யெனு மாயை யாலே பொருந்துமென் றெண்ணல் வே ண்டும். 430

கண்ணுறு பவையி னாலுங் கருதனு மானத் தாலு, மெண்ணியுட் டெளிவு பெற்றிங் கேதமா மிவைக ளென்று, நண்ணுநற் குணங்க ளென்று நாடுத லொழிந்தி யாவுந், தண்ணறை துளித்த தாரோய் சமமெனப் பார் த்தல் வேண்டும். 431

இனிவரு மேழா நாளில் யாதவர் பொருது மாய் வார், பனிவரு கடலு மிந்தப் பதியினை மறைக்கும்

உ. வே. சாமிநாதையர் நூல் நிலை
அடையாறு, சென்னை-20.


வெய்ய, துணிவரு கலியும் பூமான் றுயருறப் பொருந்து மென்னத், துணிவரு மாசு சோரச் சாற்றினன் மாயன் றானே. 432

என்றலும் பிரிவிற் கஞ்சி யேங்கினன் குருவை நீங்கித், துன்றிய காட்சி யாலுஞ் சொல்லினு மானத் தாலு, நன்றுளந் தெளித லெங்ங னவின்றரு ளென முன் போற்றி, யொன்றுமுத் தவர்க்கு மாய னொரு கதை யுரைக்க லுற்றான். 433

[தத்தாத்திரேயர் எது மகாராசாவின் வினாவிற்கு விடையாக உபதேசித்ததைக்கூறல்]

தீதிலன் மகிழுந் தத்தாத் திரேயனென் றுலக மெல்லா, மோதவ தூத வேடத் தொருவனை யெது முன் கண்டு, நீதிசெய் யறம்பொன் காம நினைந்திலை சிறிது மின்ப, மேதினி லடைகின் றாய்நீ யெனமுனி யிசைக்க லுற்றான். 434

தரைபுனல் கனல்கால் வானந் தபனன்வெண் டிங்கள் வாரி, வரையுறை யரவு மான்கான் வருகரி பதங்க மீன, முரலளி கணைசெய் கின்றோன் மொழிதருங் குமரி தேனீ, யுரைதரு புறவு தாசி யூன்கவ ரன்றி ஞகம்.

உறைந்தநூற் சிலம்பி ணைந்த ருதுவண் டெடுத்த கீடஞ், சிறந்தன விவைகா லாறுஞ் சிந்தையிற் குரு வென்றாக்கி, மறந்தரு மிவைக டா மற்றிவை நலனு மென்றிங், கறிந்தன னின்ப முற்றே னவ்வகை யரச கேண்மோ. 436

பரிவின் வெட்டினுங் கல்வினும் பயன்பொறாத் தனித்தும், புரியு நல்லனைம் மாறெதிர் பொருந்திடா

தசலத், தருவி நீரட விக்கனி முதலிய வளித்து, மிருதி
றத்தையு மெனக்கறி வித்தநித் தரையே. 437

நளிகொ ளும்முரு நினைக்கினுங் காணினு நலஞ்
சேர்ந், தொளிகொ ளும்பெயர் வழுத்தினு மன்னவ
ருளத்தை, யளிகொ ளும்புனி தம்பெற வாக்கலு மருந்
தண், டெளிவு மப்புவி னிடத்தினின் றறிந்தனன் றெ
ரிக்கின். 438

இருந்தி ராகமோ டியம்பரும் வெறுப்பற வெறிந்து
பொருந்து கின்றன வியாவையும் பொசிப்பது மெவரும்
விரைந்து வந்தணு காவகை வீற்றிருப் பதுவுந்
திருந்து கின்றநற் காந்தியும் பெற்றனன் றீயின். 439

வளர்ந்த காதல்வெவ் வெறுப்படைந் தாரென வ
ரினுந், தெளிந்த யோகிய ருயிர்க்கவை யில்லெனத் தெ
ரிந்தேன், விளைந்த வாசமும் விளம்புதுர்க் கந்தமு மேவி,
யளைந்து வந்துமக் குணம்பெறா தநிலமென் றறிந்தே.

கண்ண கன்றிடு மிடத்துள்வான் கடத்துள்வா
னெனவா, னெண்ண நின்றன போகவொன் றுயிரைந்
தகனுற், பண்ணு கின்றதன் மாயையிற் பற்பல படைப்
பாய், நண்ணு கின்றதும் பிரமமொன் றென்றுணன் கறி
ந்தேன். 441

உறைவு றுவிட மின்றெனா வுறையும்வா னென்றே
குறைவு றுவகை கண்டதிற் கூறுமொன் றுளுங்
மறைவு றுதொரு குறையுமன் றதுமற் றெங்கு
நிறைவு றுதவை காதென நினைந்தனன் பிரமம். 442

அருவ மாமறி வானவ னுக்கைகள் பலவு
மொருவ னுகியே யுறைகுவ னென்பதை யுணர்ந்தேன்

பருதி வானவ னொருவனே யாய்ப்பல குடத்தின்
மருவு நீர்தொறு நிழல்பல வாயுறன் மதித்தே. 443

திங்க ளோடொறும் வளர்தலுந் தேய்தலுந் தெரிக்கி
னங்கண் மாநிலம் † விளங்குவெங் கதிர்க்குண மதனாற்
றங்கு மோரறு வகைவிகா ரங்களுந் தமியே
னிங்கு நாடின னுடற்கலா லுயிர்க்கிலை யெனவே. 444

விளங்கு மெய்ப்பொரு ளாக்கைமே வினுமதன் குணங்க, ளுளங்கொ டெண்ணிலப் பொருட்கிலை யென்பது மோர்ந்தேன், களங்க மென்பது மதிக்கிலைக் கருதுமக் களங்கம், வளங்கொள் பூமியின் சாயையென் பாரதை மதித்தே. 445

நிறைவி னோடொரு குறைவற வமைந்தய னீர்வந்
தறையு நீடிரைக் கூடினு மதன்குண மடையா
துறையும் வாரிகம் பீரமுற் றென்பதை யுணர்ந்திங்
கிறைவ யானுமக் குணங்களை யுவந்திலைந் தனனால். 446

உற்ற வுற்றவை முயற்சியின் வருந்திடா துண்ணுங்
குற்ற மற்றநீண் மலையரா வென்பதைக் குறித்திங்
கற்ற மற்றநல் லறிவினர்க் கிதுவழக் கென்னப்
பெற்ற பெற்றன முயற்சியற் றிருந்தனன் பெரியோய்.

மடந்தையர் மொழியுங் கானமுன் கேட்டு மன்னவன் மகண்முலை மணந்தான், கடந்திரி கலையின் கோடு பெற் றுயர்ந்த கருதருந் தவனெனல் கேட்டும், படர்ந்திள மறிமான் வேட்டுவன் கானம் பகர்செவி மடுத்தவன் வலைமேற், கிடந்தன கண்டும் வெவ்வினை கேளேன் கேட்பது நாமகீர்த் தனமே. 448

துதிதரு வயவர் படுகுழிச் செலுத்துந் துகளறு பிடியையுள் ளுவந்து, மதகரி தழுவி வயவர்கை வசமாய்

---

† விளங்குவெண் என்றும் பாடமுண்டு.

வயங்குதல் கண்டுமட் டொழுகுந், ததைமலர்க் குழலார் தனகிரி தழுவிற் றணப்பரி தாய்மதன் வசமாய், விதலை யின் மனமாய் மயக்குறு மென்ன விடுத்தனன் புணர்ச்சி மற் றன்றே. 449

விதலை - நடுக்கம்.

ஒளிகொளும் விளக்கி னழலுருக் கண்டி துணைவு கொ லெனவதிற் சுழன்று, விளிவுறும் பசிய பதங்க முன் கண்டு வெய்யதித் தொழிலெனக் கருதித், தெளி வுகொண் முனிவ ராயினுங் காணிற் சிந்தைகொண் டனுதினம் வருத்திக், களிகொளுங் கருங்கண் மடந்தைய ருருவங் கருத்தொடுங் காண்கில னம்மா. 450

வஞ்சநெஞ் சினராய்த் தூண்டிலின் வளைந்த வன் சுவை யூண்பெற வடைந்து, துஞ்சுத லடைந்த மீன் குழுக் கண்டு துன்னுமை வகையெனும் வாயுப், பஞ்சர மென்றுற் றுடலுறை வதற்காய்ப் பசிக்கன றணிப்பதற் கன்றி, யஞ்சுவை யிவையென் றுசையி னலம்வந் தருந் துத லொழிந்தன னடிசில். 451

வண் டினஞ் சிறிது சிறிதென வலரு மலர்தொறும் வருமுரு குவப்பா,லுண்டன திரிதல் கண்டன னியானு முரைக்கினித் தொழிலது கென்ன, வெண்டரு நகரின் மனைதொறுங் குறுகி யெனதொரு காயிதை யையங், கொண்டனன் சிறிது சிறிதெனக் கொள்ளக் கொள்க லத் தேற்றிடா தன்றே. 452

ஒருமனை மலரே யுவந்துமென் முருகுண் டுறைத ரு மொருசுரும் பிரவில், விரியிதழ் குவிய மலரகப் பட் டு விளிந்தது கண்டொரு நாளுங், கருதிய நகரி லொரு மனை யுறைந்து கவின்பெறு மூனைவுவக் திருக்கேன்,

மருவலர் மகுட கோடிக ளிடறு மலர்புரை தருபத யுக
த்தோய். 453

முந்த வேயொலி யாதியி லொருகுண முன்னிப்
பந்த மோடிட ருற்றிறந் தனபல வென்று
லைந்து சேர்குணங் களுமொருங் காசையி னடைந்தோ
ருய்ந்து போநெறி யுண்டுகொ லோமதித் துரைக்கின்.

பம்பி ரும்பொறி வழிமனம் பரந்துறு தடக்கி
யம்பு செய்ததன் கோணறத் திருத்தின னவன்போல்
வெம்பு மைம்புலன் வழிமனம் விரும்புதல் வெறுத்துக்
கம்ப மில்லறி வாம்பொரு ளறிந்தனன் கருத்தால்.

தாயுந் தந்தையும் வேற்றொரு நகர்வயிற் சார்நா
ணேய மானதன் மணத்திற நேர்தர நிகழ்த்த
மேய சிருற வோர்க்குண வருத்துதல் வேண்டித்
தூய தாமெழிற் குமரிநெற் குத்துத றுணிந்தாள். 456

பெரிய கைவளை யார்ப்பவர் கேட்கினிப் பேதை
யுரைசெய் நல்குர வுற்றவ ளென்பரென் றுணர்ந்தாங்
கரிய கைவளை கழற்றின ளொன்றுவைத் ததனாற் [ன்.
கருது வெவ்வுரை வருங்கொலென் றுற்றுரை கடிந்தே

துன்றி வைத்ததண் டேனுறு திழந்துசூழ்ந்
தெடுக்க,வொன்று மற்றவ ராலுயி ருலர்ந்தமை யுணர்ந்
து, நன்ற றிந்துபற் றறிந்தவர்க் கொன்றையு நாளைக்,
கென்றுவைப்பது தீதெனத் தெளிர்தன னிறையோய்.

ஈனி றக்கொடு வேட்டுவன் படுத்தநீள் வலைவாய்த்
தூஙி றப்பெடை பார்பினக் துயர்தல்கண் டழுங்கித்
தானு முற்றதி லொருபுற விறந்தது தன்னு
னூனமுற்றிடு மெனத்தமர்கேண்மையிக் கொழிந்தேன்.

சோதி மாடந் துலங்கு மிதுலைவாழ்
பேதை யாமொரு பிங்கலை யென்பவ
ளோது மாசை யொழிப்பது நன்றெனக்
கோதி லாக்குரு வானது கூறுவாம். 460

பேசு கின்றவப் பிங்கலை யென்பவ
டாசி யாணலன் விற்குந் தகைமையா
ளாசை யாம்பொரு ணல்குநல் லாடவர்
பூசு சாந்தப் புயம்புணர் வாளரோ. 461

இன்ன வண்ண மிரும்பொரு ளீட்டுநாட்
சொன்ன வண்ணம் பொருள்பெறத் தோய்பவர்
மன்னும் வண்ணமோ ரல்லில் வராமையா
லன்ன வண்ண நடைய ளயர்ந்தனள். 462

மறுகி னூடு வருபவர் யாரையும்
பெறுக நீபொரு ளென்றுறும் பெட்பொடுங்
குறுகி யீய்ந்துடன் கூடுவ ரோவெனச்
சிறுகு நுண்ணிடை பார்த்துளந் தேம்புமே. 463

நேச மாய்நெடு மாட நிரைபுகு
மாசை யாம்வளி யாங்குநின் றுந்தலால்
வாச வார்க்குழன் மீள மறுகுறு
மூச லாடு பவரையு மொக்குமே. 464

வாயி னின்று மயங்கு நடுவிர
வாய தென்றயர் வெய்தி யகம்புகு
நேய நன்பொரு ணெஞ்சி னினைந்தழும்
பாயன் மீது படுக்கும் பதைக்குமே. 465

இன்ன தன்மையங் கெய்திய வேந்திழை
பொன்னி னூற்றவிவ் வாசைபொல் லாததென்

றுன்னி யுன்னி யொழிந்த மனத்தொடு
மன்னர் மன்ன மகிழ்ந்திவை சொல்லுமால். 466

துயர மோதொலை யாதுசெய் யாசையுஞ்
செயிரி னோங்கியுஞ் சென்றடங் காவென
வயிர மாகிய வாள்கொடு வெட்டிடா
துயரி னோர்க்கெங் குவகையுண் டாகுமே. 467

உன்னிற் போத வுருவத் தலைவனுண்
மன்னிப் போகம் வழங்கி வதியவு
மின்னைப் போல்விளி நாதனை வீதிதேர்ந்
தென்னைப் போலயர் வாரெவ ருண்டரோ. 468

சலத்தை யுந்தசை யென்பொடு சாற்றும்
மலத்தை யும்மயிர்த் தோலின் மறைத்ததை
நலத்த தென்று நயந்து நவிந்தவென்
புலத்தை யென்கொல் புகலப் பெறுவதே. 469

என்று கூறிய வேந்திழை யீறிலா
தொன்று மாசை யொழித்துவப் பெய்தினு
ளன்றி யானவ் வகையறிந் தாசையை
வென்றி வீர விடுத்தனன் வேரொடும். 470

அன்றி யூன்கவர்ந் தந்தாத் தேகுழித்
துன்று மோர்புட் டொடர்ந்து பறித்தலு
மொன்றவ் வூனை யொழிந்துவப் புற்றதா
லென்று மோர்பொரு ளுற்றிட ருற்றிலன். 471

சுற்றின் மேவிய சொல்கறை யான்புரி
புற்றின் மேவு புயங்கமென் றோர்ந்தபின்
னுற்றி யானுஞற் றேமென் றமர்தொறு
மற்று ளோர்செய் மதிக்குகை வைகுவேன். 472

நுண்ணி தான சிலம்பியுண் டாக்குறா
னண்ணி யேயுறைந் துண்பதை நாடியா
னெண்ணி லாவுயிர் தந்தவை யேய்ந்துறைந்
துண்ணு மோர்பொரு ளேயென் றுணர்ந்தனன். 473

மான மோடவ மானம டைந்திடா
தான நீங்கி யுவந்த சிறுவனைத்
தேனு லாந்தொடை யோய்முனந் தேர்ந்ததால்
யானு மோகையுற் றேனவை யற்றரோ. 474

அன்பி னாயினு மாசையி னாயினும்
வன்ப யத்தின் வயிரத்தி னாயினு
நன்பெ ருந்திரு நாதனை யேநினைந்
தின்ப மவ்வுயி ரெய்துவ தென்பதை. 475

ஈங்க ரிந்தன னியானுற் றெடுத்தொரு
பாங்கர் வைத்துப் பரிவிற் பறந்தய
னீங்கும் வண்டை நினைந்த பசும்புழு
வாங்கவ் வண்டொரு வானதுங் கண்டரோ. 476

வாக்கி னைக்கடந் தோங்கிமற் றெங்கணு
நீக்க மின்றி நிறைந்த வறிவினை
யூக்க முற்றுணர் தற்கிட மாதலி
னாக்கை யுங்குரு வான தாசனே. 477

மடல்வி ரிந்த மரைமலர் வைகுவோன்
சடம னைத்தையுந் தந்து முவந்தில
னிடா றுக்குமென் றெண்ணிநன் மானிட
வுடல்ப டைத்தபி னோகையுற் றுன்முனம். 478

மாந்த ராக்கையிம் மாநிலத் தெய்துதல்
வேந்தர் வேந்த மிகவரி தாயினும்

காய்ந்த கண்ணமன் கைப்பட் டிருக்குமென்
றுய்ந்து சிலத் தமர்தனன் றுருகுமே 479

உறக்க மும்விழிப் பும்முறுந் தன்மைபோற்
பிறக்கு மாக்கை யிறக்குமெய்ப் *பெட்பொடு
மிறக்கு மாக்கையு மேய்ந்து பிறத்தலிற்
றுறக்க வேண்டுமெய் யாசையைச் சூழ்ச்சியோய். 480

* பெட்பு=ஆசை.

இத்திற மெதுவென் பானம் மெழிற்குலத் திறைவன் கேட்ப, வத்திரி புதல்வ னென்ன வறைதருந் தவத்தின் மிக்கான், சித்துரு வான தத்தாத் திரேயன் முன் செப்பினனென்,றுத்தவர்க் காழி மாயனுவந்துரை யாடி னனே. 481

(ஸ்ரீபகவான் உத்தவர்க்கு ஞானதன்ம முரைத்தல்).

அவ்வியம் விட்டறி வுற்ற வுளத்தோ
யிவ்வகை யிங்ங னிசைத்த கருங்கார்ச்
செவ்வி நிறத்திரு மாலவ னுக்கு
வெவ்வினை கட்டற மீள விரிக்கும். 482

நித்திய மென்ன நிகழ்த்திய கன்ம
முத்தவ வன்பி னுஞற்றுத னன்றுஞ்
சத்துட லென்று தரும்பல னுள்ளிச்
சித்த மொடும்வினை செய்வது தீதே. 483

அறிவினி லாக்கை மூன்று மசத்திய மென்று நீக்கி, நிறைவுறு மறிவு தானே நித்திய மென்று தேர்வோர், பிறவிவெங் கடலை யொன்றார் பிறங்குவர் பிறங்கும் வண்ண, மறைதுளித் தொழுகுந் தாரோய் நவிற்றுவ னினிது கேண்மோ, 484

தருக்களி னுருவ மெங்குந் தழனிறைந் தென்று நீங்கா, திருக்கினுங் கடையின் வேறா யெரிக்குமவ் வனத்தையேபோற், றிருக்களர் கால மூன்றுஞ் சேர்ந் துறை யறிவு தேரி, னுருக்கள்வே றாக வேறா யுடனு றும் பிறவி நீங்கும். 485

வளர்தருந் தருக்க ளாதி வயங்குமோர் தழலே போல, வொளிகொளு முருக்க ளாதி யுறையுநல் லறிவு மொன்றே, யளிதரு மியம மாதி யருங்குணத் தமர்மா ணாக்கன், றெளிவுறு குரவன் சொல்லாற் றேறுதல்வே ண்டு மாதோ. 486

போற்றுகீ ழரணி போல்வான் புகரறு குரவ னுங் குற், றேற்றமே லரணி போல்வா னியைந்தநற் குண மா ணாக்கன், மாற்றறுஞ் சந்தி போலும் வழங்கிய வுப தேசச்சொற், றேற்றிய வங்கி போலுந் தோன்றுநல் லறிவு மாதோ. 437

அரும்பல நெஞ்சி னுள்ளா னணிவினை விளைத்தல் வேண்டுந், தரும்பய னடைய வேண்டிச் சாற்றிய மக ங்க ளாதி, வரும்பல வினையுஞ் செய்வோன் வான்மிசை ப் போக மாந்திப், பெரும்பலன் றொலைந்த காலைப் பிறந்திறந் தயர்த றிண்ணம். 488

அழிவுறும் போகம் வேண்டி யருவினை யிழைத்து வான்போய்க், குழையணி யரம்பை மாதர் குவிமுலைப் போக மாந்த,லெழிறிக ழரச னல்வா ளேற்றவே யேகு கள்வோ, ருழையுறு நகரி னேர்பா லூணிரந் தருந்தல் போலும். 489

*வாள்=வாசி.

பொன்னகர்ப் போகம் வேண்டிப் பொருந்துநல் வினைசெய் மாந்தர், துன்னுபற் பலவா மான்மாச் சொல்லுமோ ரீச னில்லை, யுன்னிலென் றுரைப்ப ரோரா ரும்பர்கோ ளாதி யாமே, ரென்னெழி லேவ லஞ்சி யிய ற்றின ரியங்கு வாரே. 490

என்றலு மொன்று தானே யாவுமென் றுரைத்துப் பின்ன, ரொன்றுமென் னேவ லஞ்சி யுஞற்றுவ ரும்ப ரென்றாய், நன்றுளந் தெளியவீது நவின்றரு ளென்ன வேந்து, மன்றலந் துளவத் தாரான் வழங்கினன் விள ங்க மன்னோ. 491

மாயையா முபாதி யாலே வழங்கின பலவல் லாமற், றாயவா மணியிற் பொன்பொற் றுலங்குமெவ் வுலகு மாகி, மேயதோர் பொருளே யாகும் வினையினாற் பேத மாகிக், காயமே தாமென் பார்கள் கலங்குவர் வெருக் கொண் டம்மா. 492

நித்திய முத்த னென்று நித்திய பெத்த னென் றுந், தத்துவந் தெரிந்தோர் சொல்லுந் தன்மையா'தெ ன்று கேட்கி, னுத்தவ வுரைப்பன் கேண்மோ வொப் பின்றி யுயர்ந்த வீசன், முத்தனுஞ் சீவ னென்பான் மொழிந்தவப் பெத்த னாமே. 492

சீவனு மீசன் றானுஞ் செப்பிய வாக்கை தோறு, மேவரு முபாதி யாலே விழைந்தநல் லின்ப துன்பந், தாவிலாச் சீவ னுண்ணுஞ் சார்ந்துண் ணுந் தன்மை வெய்யோன், பூவலர் வாவிநீருட் பொருந்திநின் றசை தல் போலும். 493

கலந்தன பொசிக்குஞ் சீவன் கனவுகண் டிருக் கின் றோனு, மெலிந்தொன்றும் பொசியா வீசன் விழி

த்தினி திருக்கின் றேனு, கலந்தரும் வித்தை யென்றுங்
கலிவுறு மவித்தை யென்றும், வலந்தரு மெனது மாயை
மருவுட னிரண்டுண் டாமால். 494

அவித்தையா முடல முற்றோ ரளவறும் பிறவி சேர்
வார், பவித்திர வித்தை யென்னப் பகர்தரு முடல முற்
றோர், புவித்தலத் தரசவீட்டிற் பொருநதுவர் புகன்
றோர் தன்மை, நவிற்றின்மா வித்தை யென்னு நலந்திக
முடல முற்றோர். 495

கூறிரு வினையி னொன்றார் கொடுங்கதை கொண்டு
மோதிச், சீறினர் வைது ளோர்க்குஞ் சிறப்புநன் கியற்
றினோர்க்கு, மாறறுஞ் சமமே யாகி மவுனமுற் றிருப்
பர் மற்றோ, ராறறி யரச தம்மை யறிந்திடார் வருந்து
வாரே. 496

என்னிடத் தன்பு செய்யா தியற்றிய வினையி னோ
ரு, முன்னுபல் வினைக ளியாமே யுஞற்றுவ மெனச்
செய் வோரு, நன்னயக் காம மில்லா நாரியர்ப் புணர்ந்
து ளோரின், றுன்னுமைப் பசுக்காத் தோரிற் றுயரு
வர் பயன்பெ றாரே. 497

மன்னுமைம் புலனு மாய்த்து மருவிய மனத்தை
யென்று, மென்னிடத் திருத்தல் வேண்டு மிருத்தலின்
கரிதா மென்றிற், சொன்னநல் வினைசெய் தாலுந் துக
ளறு பவைசெய் தாலும், பன்னுறு மன்பி னர்தப்
பயனெமக் களித்த னன்றே. 498

அளிசெயு மனத்த ராகி யைம்புல னடக்கி யென்
று, மொளி யொடு புனித மேன்மை யுவப்பருஞ் சம
முற் றுள்ளார், தெளிவுறும் பெரியோர் தம்மைச் சேரி
னல் லன்பு கூருங், களிதரு மன்பு கூரிற் கலக்குநல் லறி
வு தானே. 499

இயம்புமென் னிடத்தி லன்பிங் கியற்றுத லெவ்வா
றென்னி, னயஞ்செயென் சரிதங் கேட்ட னவிற்றுத
னுமம் போற்றல், பயன்றரு மெனது கோயிற் பணி
விடை முதல செய்தல், வயந்தரும் பொறுமை யுண்மை
மருவியெற் பழிச்ச லாமால். 500

பருதிசெந் தழல்வான் பூமி பசுவரு மதிதி யன்
பர், விரிபுனல் வளிதன் னுக்கை விளம்புபல் லுயிர்க
ளென்ன, வுரைதரு பதினென் றின்பர் லுவப்பொ
டென் பூசை யாற்றி, னிருவினைச் சிமிழ்ப்பு நீங்கு மின்
பவீ டெய்து மன்றே. 501

தினகர னிடத்துப் பூசை செய்வது மறையிற்
போற்ற, லனலிடை யாற்று பூசை யாகுதி முறையிற்
பெய்த, னினைவரும் வானிற் பூசை நெஞ்சினுட் டியா
னஞ் செய்த, லினிதுறுந் தரையிற் பூசை யெந்திர
மெழுதி யேத்தல். 502

துதிதரும் பசுவிற் பூசை தொழுதுபுல் லுதவ றுன்னு
மதிதிதன் னிடத்திற் பூசை யகமகிழ்ந் தடிசி னல்கன்
மதிதரு மன்பர் பூசை மருவுதந் தமர் போற் காணற்
றதைமலர்ப் புனலிற் பூசை தருப்பணம் புரித லாமே.

பேசிய வளியிற் பூசை பிராணனைக் காத்த லாகுங்
காசிறம் முடலிற் பூசை கலன்றுகில் புனைத லாகு
மாசில்பல் லுயிரிற் பூசை வழங்குதம் முயிரே போல
வாசறு முயிரின் கூட்ட மனத்தையும் புரத்த லாமே.

சங்கொடு திகிரி வில்வா டரித்தவெம் வடிவு பெற்ற
பொங்கெழி லுருக்க ளுடிப் பூசைசெய் வதுவு நன்றாம்

கொங்கலர் சோலை வாவி குளங்களுண் டாக்க றுனு
மங்குலி னுதவும் வேந்த மருவுமென் பூசை யாமே.

நண்ணிய வன்பி னாலே நயந்தெனை யடைதல் போல, வெண்ணுசாங் கியத்தி னாலு மெண்வகை யோகத் தாலும், பண்ணுறு தவத்தி னாலும் பகர்தரு விரதத் தாலு, மண்ணகத் துறைவோ ரென்னை மருவுதற் கெளிதன் றம்மா. 506

சொல்லுநற் றவரைச் சேரிற் றுகளிலா வன்பு வந்து, புல்லுமென் றுரைத்த தல்லாற் பொருந்துதம் புந்தி யாலே, வல்லையி னன்பு செய்து வந்தெனை யடைந்து ளோர்க, ளல்லலிங் கொழிந்து நின்றோ ரளப்பில ரறைவன் கேண்மோ. 507

மாவலி முதலா வழங்குதா னவரும் வண்புகழ் விடணன் முதலாந், தாவிலா வலிசே ரரக்கரு மகஞ்செய் தவத்தினர் மருவெழின் மடவார், கோவியர் முதலா மடந்தயர் குழுவுங் குஞசரஞ் சாம்பவ னனுமான், காவில்வாழ் கவியின் றலைவனே முதலாக் கருதரும் பற்பல விலங்கும். 508

அருச்சுன முதலாந் தாவரக் குழுவு மமரும் யமுனையின் கரைசே,ருருச்சுனை யடைந்த காளிநகன் முதலா முரகரும் பறவையு முரைக்குந், திருக்கிளர் வணிகர் பின்னவர் வேடர் செப்பரும் பூரியர் முதலாத், தரைத்தலத் தமர்ந்த மாக்களு மாகுஞ் சாற்றிலிங் கின்னமும் பலரே. 509

அருச்சுனம்—மருதமரம்.

பொற்புறு மதுரைப் பதியினின் முன்யான் போனபின் கோவியர் யாரும், பற்பல யுகமே யொருகண

மாகப் பரிவொடு மென்னையே நினைந்து, சொற்பல நதியுங் கடலினை யடைந்து சொல்லிய நாமரூ பத்தை, முற்பக லொழித்த போற்றமை மறந்து முன்னுமென் றனை யடைந் தனரால். 510

உரைப்பது முரைப்பக் கேட்பது மினிவே றொன் றிலை யெனவுளத் துணர்ந்து, திரைப்பனிக் கடல்சூழ் புவிமுத லுலகாய்ச் சேர்ந்துநூல் படத்துரு வாகி, யிருப்பது போல வெங்கணு மிருக்கு மென்னையே நினைந் தனை யாகின், விரைபசுந் துணர்த்தா ருத்தவ நீயும் வெவ்வினை யொழிதிமற் றின்றே. 511

மாயையென் றுரைக்கும் வித்தினிற் பிறந்து மரு வுமுக் குணத்தடி பருத்து, மேயவிந் தியமாம் பதின் சினை விடுத்து வேட்கையாம் வேர்பல வுடைத்தாய்ச், சேயுயர்ந் திரண்டு வினைப்பயன் பழுத்துச் சீவனோ டீசனென் றுரைக்குந், தூயபொற் பறவை யிரண்டுட னிருப்பத் துலங்குமா லாக்கையாந் தருவே. 512

சொல்லிரு வினையின் பயனெனும் பழத்தைத் தோற்றிய சீவனும் பறவை, புல்லிநின் றருந்து மீச னும் பறவை பொசித்திடா தறிந்துகொண் டிருக்கு, நல்லெழிற் குருவான் ஞானவா ளெட்டி நவிற்றுடற் றருவறத் தடிந்தான், மல்லுயர் புயத்தோ யிரண்டற வொன்றுய் வரம்பிலா வின்பமும் வருமே. 513

(குணவிகார முயிர்க்கிலை யெனவுரைத்தல்.)

வளர்ந்துவரு குணமூன்று மனத்தையறு சரித்தி ருக்குந், தளர்ந்துமன முன்தொடர்ந்து சாற்றுகுணத்

தொடுமிருக்கு, முளர்ந்துநறை யளிநுகர்தா ருத்தவ னே யொண்புலத்தால், விளைந்தகுணத் தொடுமனத்தை வெவ்வேறு பிறித்தறியின். 514

உத்தமமென் றுரைக்கும்வினை யுண்டாஞ்சத் துவத்தெனவு, மத்திமமென் றுரைக்கும்வினை வயங்குமிரா சதத்தெனவும், வித்தகனே யதமவினை விளம்பியதாமதத்தெனவு, மித்தகைய குணமூன்றி னியலும்வினை யொருமூன் றும். 515

மறந்தருதா மதத்தினையு மன்னுமிரா சதத்தினையு' நிறைந்தபுகழ்ச் சத்துவந்தா னீக்கினபின் னீங்கிடுமாற், சிறந்துசெறி யருஞ்சுரத்திற் சேர்ந்துவளர் கிளையிடத்துப், பிறந்தவெரி யவையெரித்த பிறகாங்கு மறைவது போல். 516

என்றலுமுக் குணத்தினொடு மியம்புமனத் தொடுநீங்கா, தொன்றியுறை யுயிர்பிரிந்திங் குடலொழிப்ப தெவ்வாறோ, நன்றறியும் படிபகுத்து நவிற்றெனவுத் தவன் கேட்பத், துன்றுமலர்த் தண்டுளவத் தொடையல்புனை முகின்மொழியும். 517

வன்ன மலரோன் மருங்குசன காதியர்நீ
சொன்னபடி யேயிது சொல்வா யெனவினவ
வென்னை யயனுள் ளிருணீக் கெனநினைந்தா
னன்ன வுருவுற் றடைந்தே னடைதலுமே. 518

மாமல ரோனாதி மருவினர்க ளெல்லோரு
மேம வெனினவுரு வெய்தியநீ யார்கொலென
நாம வறிவாகி நண்ணுபொரு ளொன்றேயாங்
காம ருடலைக் கருதிற் றிவணெனினும். 519

தோற்றுருவ மெல்லாந் துலங்குமைந்து பூதமல்லால்
வேற்றுருவ மொன்றும் விளம்பிலிலை யாதலினு
லேற்ற வெகினவுரு வெய்தியநீ யார்கொலெனச்
சாற்று மொழிக்குத் தகுபயனென் றுற்றிலதே. 520

என்று முனங்கூறி யெழிலார் மலரயனே
டொன்று தவத்தோ ருவப்பினொடுங் கேட்டிறைஞ்ச
வன்றுபுனற் பாற்பிரிக்கு மன்னவுரு வாகியயான்
வென்றிதிகழ் வைவேலோய் மிட்டுமிவை செப்பினுல்.

வழுத்தபெருங் குருவாலு மருவறுபோ கத்தா லும், தழைத்துவரும் பேதைமையைத் தள்ளியொன்று ய்ப் பாராதே, பழித்தவிருஞ் செயல்பொருந்திப் பற் பலவாய்க் கண்டிருப்போர், விழித்திருந்துங் கனவுநனி மேவினரைப் போலுவரே. 522

சித்தமுஞ் சித்தத் துதித்தமுக் குணமுஞ் சீவனுக் காக்கையாந் தெரிக்கிற், சத்துவ குணத்திற் சாக்கிர முண்டாஞ் சாற்றிய கனவிரா சதத்தா, மத்தகை யவத் தை யிரண்டலான் மூன்று மவத்தையுந் தாமதத் தாகு, மித்தகை யவத்தை மூன்றையு மடையா திடைவிடா தயிரறிந் திருக்கும். 523

சாற்றிய குணமு மாக்கையு மனமுந் தானல வென் பதை யறிந்தாற், போற்றிய வாக்கை யுடனிருப் பது வும் போவது மறிந்திடா ராகி, யேற்றதம் புயமேற் றுகில்கழி வதுவு மிருப்பதும் வெண்ணுறை பருகி, மாற் றரு மதத்தி னறிந்திடா தொழுகு மாக்களைப் போலு வர் மாதோ. 524

யானென தென்னுஞ் செருக்கற வெறிந்தோ ருக் கையோ டுறையினு மாக்கை, தானெனா தெனமுன்

னிழைத்தவெவ் வினைதான் றருபலன் றொலைதருங் காறும், போனக மருந்திப் பொன்றிய பின்பு புகலுட லொன்றையும் பொருந்தா, னூனுட லடைந்த வுறக் கமற் றுறைவோ ருறுவரோ வொருகன வுரைக்கில்.

சொல்லு புந்தியிற் றோன்றிய சீவனுக்
கல்லல் செய்குண மில்லை யறிவிலென்
றெல்லை யற்ற விருந்தவர் தம்முளம்
வல்லை யுற்று வருட்டினன் முன்னமே. 526

[யோகசித்தி யுரைத்தல்.]

கருதருங் காம மென்றுமுன் னுனக்குக் கழறு நற் சித்தியா தென்னி, னருவமா யறிவா யாநந்த மய மா யாகுவ னெனவெனை நினைத்து, விரைகமழ் நறு ந்தா ருத்தவ யோகம் விதித்தவா றினிதுற விழைத் தோர், பொருவிலவ் வாறே யானந்த மயமாய்ப் பொரு ந்திவீற் றிருப்பர்தா மன்றே. 527

(விபூதி யுரைத்தல்.)

வெளியு முள்ளும் விமலநீ யாயினுந்
தெளிக லாரொரு யோகமுஞ் செய்கலா
ரெளிய தாமுனை யெங்ஙனஞ் சேர்வதென்
றொளிகொள் வேற்படை யுத்தவ னோதினன். 528

அனக னன்னது கேட்டறை கின்றன
னினைவ ருஞ்சம ரேர்ந்தில னுகிரீ
வினவும் வண்ணம் விசயனுங் கேட்கயான்
சினவு வேலவ செப்பினன் முன்னமே. 529

நீதி முத்தொழி லுங்கிலே செய்தலும்
பூதத் துள்ளுயி ரும்பல பூதமு

மேத மற்றயா னுதலி னென்னுரு
வோதின் முற்று முரைக்கடங் காதவே. 530

போறிய டங்க வடக்கிய பொற்பிலா
தறைபு முள்ளத் தவர்களு மென்னுரு
வறியும் வண்ணமியா னன விபூதியுட்
குறைவி லோய்சில கூறுவன் கேட்டியால். 531

வண்மை யாமகத் தாக்கும் வயங்குமோர்
திண்மை யாமகத் தாகவுஞ் சேர்ந்தியா
னுண்மை யான பொருளி னுவலரு
நண்மை யாமுயி ராகவு முற்றனன். 532

அந்த முற்ற வெழுத்தி லகார நான்
மந்தி ரத்தின் மறைசொல் பிரணவஞ்
சந்த முற்றுத் தயங்குசந் தச்சினி
னந்த லற்றகா யத்திரி நானரோ. 533

சீல மேவிய தேவரிற் றேறல்பாய்
மாலை நீண்முடி வாசவன் வான்றமுற்
பால லோசனப் பண்ணவர் தங்களி
னீல லோகித னென்னவு நின்றனன். 534

வளம்பொ ருந்தும் வசுக்களி லக்கினி
விளங்கு கின்றவா தித்தரில் விட்டுணுத்
துளங்கி ரும்புனற் றேன்றிறை யாகுநல்
துளந்தி ருந்தறி வுற்ற வருணனுன். 535

போற்று கின்ற புரோகிதர் தங்களின்
மாற்ற ருஞ்சொல் வசிட்டனிவ் வையகஞ்
சாற்று ஞானச் சதுமறை யோர்களி
லேற்ற சீர்க்குரு யாமென் றறிதியால். 536

வண்ண வேந்த முனிவரின் மாமனு
நண்ணு தேவ முனிவரி னாரத
னெண்ணி லாத பிரம முனிவரி
லண்ண லேநர நாரண னியானரோ. 537

சித்த ரிற்கபி லப்பெயர் சேர்ந்தவன்
பத்தெ னப்பக ரும்படைப் போர்களில்
வித்த கத்துறை தக்கன் வில்லாளரின்
முத்தி றப்புரந் தீய்த்த முதல்வன்யான். 538

விரியு நால்வ ருளத்தினில் வேதியர்
வருண னவ் வருணத்தி னென்கென
வுரைசெ யாச்சிர மத்தி லொடுக்கமாம்
புரையி லாச்சிர மம்புகல் வீரயான். 539

அரிய நான்மறை யந்தணர் தங்களிற்
பிருகு நான்பல பேசிய மாந்தரின்
மருவு பார்புகழ் மன்னவ னென்கொல்யான்
கருது சேனைத் தலைவரிற் காங்கையன். 540

தருண மங்கைய ரிற்சத ரூபையான்
புருட ரிற்சுவா யம்பு வெனப்புக
ழுருவ நன்மனு வேந்த னுடுக்களி
னிருவி சும்பி னிலங்கிய திங்களே. 341

கண்ண கன்ற நதிகளிற் கங்கையான்
றண்ணி ருந்த சலநில யங்களின்
மண்ண கழ்ந்து வளைப்புறும் வாருதி
விண்ணு யர்ந்த சிகரியின் மேருவே. 542

வினைக டந்துயர் வேதியர் தம்முழை
மனனெ டன்புசெய் வோர்களின் மாவலி

புனித நல்லொளி புல்லின ரிற்பெரும்
பனிக டந்த பருதியஞ் செல்வன்யான். 543

மாசி லாக்கவி யோரில்வண் சுக்கிரன்
றேசு சேர்பக வானெனுந் தேவரில்
வாசு தேவன் வழுததுநல் லன்பரி
லாசி லாதநீ யானென் றறிதியால். 544

அடக்க ரும்மவை தம்மி லரும்பொறி
நடக்க லுற்ற மனநவை நீங்கிய
படைக்க லத்திற் பகர்பெருங் கார்முகங்
கடக்க ருங்கபட் டிற்கவி யானரோ. 545

மல்ல லுற்ற வலியின்மன் னுவினெய்
புல்ல லுற்ற தருப்பையிற் பூங்குசை
சொல்ல லுற்றயோ கத்திற் றுணிவுட
னல்ல லுற்ற மனத்தை யடக்கல்யான். 546

விரத மானவை தம்மின் விளங்கிய
விரத மேயுயிர்க் கீறிழை யாமையான்
வரத யான்மறை வானவை தம்மினிற்
சரத மாகத் தரித்த மவுனமே. 547

சாற்று கின்ற தபசி லியமம்யான்
போற்று கின்றதா துக்களிற் பொன்னணி
யாற்று கின்றயா கங்களி னன்பொடு
மேற்று கின்ற பிரம வியாகமே. 548

தயித்தியரி னல்லறிவு சார்பிரக லாதனுநா
னியக்கர்களின் மந்திரியா னெழிற்பிரம சாரியரி
னயக்குமுளத் துத்தவகே ஞன்சனற்கு மாரனென்று
மயக்கறுநற் பிதிர்கடமின் மருவரிய மான்யானே. 549

பறவைகளி லியான்கருடன் பன்மாவி லியான்மட
ங்கல், கறவையெனு நிரைகளில்யான் கடவுளராப் பரிக
ளில்யான், சுறவமெறி திரைகடலிற் றோன்றுபரி கரி
கடமின், மறவைநுனி நாற்கோட்டு மதவயிரா வதமி
யானே. 550

அரவுகளில் வாசுகியா னரவரச ரானவரிற்
பரவுபல மணித்தலையிற் பார்பரித்த சேடனும்யான்
விரவுபல தருக்குழுவின் விளங்குசினை யரசுருயான்
புரவுபரி யரசமுதற் புகல்பவரி லயன்யானே. 551

அழிவுசெயுந் துடிமுதலா யமர்காலத் தாண்டுரு
யான், விழையுமிரு துவினிளவேனிலெனு மிருதுவு
மியான், றழைவுபெறு மதிகளில்யான் றனுமதிநன் ஞா
ட்களினின், மழைமுகிருங் கொடைக் காத்தாய் வழங்
கபிசித் தெனுநானே. 552

அரசயுக நான்கினினு மாதியுக மானதியான், பர
வரிய வியாதனுநான் பராசமா முனிபுதல்வன், பொரு
திறல்சேர் வீரர்களிற் புகன்றவெழி லருச்சுனன்யான்,
பெருகுசுகி களிற்சுகியான் பெலவானிற் பெலவான்
யான். 553

நவையறுகந் திருவர்களி னலஞ்செய்விச்சு வாவசு
யான், புவனமுழு தும்பிறவும் பொருந்தியவா னத்
தொலியும், பவனனினற் பரிசமுஞ்சேர் பாவகனி
லெழிலுருவு, மவனியினி லருமணமு மப்புவினி லிர
தமும்யான். 554

சுடர்நவ மணியிற் பதுமரா கமும்போய்த் துன்
னுதற் கரிதெனுஞ் சுரத்திற், கெடலரும் வலிசே ரிம

யமால் வரையுங் கிம்புரு டரிலரி மானு, முடைதிரைப் புனல்வா ழுயிரினின் மகர வுருவமு மூதியம் பெறு வோர், விடலரும் விவசா யங்களின் மலர்மேல் விளங் கிய விமலையு மியானே. 555

மருவிய மாயை மகதகங் கார மதிபொறி புலன் குணஞ்சீலங், தரை புனல் கனல்கால் வான்முத லவையுஞ் சாற்றுநா னுயினுந் தருமங், திருவரு ளெழில்சீர் திகழ்வலி பொறுமை தெளிவுமெய் கொ டைசிறப் பார்ந்த, வரசவெங் குறையு மவனெலா நீமற் றறிதியென் கலைப்பிறி வெனவே. 556

சுருக்கின னிவ்வா றுரைத்ததை யன்றிச் சொல் லுமென் பூதியை முழுதும், விரித்துமற் றுரைக்க வேண்டுமே லெனக்கும் விளம்புத லரிதிவை யெல் லா, முரைத்திடு மனோகற் பனையென மாய னுத்தவற் குரைத்தன னென்றுத், திருக்கரு முனிவ னரசுளங் தெளியத் தெரித்துமீ ளவுஞ்சில தெரிக்கும். 557

(வருணாச்சிரம முரைத்தல்.)

உரைதரு சமதம முவப்பி ருந்தவங்
கருதரும் வஞ்சனை களைத லென்னுழைப்
புரிதரு மன்புமெய் பொறுமை நல்குத
லருண்முத லறங்களங் தணருக் காகுமால். 558

நவையுறு கரவொடு நசைபொய் நீக்குதல்
குவையுறு முயிரிலொன் றினையுங் கொன்றிடா
தவைமகிழ் கூர்தர வன்பின் வைகுத
லிவைமுத லியவற னெவர்க்கு நல்லவே. 559

ஞானநான் மறைதேர் நயிட்டிகர் துறந்தோர் நல்வ
யற மனையக மறந்து; கானில்வாழ் கின்றோர் காதலின்
மடவார் காண்கினுந் தீயெனக் கரைவார், மானவே ல
ரச விடுத்தவாச் சிரம மகிழ்ந்துமீண் டுறங்குத லாகா,
தேனவாந் தொடைய லரசரந் தணரோர் சிறப்புடை
வணிகர்மற் றிவர்க்கு. 560

ஆரவரை வணங்கி நான்மறை யோதல் கூறிய மக
முவந் தாற்ற, விருநிதி வழங்க லென்னுமுத் தொழிலு
மியையுநல் வேள்விசெய் வித்தல், பொருவரு மறைநூ
லோதுவித் துறைதல் புகல்பொரு ளேற்றன்முத் தொ
ழிலு, முரைதரு மறையோர்க் குரித்தவ ரல்லோ ருளுற்
றுவ ரேற்பழு துறுவார். 561

தேவர்நன் முனிவ ரதிதியர் பூதந் தென்புலத் தவ
ரெனத் தெரித்தோர், தாவரும் பூசை யநுதினம் புரி
யுந் தவறிலா வில்லறத் தினரும், காவல நலஞ்சேர் கதி
பெறு குவராற் காமம்விட் டில்லுறைந் தாங்கு, மேவிய
வதிதி போலுறை குவரேன் மீள்கலா விட்டினு முறை
வார். 562

மனத்தினி லோமத் தழன்முறை யடக்கி வரும்
வழித் தத்துவம் போக்கிக்,குனித் திடுஞ் சிலையோ யாயு
ளி லுலாங் கூற்றினிற் றுறந்தெதி யாவார், நினைப்பரும்
வயிராக் கியமுடன் ஞான நிலைபெற முன்னமே வரி
னும், வினைத்திற மொழியத் துறவறம் பூண்டு மெய்ப்
பத மடைந்துவீற் றிருப்பார். 563

விளம்புநற் பதம்பெற் றுயர்குவ ரென்ன விண்
ணவர் பொறாமையால் விரைந்தாங், குளங்கனிந் தருகு

மீனையவ ளாதி யுருவின ராகிமுன் றடுப்பார், வளம்பெ
று மரச வவ்வகை யறிந்து வருமிடர் கடிந்தெதி யாகிக்
களங்கமின் மனத்திற் றுறவற மியற்றல் கடனென
வுரைப்பர்கற் றுணர்ந்தோர். 564

அதிவருணச் சிரமியென வறைந்தமுனி திறங்கூ
றின், விதிசவுசா சமனமுதல் வேண்டுதல்வேண் டா
மையிலான், பதிதருறு மிடத்தணுகான் பாலனைப்போ
ன் மகிழ்ந்துறைவ, னெதிர்மருவி யெவரோனு மெவை
யளித்தா ரவைபெறுவான். 565

உற்றவின வறத்தினனென் றுரைக்கவொரு சின்
னமிலா, னெற்றிடினு மெறிந்திடினு மீனனென வை
திடினு, மற்றவரை வெருண்டொரயான் வழங்குமுண
வேற்பதற்குச், செற்றமறும் படிமுயற்சி செய்தாலுஞ்
செய்குவனல். 566

பயம்புரியான் பயமடையான் பழியான்மற் றொரு
வரையு, நயம்புரிந்த தருமமிவை நவையிவையென் று
ளத்தோரா, னியம்புபெயர் தேகியென விருந்தாலுந்
தனுவிறக்கில், வயம்புரியு மரசவவன் வழங்கியயா னருகு
வனல். 567

துறந்தவருக் குரித்தாகுஞ் சொல்லுமுயிர்க் கிதஞ்
செயனு, மறந்துவிட யங்களினு மனஞ்செலுத்தா
துறைகுவது, நிறைந்தபுக ழுத்தவனே நெடுங்கான ம
டைந்தவர்க்குப், பிறங்குதவம் புரிகுவதும் பிரமவிசா
ரமுமுரித்தே. 568

அருமுனிவர் தாம்பிரம மானாலும் வெய்யவினை
மருவவரு மோகாதி வந்தணுகா தெவ்வுலகும்

விரவுபுக ழாசவவர் விளம்புமுடல் விழுமளவும்
பிரமவிசா ரத்திருப்பர் பின்னமற வெனவுரைத்தார்.

[இயமநியம முதலியவற்றை யுரைத்தல்.]

இத்தி றத்தன கேட்டலு மின்னமும்
பத்தி யும்பகர் தற்கரு ஞானமும்
புத்தி யிற்பொருந் தப்புக லென்னுமவ்
வித்த வற்கருண் மாயவ னோதினன். 570

அருமை யாமறி வாகிய வென்னுமை
யொருமை யானல் லன்பொ டுஞற்றிய
கரும மியாதெனி னும்மது காண்கினற்
றரும மாமெனச் சாற்றுவர் மேலவர். 571

சுகத்தின் மேம்படச் சொல்லிய ஞானமா
மகத்தி னன் மகபதி யானயா
னகத்து மேவறி வாகவா ராதிக்கி
னிகழ்த்து நித்திய மாகுவை நீயரோ. 572

மொழியுங் காலமோர் மூன்றினுந் தான்றனி
வழியுந் தேமலர் மாலையொன் றுய்நடு
வொழியு முள்ள மயக்கி னாகமாய்த்
தழையும் வெம்பய முந்தால் போலுமே. 573

அன்ன வாறரு மாயையி னுனடு
வின்ன லாம்படைப் பாயதல் லாதினி
துன்னு வோர்க்குப் பிரமமு மொன்றென
மன்னு காலமோர் மூன்றும் வயங்குமே. 574

தருமன்முன் னியம நியமநற் றபசு சமதமம்
வேள்விதக் கணைமெய், யுரைதனந் தியாகஞ் சவுரியம்
வித்தை பூதியம் பண்டிதன் மூர்க்கன், றெரியுநல்

வழிதீ வழியருந் தனவான் றரித்திர னீசுர னனீசன், மருவுறுங் குணம குணம்புக லென்று வணங்கலுங் நர்ங்கையன் வகுத்தான். 575

அன்னவ னிசைத்த வாறுனக் கிசைப்ப னரசே நீ கேட்டிமுன் னருஞ்சீர், மன்னிய வியம நியமமென் பனதாம வருமுயிர்க் கிதஞ்செயன் மவுனம், பன்னுநற் பூசை சபதபம் புனிதம் பகருமெய் பொறைமுத லியவா, முன்னிய சமமுண் மனத்தினை யடக்கி லுறு ந்தம மிந்திய மடக்கல். 576

தகைசெய் கின்ற தவமெனச் சொல்வது
புகர்செய் காமம் விடுப்பது புந்தியின்
மகமெ னப்படு கின்றது மற்றெனக்
ககம கிழ்ந்து பயனளித் தாற்றலே. 577

தாவி லாதநற் றக்கணை யாவது
பூவி னோர்க்கருள் பொற்கொடை யன்றுசொ
லாவி வேறென் றயர்வுறு மாந்தருக்
கோவி லாப்புகழ் ஞான முதவலாம். 578

பெருமை யான தனமெனப் பேசுத
றரும மாகுந் தரையிற் றவறிலா
வுரிமை யான தியாகமென் றோதுதல்
கரும மோடுவெங் காமம் விடுப்பதே. 579

சாற்று கின்ற சவுரிய மாவதிங்
காற்ற லுற்ற மனத்தை யடக்குத
லேற்ற முற்றநற் சத்திய மென்பது
சீற்ற மற்றுவே தாந்தந் தெளிவதே. 580

வித்தை யாவது வேதம் விடுத்தொரு
புத்தி யாகப் பொருந்துதல் பொற்புறு

மூத்த வாமிகு மூதிய மாவதென்
புத்தி யாமென வேதம் பகருமே. 581

பந்தமொடு வீடு பகுத்தறிவான் பண்டிதனு, மந்தமிலான் மாவாக்கை யானென்போ னேமூாக்க, னாநுவிலென் னூலறித லில்லவழி தீவழிதான், புந்தியொடு நிவிர்த்தியிலாப் பொய்ந்நூல்பார்த் தறிவதுவே. 582

நல்லகுணஞ் சேர்வோ னவையிறன வானுகுஞ்
சொல்லுமகிழ் வில்லான் றுகளார் தரித்திரனு
மல்லலுறு மீசன் வழங்குபுலத் தாசையிலா
னல்லலுறு மாசை யடைந்தோ னனீசரனே. 583

குணமிஃ தகுண மென்னக் குறிப்பதே யகுணமாகுங்
கணமுறு மகுண மென்றுங் கருதிய குணமீதென்று
மணமிகு தாம மார்ப மனத்தினின் மதித்தி டாமை
யிணையுறு குணம தாகு மென்னலும் வேந்து கூறும்,

ஒளிதரு குணங்க ளென்று முறும்பழி யகுண மென்றுங், தெளிதரு நினது வாக்காஞ் சுருதியுந் தெரிக்கு மென்று, லளிதரு முனகு ணந்தா னுடிடா திருப்ப தெங்க, ளளிதரு கமலக் கண்ணு வையுறு மென்ற னுள்ளம். 585

உற்றவை யுறவு நீக்கி யுன்னுரை யாமூது தன்றேற், பற்றுறு மிழுதை யான பணியின்வெவ் விடத்தின் மூழ்கப், பெற்றிடு மெனது நெஞ்சம் பிழையற [illegible] யென்று, கொற்றவன் கூற மாயன் கூறினன் [illegible] [illegible]. 586

[illegible] ஞான யோக மவையிலாப் பத்தி யோகம்
[illegible] யோகம் பகரும் [illegible]

வலங்கரு மாந்த ருய்ய வகுத்தன விறைவயே யன்றிக் கலந்தரு மார்ப நன்மை காட்டவொன் றில்லை மாதோ.

ஒழிந்தவர் தமக்கு ஞான யோகமு முரைக்கு மாசை; தழைந்திடா ராகி யாவுந் தவிர்ந்திடா தெனது காதை, மொழிந்திடல் கேட்டன் முன்ன முயன்றநற் றவத்தி னோர்க்கும், விழைந்திடும் பத்தி யென்ன வின்பயோ கமுநன் றமால். 588

காமமோ டிறைந்த மாந்தர் கருமயோ கத்தில் வாழ்வார், தீமையு நலனு மின்னோர் சேர்வர்மற் றவ ருக் கில்லை,மாமக முதல கன்மம் வரும்பயன் விழையா தாற்றி, நாமநற் குணத்தோ டொத்தா ணண்ணிடார் ஞானஞ் சேர்வார். 589

பேதமற் றிருந்த ஞானம் பிறந்திடு மளவு மென்னீர், நீதியுற் றிருந்த மாந்தர் நிகழ்த்துதல் கேட்குங் காலு, மோதுமை யித்தி கத்தோ டுற்றநித் தியகன் மங்க, ளேதமற் றியற்றல் வேண்டு மிறையுவ வியல்பின் மாதோ. 590

தேவரு மாந்த ராகிச் சேர்வதற் காசை கூர்வார், காவல வெனினு மாநதர் கருதுதம் பிறவி மீட்டு, மேவ வேண் டுவரோ வென்றுங் விளைவரு மென்றே வேண் டார்,தாமில்லி டொன்ற மிற்பார் சமன்விரைந் துழு னன்றே. 591

மண்டூகாலன்

எழிந்திடு மரத்தில் வாழு மிருஞ்சிறைப் பறவை யப்பாந், பறந்திட [illegible] பயப்பதோர் நன்மை புண்டோ, குறைத்தல [illegible] எரிந்திடக்

குன்று மாக்கை, யுறைந்துயர் நெறியி னெட்டா வுயிர்
க்குநன் குறுங்கொ லம்மா. 592

எறிந்திடும்—வெட்டும்.

[மானிடவாக்கையின் சிரேட்டம்,
அதிலுறும் பரமவேது என்னுமிவற்றைக்காட்டி
அவிவேக வரம்பைக் கூறல்].

மானிட வாக்கை யென்று மறுவருந் தோணி
பெற்று, மூனமில் குரவன் சொல்லா மோடமுய்ப் பவ
னென் றெண்ணி, ஞானதோ ரனுகூலக்கா லனுகவும் பிறவி
வேலை, தாண்டிடு தரவொண் ணுதான் றன்னையே
கொல்கின் றனே. 593

[விவேகவரம்பைக் கூறல்]

பொன்னுல கடைய வாசை புரிகலீர் பொருளில்
வீடு, துன்னுதிர் தருவ னென்று சொல்லினு மிச்சை
கூரார், மன்னுமே காந்தம் பற்றி மருவின வவர்க்கு
வேறு, கொன்னுறு தீமை யென்கொல் குண்மென்
கொல் குறிக்கி னம்மா. 594

[தேசகால முரைத்தல்].

சீதநீர் படிதலானுஞ் செழும்பொரு ளுதவலானு,
மேதகு தபசினாலும் விளம்புகற் கருமத்தானு,மோது
மென் னிடத்தி லன்புற் றுறைதலி னுனுநீங்காக்,
காதல்கூ ராச சொல்லுங் கர்த்தர்கற் புனிதஞ் சேர்வார்.

[இங்ஙனம் சுருதி மாதாவின் காருண்யக் கருத்தைத்
தெளிவித்தல்].

அமரர்த மூலகு வேள்விக் கரும்பய னென்றவேத,
மிமையவர் புகழுவ் வேள்வி யியற்றனென் சிவைய

வேண்டிக், குமரவிம் மருந்தை யுண்கிற் கொழுங்கனி தருவ மென்னுந், தமரினம் போலல் லாது தரும்பயன் றவறில் வீடே. 596

[அவ்வயிப் பிராயத்தை நன்கு புலப்படுத்தல்.]

மன்னுநல் வேள்வி செய்யின் மறுமையி லடையும் பேறு, பொன்னுல கென்று சொல்வார் பூவையே பல மென் றன்னுங், கொன்னுறுங் குணத்தர் போல்வார் கூறிய பயன்வெஃ காம, லன்னநல் வேள்வி செய்யி லடைபய னழிவில் வீடே. 597

[சுருதி தாற்பரியாலோசனையின்றிய கர்மிகளுக் குறும்பலன் கூறல்.]

இருள்படு காட்டி னூடே யிருந்துழல் குருட ரானோர், தெருள்படு நகரந் தாமே சேர்நெறி யறியார் போல, மருள்படு காம முன்னி வருவினை முயலா நிற் போர், பொருள்படு நலஞ்செய் வீட்டிற் புகும்வழி யறிக லாரே. 598

தூமத்தான் மூடுங் கண்ணர் சூழ்ந்தரு கிருந்துஞ் சாலைச், சேமத்தான் மூடு மோமத் தீயினைத் தெரிக லார்போற், காமத்தான் மூடு நெஞ்சக் கருமத்தோ ருலக மாயை, நாமத்தான் மூடு முள்ள நம்பனைத் தெளியா ரன்றே. 599

[வேதத்திரிபுடிவயமாய் கிற்றலின் சந்தேகஸ்பதமின்றித் தெளிவித்தல்.]

மருவிய ஞான காண்டம் மந்திர காண்ட மென்றுங் கருமகற் காண்ட மென்றுங் கருதுமவ் வேத மூன்று

புரைதரு பலனும் யானே புரிந்திடு பலவையும் யானே
பூரசனா னத்தி னூலே யறைந்திடு பலனும் யானே. 600.

[தத்துவ முரைத்தல்.]

இத்திற முன்ன மிசைத்தருள் கண்ணன்
பத்தனு முதற்சில பற்பல செய்யுந்
தத்துவ மெத்தனை சாற்றுதி நீயென
வுத்தவ னோத வுணர்த்தின னன்றே 601

உரைத்தநா லாறு தத்துவத் துடனே புயிரொடு மீசனைக் கூட்டிப், பெருக்குமை யைந்தோ டொன்றெனச் சில்லோர் பேசுவர் சிலர்களை யைந்தாய், விரித்திடு முயிரோ டீசனொன் றாக விளம்புவர் சிலர்சிலர் சுருக்கிச், சுருக்கிய மொழிவர் தத்துவ மெல்லாஞ் சொன்முறை யடங்கியாங் கிருக்கும். 602

வழங்குதத் துவத்தின் கூட்டமா மாக்கை மாய்தலும் பிறத்தலு மதிக்கின், விழைந்திடு கனவிற் பற்பல வாக்கை விளைவது மறைவதும் போலாந், தழைந்த மெய்ம் மனது மறத்தலே மாணுஞ் சடமுற நினைத்தலே சனன், மொழிந்திடு மரச புருடனுக் கென்று முலத்தலும் பிறத்தலு மிலையால். 603

இருவினைக் கிடாய் வேறுடல் படைத்தாங் கிருந்திடு முடலையு மறந்து, மருவிய துயிலிற் சாக்கிரத் தறிவு மறைதல்போன் முன்னுறு மறிவுந், தெரிதா லின்றி யாதனை யுடலுஞ் சேர்ந்துமற் றெனதெனத் தெளிந்து, பெருகிடர்க் கிடனுய்ப் பிறங்கிடுமனமிப் பெற்றியாற் பிறக்திறந் துழலும் 604

இன்னவை மிலிங்க சரீரமே யுடைத்த வுதயத்து நிற் னுமல்லன், மன்னிய புருடன் றன்கண விலிது

மற்றவன் சுயம்பிர காசன், றுன்னிடுஞ் சடனச் சட த்துரு வாகிச் சொற்பல வாம்பிர கிருதி, பன்னுபற் பலவாந் தன்மைமற் றுரைக்கிற் படைத்தகத் தாலங்க ளா வனவே. 605

போற்றுதீ ணதிபோற் பொங்குவெந் தழல்போற் பொருந்திய பற்பல பலம்போற், சாற்றுமோர் கணத் துக் கொருகண மாக்கை தனையிசை நாசமுற் றிருக் குந், தோற்றுமோர் புருடன் சொல்லிய வுடல்சேர் தொல்வினை பொருந்தலெவ் வாறே, லாற்றுதீ நலையந் நீருறு மாத்தி னருகிழ லடைந்தவா றுமால். 606

[புருடன துண்மை காண்பித்து அங்ஙன மறியும் அருமை பாராட்டல்.]

பொருந்திய வாக்கை சேர்ந்தவவ் வினையப் புருட னுக் கில்லைமற் றென்றால், வருந்தியிங் கிவ்வா றறிவ தென் னென்னின் மதியுற வறிந்தவர்க் கன்றித், தருக் குயர் போகத் துற்றிடு மாசை தவிர்த்தொழி யாதெ ழி லரச, திருந்தறி வில்லோ ராக்கைதா மென்றே தின ந்தினம் பிறந்திறந் துழல்வார். 607

[அந்தணனிந்தை பொறுத்தல்.]

வெய்யவ ரடிக்கினும் வெகுண்டுபல நிந்தை
செய்யினு மதிக்கிலவை சேர்கனவு போலாம்
பொய்யென மனத்தொடு புகன்றிடர் பொறுக்கின்
மையலறு மென்னவிறை முன்னவன் வழங்கும். 608

ஒறுக்கும்வகை பொன்னல ருடற்றுபடை மெய்புத்
தறுக்கும்வகை யாற்றினுமின் னைம்பதி னர்க்கு

வெறுக்கும்வகை செய்யவரும் வெய்யபல நிந்தை (ன்.
பொறுக்கும்வகை யெவ்வகை புகன்றருள்செய்யென்று

அவந்திபுரி யுற்றுறையு மந்தணன்முன் முனியா
துவந்திடர் பொறுத்தகதை யொன்றுள துனக்குத்
துவந்தவினை போகவது சொல்லுவ னெனக்கண்
சிவந்தெழு பணித்தலை நடித்தபுயல் செப்பும். 610

அன்னகரில் வாழுமறை யோனளகை யாளு
மன்னவ னெனத்தனம் வருந்திநனி பெற்றான்
றன்னையடை வுற்றவறி யோர்தமரி னோருக்
கின்னலற வொன்றுமுத வானினி தியம்பான். 611

உற்றமனை யாளொடு முவந்தன தெவிட்டப்
பெற்றபுதல் வர்க்குநனி பெட்பினுட னீயான்
செற்றமொடும் வெவ்விய சினத்தொடு முழன்று
குற்றமொடு மிக்கநிதி கொண்டுறையு நாளில். 612

கள்வர்களி னாலுமுறை காவலவ னாலுங்
கொள்ளுமுறை யென்றெழு குடித்தமரி னாலு
நள்ளிருளி னில்லினனி நண்ணழலி னாலு
முள்ளபொரு ளியாவுமொழி வுற்றிட வயர்ந்தான். 613

அயர்ந்தவ னருந்தன மடைந்திடு மிடத்தும்
வியந்துநனி காத்தலை விருப்பினுறை போது
நயந்தபொருள் போம்வழியு நண்ணுமிட ரென்று
வுயர்ந்தபெரி யோர்களி னுளந்தெளிவு கொண்டான்.

அறைந்தநிதி யாதிக ளசத்தெனவல் வாசை
மறந்துமெய் யறிந்துமகிழ் கொண்டமறை வல்லோன்
றுறந்தமுனி வேடமொடு தொன்னகர் திரிந்தா
னிறைந்தபதி யோர்கணமுன் னிந்தைசெய மாதோ,

கண்டுசிலர் கன்னலொடு கந்தைகள் பறிப்பார்
தண்டுசிலர் கைக்கொடு தருக்குடன் முறிப்பா
ருண்டுசில வஞ்சமிவ னுள்ளமிசை யென்று
மண்டுசின மொன்றுசிலர் வைதன ரடிப்பார். 616

மோனமென வுற்றதெவ ணீமொழிதி யென்பா
ரீனனிவ னென்றுசில ரெச்சில்க ளிறைப்பார்
போனபொரு ளென்றுமெய் புழுங்கியிவன் வேட
தானது கரக்கநிதி யையமிலை யென்பார். 617

கவ்வையொடு வேலைவளை காசினியர் வெய்யோ
ரிவ்வகை யறிந்தவ னியற்கையறி யாதே
யவ்விய மனத்தொடு மடைந்தளு றியற்றத்
திவ்விய முனிக்கரச சிந்தையொடு செப்பும். 618
கவ்வை—ஒலி; அளுர்—துன்பம்.

நிந்தை யேமுத லான நிகழ்ந்திடாச்
சிந்தை யேமனக் கற்பனை செய்யுமே
மைந்தை யேயு மனமடங் காவழி
யைந்தை யேயும் புலனெனக் கடங்குமே. 619
மைந்து—மயக்கம்.

நல்லச சத்துவ ஞான முதலிய
வொல்லு கின்ற வுபாயத் தொடுங்கினர்
சொல்லு கின்ற மனத்தைத் துணிவொடும்
வெல்லு கின்றது வேவெற்றி யாகுமே. 620

வளங்கொண் ஞானம் வழங்குந் தவமுதல்
துளங்கொ டான முதவரு ளாதியாங்
களங்க மற்ற கருமநல் வெண்மையாய்
விளங்கு சத்துவத் தின்வினை யென்பரே. 621
வழங்கல்—ஆட்சிபண்ணுதல்.

உவந்து போகமு ளுற்றிய நல்வினை
சிவந்த ராசதத் தின்செய லென்பரா
லவந்த ரும்வினை யாவுங் கருமையாய்
நிவந்த தாமதத் தின்னிகழ் கன்மமே. 622

நிவந்த—உயர்ந்த.

இன்ன ணங்குணத் தின்வினை யாவையும்
பன்னு கின்ற மனது படைத்திடுஞ்
சொன்ன வல்வினை சூழ்ந்தது போலல்லா
துன்னு கின்ற வுயிர்க்கவை யில்லையே. 623

எங்கு மோடி யிடருறு மாமனந்
தங்கு மோர்நிலை யுற்றெனச் சாற்றிடிற்
கங்கை யாள்பெறுங் காவலன் முன்மன
மங்கண் ஞாலம் வியப்ப வடக்கினான். 624

பகைவர் மற்றிவர் பற்றுடை யாரிவர்
மிகவ ருத்தினர் வெய்யவர் வேண்டினோ
ரகல வற்புறு மன்புசெய் தாரெனப்
புகல்வர் சற்றும் பொருந்தறி வின்மையோர். 625

உயிரெ னச்சில வுற்றிடு முண்மையு
மயர்வொ ழித்தவொன் றுருமெவ் வர்க்கையும்
வெயிற மைத்தநீ ரென்னவெம் பூதத்தாய்ச்
செயிர்த மைத்தவிற் செப்பினேன் றுருமே. 626

அயர்வு—தளர்வு; செயிர்—குற்றம்.

உண்மை யான வுயிருக் குவகைசெய்
வண்மை யாற்றி நிந்தனை மற்றிலைத்
திண்மை யான வுடற்கவை சேரினு
மெண்மை யாவு மியம்பினோன் றுவையதல். 627

எண்ணு நிந்தைசெய் வோரையென் செய்குநங்
கண்ணிற் கைப்படிற் கையையென் செய்வதே
தண்ணு முஞ்செழுந் தாலுற் றெயிறுறின்
பண்ண ரமர்தவப் பூல்லையென் செய்வதே. 628

இன்ன தன்மை யிசைத்தங் குளத்தொடும்
பன்னு நிந்தை பலவும் பொறுத்தவன்
றன்னை யன்றிச் சகத்தொன் றிலையென
வுன்னி யுண்மையி னென்றுபட் டானரோ. 629

என்று கண்ண னிசைத்தனு முத்தவ
னென்று நிந்த யுவந்து பொறுக்குவ
னன்று நன்றினி யென்று நலந்திகழ்
மன்றல் செய்த மலர்ப்பதம் போற்றினன். 630

செம்மை நற்கதைத் தேற லருந்தினர்
தம்மை யன்றிச் சராசர மின்றெனு
வெம்மை நிந்தை பொறுத்து விருப்புடன்
மும்மை யற்று முயங்குவர் முத்தியே. 631

[குண மோன்றோடொன்று கலத்தல்].

பவந்த ரும்முக் குணத்தின் பயனையோர்ந்
தவந்த ரும்மற் றவையென் றறிந்தலாற்
றுவந்த வல்வினைத் தோற்றம் விடாதெனச்
சிவந்த பூமகட் சேர்ந்தவன் செப்புமால். 632

ஞான மேமுத லாகிய நல்வினை
யான போதருஞ் சத்துவ.மென்பரான்
மான மார்தரு மாசையின் வைகுவோ
னீன மோங்கு மிராசத னென்பவே. 633

துஞ்சல் வெஞ்சினஞ் சோம்பு கொலைமுதல்
வஞ்ச வல்வினை வந்துடன் வைகுழி
யெஞ்செ லில்லை யெனச்சொற் றமகுண
நெஞ்சி னின்று நிகழ்ந்தன வென்பவே. 634

சத்து வத்தொடு சாற்று மிராசத
மொத்தி ருக்கி னுளத்தி லறம்பொருள்
சித்த மன்புறு மின்பந் தெளிவினு
முத்தி யென்ன மொழிந்தவை முன்னுவார். 635

தாம தத்தொடு சத்துவஞ் சார்ந்தவர்
தீமை செய்திடுஞ் சேரலர்ச் செற்றிடின்
பூம லர்த்திருப் புங்கவ னல்லற
மேம மற்றிங் கியற்றுவ மென்பரால். 636

ஓங்கி ராசத தாமதத் துற்றவர்
தீங்கி னும்பொருள் சேர்ந்து பலன்பெற
வாங்கு நீர்த்திரை வையக மேலறம்
நீங்க லாக நெடுவினை செய்வரே. 637

இறக்குங் காலத் திராசத முற்றவர்
பிறக்குங் கான்மனு டப்பிறப் பாகுவா
ரறத்தின் மேவருஞ் சத்துவ ராகின்மேற்
சிறக்குந் தேவ ரெனத்திகழ் வார்களே. 638

சாகுங் காலைத் தமோகுணஞ் சார்ந்திடிற்
சேகு சேர்நர கத்திடைச் சேர்வரான்
மோக மூன்று குணமுமுன் னுரெனி
லேக மாகுவ ரென்னெடும் வந்தரோ. 639

கூறு மூன்று குணமுமொன் றாயெழின்
மாறு செய்பவர் மாய்ந்து வளர்ந்திக

பூதில் செல்வ மிசையி லெழிற்பொனுல்
வேறோர் கோயில் விளக்குவ மென்பரால். 640

தாம மார்பநற் சத்துவ முற்றவர்
காம மற்றுக் கரும மியற்றுவார்
நாம நல்வினை நற்பலன் முன்னியே
சேம மாரு மிராசதர் செய்வரே. 641

வெய்ய தாமத மாங்குண மேவினர்
செய்யு நல்லறந் தீமையென் றோர்தருந்
துய்ய சிந்தைய ரன்றித் துகளற
வைய மற்றிங் கனுதின மாற்றுவார். 642

பிணங்கி நின்றவிப் பெற்றிய முக்குண
மிணங்கி நின்றென தேவ லியற்றுமான்
மணங்க டந்த மதுமலர்த் தாரினுய்
குணங்க டந்தவ ரேமுத்தி கூடுவார். 643

[பூசை யுரைத்தல்.]

புனித ராகியுள் ளன்பொடு பூசனைக் கேற்ற
வினிய பல்பொரு ளியைந்திரண் டெட்டுப சாரத்
தனக பூசனை காமமற் றுற்றுவ ராகில்
வினையி னென்றிடார் வீடவர்க் களிக்குவன் விருப்பால்.

ஆசை யுற்றவர் பூசனை யாற்றினு மவர்தா
நேச முற்றன வழங்குவ னினைத்தன பொசித்தோர்
பேசு முத்தியும் பெறுகுவர் பிறங்கிவை யல்லாற்
பாசி லைக்கொடு பழிச்சினும் பலனனி யடைவார். 645

[உத்தவருக்கு ஞான முபதேசித்தவரையனுப்பியது].

ஆக்கையும் புலனு மல்ல வசைவுறு மனனு மல்ல
வீக்குறும் வினைகள் சேரும் வெவ்வகங் கார மல்ல

போக்குறும் புந்தி யல்ல பொருளென விவ்வா றெல்லா
நீக்குமற் றறிவு தானே நித்தியப் பொருளென் பாரால்.

இப்படியே வெள்ளி போல விலங்குமித் தன்மைத்
தென்ன, வொப்பிலாப் பிரமந் தானே யுலகுபோற் றோ
ன்றிற் றென்று, செப்புமுள் ளுணர்வி னாலே தேர்ந்து
கொண் டிருப்போர் தம்மைத், தப்பிலா ஞான யோகத்
தலைவரென் றியம்பு வாரே. 647

எங்கு மாய்நிறைந் திலங்கிய ஞானவா ருதியிற்
பொங்கு தெண்டிரை நுரைவரும் புற்புத மெனவே
யுங்கண் மாநில முதலிய வுலகங்க ளனைத்துந்
தங்கி நின்றெழும் வேறுவே றறிவிலர் சாற்ற. 648

மறிந்து தோன்றிய திரைநுரை குமிழிமற் றனை
த்துஞ், சிறந்து தோன்றுமன் னீரலாற் றெரிக்கின்வே
றிலைபோற், குறைந்து தோன்றிய வுலகுங்க ளனைத்
தையுங் குறிக்கி,னிறைந்து தோன்றுநல் லறிவலா னிக
ழ்த்தவொன் றிலையால். 64

ஆதியு நடுவு மற்ற வந்தமுந் தானொன் றாயு
மோதிய நடுவிற் பல்பூ ணுருவொடு பெயர்வே றுற்றுத்
தீதற விளங்கும் பொன்போற் செகத்தரு நடுவி னுற்றுப்
பேதமி னடுவும் பின்னு முதலுமப் பிரமம் வைகும்.

மனமெனு மரச னாலே மருவுகற் பனைக ளாகிப்
புனைவுறு பெயரு லோகம் பொருந்துதல் குறித்த லாது
நினைவறு பரமா னந்த நித்தியப் பொருளுக் காகி (ல்.
வினைநடு வந்த மென்ன விளம்பலோர் தன்மைத் தன்று

உன்னில்யா னன்றி மற்றொன் றில்லையா னாரவோ
வென்னத், தன்னிலை யறியு மாறு தாமரைக் கண்ணன்
கூற, மன்னுமெய்ம் மயிர்சி லிர்ப்ப மாமலர்க் கண்ணீர்

வார, வின்னதென் றியம்ப லாகா வின்பமாக் கடலு ளாழ்ந்தான். 652

வழுத்தருந் தகைய வின்ப வாரியி னழுந்தி மூழ்கும், பழுத்தவன் புடையோன் மல்லற் பாற்கடற் சேர்ப்பன் கங்கை, சுழித்தலை யெறியும் பொற்றாட் டுணை மலர்க் கமலப் போதில், விழிப்புனல் பாந்து பாய வீழ்ந்தன னிறைஞ்சி னானே. 653

சேயதாட் டாமரை சென்னி சூடிய
தூயனை யருந்தவர் சூழல் சேர்கென
மாயவன் பணித்தனன் மறுக்க வல்லனோ
போயின னிருகணீர் பொழியு மன்பினான். 654

நீக்கரு மன்பின னேமி யானைப்பின்
னோக்கின னோக்கின னாகி நோன்மையா
னாக்கினன் சிந்தையு ளமர வையனை
வாக்கினிற் றுதித்தனன் மறுகி யேகினான். 655

அணிதிகழ் நைமிசா ரணியத் தன்பினிற்
றணிவிலவ் வுத்தவன் சார்ந்த தன்மைசெம்
மணிபுனை மன்னமுன் வழங்கி னேனொனுத்
துணிவுறுஞ் சுகமுனி சொல்லி னானரோ. 656

(சுவாமி வைகுந்த மடைதல்).

துன்றிருங் கிளையினஞ் சுழன்ற காற்றுற
வொன்றொடொன் றுரிஞ்சியாங் குதித்த தீச்சுட
நின்றவவ் வனத்தினீ றாகி நீங்கல்போற்
பொன்றின ரியாதவர் புனிதன் மாயையால். 657

பொன்னாடை யுற்ற குறங்கொன்றினிற் பொற்பு
வாய்ந்த, மின்னா ரணிசே ரொருதாண்மலர் மேவ
வைத்தாங், கன்னான் மலர்த்தா ளமரேச ரடைந்து
வாழ்த்தத், தன்னா ரறிவைத் தனிநோக்கித் தயங்கி
னானே. 658

தேனொன்று தண்ணந் துளவோன்றவர் செப்பு
சாபந், தானொன்றி நிற்கத் தகைசெய்து மயக்க லாலே,
கானொன்று வேடன் சரனென்பவன் காட்டின் மேய,
மானென்று தாளி னொருவாளி வழங்கி னானே. 659

கண்ணா கருணைக் கடலேகவி னோங்கு நீல
வண்ணா வனச மலர்மாதுறை மார்பி னானே
விண்ணோ ரறியா நினையெங்ஙனம் வேட னாகி
யெண்ணா தியற்றும் பழியேன்றெளிந் தேத்தும்வாறே.

என்னுஞ் சரனை யெதிர்நோக்கி யிரங்க லுன்னின்
மன்னு முலகி னுயிரெங்கும் வதிந்து ளேன்மற்
றுன்னி னுறைந்து வினைசெய்ய வுஞற்றி னேனரியான்
பொன்னின் விளங்கு முலகெய்துதி போதி யென்றான்.

மனமகிழ்ந் தருள்பெற வணங்கி வான்மிசைப்
புனைமுடி விண்ணவர் புதிய தேறல்பாய்
பனிமலர் சொரிந்துடல் வியந்து வைப்புறத்
தனிமுத லுயர்பரந் தாம மெய்தினான். 662

காலமும் பிறிவொடு கலப்பு மற்றுயர்
சீலமு மானவன் செய்கை யிந்திர
சாலமு மவைக்களுஞ் சார்ந்த கூத்தினர்
கோலமு மல்லதென் கூற வேண்டுமால். 663

# 12-வது ஸ்கந்தம்.

[பரீட்சித்துக்குச் சுகர் கலிதன்மம் உரைத்தல்.]

கடக்கரும் வலிசேர் கின்ற கலியெனுங் காலத் தாசை
யடக்கரி தாகி யுண்மை யருள்பொறை புனித மாயு
ளுடற்குறுந் திண்மை புந்தி யுற்றிடு நினைவு பார்மே
னடக்குறுந் தருமமெல்லா நாட்குநாட் குறையு மம்மா.

விரியுநூன் முறைதரும் விரத மாற்றிடா
ருரியதாங் குருகுல வாச முற்றொரு
புரையிலா நியமத்தாற் புகன்றி டார்மறை
பிரமசா ரியரறம் பிழைத்து வாழ்வரே. 665

உள்ளுவர் தில்லற முற்று ளோர்மக
மெள்ளளி லன்பொடு மியற்றி டாரவை
வள்ளிதழ் மலர்த்தொடை மன்ன வாற்றினுங்
கள்ளொழுக் காய்நிதி கருதிச் செய்வரால். 666

வந்தவெங் கலியினின் மறைவல் லோர்மறை
சிந்தைசெய் யார்தம செயலுஞ் செய்கலார்
சுந்தர முப்புரி துலங்கு நூலினு
லந்தண ரிவரென வறிய வாழ்வரே. 667

சொல்லிய கலியெனுங் காலந் தோற்றிலிங்
கில்லறந் துறந்தன ரேய்ந்த காட்டினுட்
செல்லினு மவர்வனஞ் சேர்ந்த வூணலா
னல்லன நாட்டுண வெனாந யப்பரே. 668

துறந்தவர் துறவறந் துணிந்தி யற்றிடார்
திறந்தசெந் துகிலினுஞ் சேர்ந்த தண்டினு

நிறங்கிளர் கன்னலி னாறு நீத்திவ
ணுறைந்தவ ரிவரென வுலவு வாரரோ. 669

இன்னிலத் துயர்குல மியைந்து ளோர்களு
மன்னுபின் னவரற மருவி வைகுவார்
பின்னவர் தமதறம் பிழைத்து நான்மறை
பன்னுநல் லிறைவனைப் பழிச்சி வாழ்வரால். 670

ஒழிவறும் புகழுடை யுயர்கு லத்தரு
மிழிகுலத் தவருழை யேவல் செய்குவார்
பழியுறு தொழில்பரிந் திழைத்தும் பாருளோ
ரழிபொரு ளடைவதற் காசை கூருவார். 671

நெறியுடை யறிவில ரெனினு நீணிதிச்
செறிவுடை யாரெனி லவரைச் சேர்ந்துநல்
லறிவுடை யாரென வறைவ ரன்னவர்
குறியறு சொல்லையுங் குணமிக் கென்பரால். 672

நிறைபொரு ளுடையவர் நிந்தை சொல்லினு
முறையுறு வழக்கென மொழிந்து போற்றுவார்
வறுமைமிக் குடையவர் வழங்கும் வாய்மொழி
யறமொழி யாயினு மதனை யெள்ளுவார். 673

உயர்பய னுவந்திங் குதரத் தூண்பெறன்
மயிர்கனி வளர்ப்பதே வனப்பென் றுன்னுவார்
புயல்வளங் கரத்தலிற் பொருந்து இன்றதம்
பயிர்வளங் கரிந்திடப் பசியிற் சோர்வரே. 674

வெங்கலி முதிர்வுறில் விளம்பு மாந்தர்க
ளிங்கிய லாண்டிரு பத்தின் மேலிரார்
மங்கைய ரேழெனும் வயது வந்துறிற்
பொங்கெழிற் புதல்வரைப் புணரி னல்குவர். 675

காக்களுங் குறுகுநற் கனிக ளாதிய
நாக்குறுஞ் சுவைப்பொரு ளலனுங் குன்றுமால்
மாக்களுங் குறுகுவர் வயங்கு தம்முருக்
கோக்களு மாடெனக் குறுகு மென்பவே. 676

[கற்கியவதாரம்.]

பன்னு மன்னர் பலர்நமன் கூறதா
யென்ன தென்னதென் றென்னிடத் தாசையாற்
றுன்னு வெஞ்சம ரிற்றெலை வாரென
நன்னி லப்பெண் ணகைத்துரை யாடுமே. 677

வாச மாய்நமன் வாழ்வதுட் பார்த்திடா
ரோசை நீர்க்கட லுற்றழி மொக்குள்போற்
பேச மாயுடற் பிண்டமெய் யாமென
வாசை மாக்கடன் மூழ்கி யழுங்குவார். 678

அழுங்கல்—வருந்தல்.

எண்ணி லாவயி ராக்கிய மெய்துமென்
றண்ணல் வாட்கை யரசரை யோதினன்
விண்ணி னோரும் விரும்பு மமுதமாங்
கண்ணன் மாக்கதை யேகனி செய்புமால். 679

தானத் தானுந் தவங்களி னானுநன்
மோனத் தானு முனமக லாப்பழி
ஞானத் தார்தொழு தேத்தும் நவையிலா
வானத் தான்பெயர் வாழ்த்திடத் தீருமே. 680

[பிரளய முரைத்தல்.]

முடிபுனை யரச பிரளய முரைக்கின் மொழிதரு
நித்திய மெனவு, நைமித்திக முதல மூவுல கிறப்ப நிலவு

நைமித்திக மெனவும், படிமுத லுலகம் படைத்தவ னொழியப் பகர்பிரா கிருதமென் பனவு, மடனுறு மாத்தி யந்திக மெனவு மறைதரு நால்வகைத் தாமே,

நேரலர் பரவு நெடுமுடி யரச நித்தியப் பிரளய மென்றல், பாருறை மாந்தர் முதற்சரா சரங்கள் பார்த் தறி யாவகைப் பெருக்கா, நீருறு நதியிற் கணங்கணங் கழியு நேரிறந் திறந்துவே றுதல், சீருறு மயன்மற் றிறங்குழி முதலாச் சேர்பிர ளயங்களைத் தெரிப்பாம்.

ஆயிர முறைநான் கூழிவந் தடையி லருமறை யந்தணன் றனக்கு,மேயவோர் பகலப் பகலுளே யீரண் டாய் விளம்புறு மனுக்களுங் கழிவா, ரேயவப் பகலி னீற்றினி லரச விப்புவி முதலமூன் றுலகுந், தூயநீர் பெருக்குற் றிறந்திடு மந்நாட் சொன்மக லோகமுற் றுறைவார். 683

அவ்வுல ககன்று புகழ்சன லோகத் தடைகுவர் பிரளய மப்பேர், வெவ்விய நைமித் திகமென விதிப்பார் விளம்புமப் பகலள விரவாய்த்,திவ்விய தினத்தா லாண் டுறா நிறக்கிற் றிகழயன் போம்பிர ளயப்பேர், பவ்வ வெண் டிரைப்பார் பரித்தவே லரச பகர்பிரா கிருத மென் றுறுமே. 684

கார்மழை பருவ நூறு காந்திடக் கதிர்வெய் யோ னும், பார்புனல் சிறிது மின்றிப் பசையறப் பிளக்குஞ் சேடன், சீர்தரு முகத்தின் றீயாற் சேர்பொரு ளியா வுந் தீய, வோர்தரு மண்டந் தானு முலர்ந்துநீ றுரு மன்றே. 685

விடர்திகழ் தீயி னண்டம் வெந்தமை விளம்பில் வெய்ய, கொடுந்தழற் பட்டுநீறுங் கோமய பிண்டம்

போலா, மடைந்திடும் பருவ நூறுங் கதிர்நெடுங் காற்றக் காற்று,லுடைந்துமுன் வெந்த வண்ட முற்றிடு மனுக் களாயே. 686

மன்னுமக் காற்றி ஞறு வண்ணமா மேக மீண் டித், துன்னுதே ரச்சிற் றுரை சொரிதா வெங்கு நீராய்,முன்னுறு மணமுன் போக முதுநிலம் புனலுண் மாயு, மன்னநீர்ச் சுவைமுன் போக வழல்புகுந் தடங் கு மன்றே. 687

ஆரழ லுருமுன் போகவநிலனி லடங்கு மக்கால்
சேருறு முறு போகச் சேணுறுஞ் சிறந்த சேணும்
பேருறு மொலிமுன் போகப் பிறங்ககங் காரத்தொன்று
மேருறு குணங்கண் மூன்றுற் றியையகங்கார மூன்றும்.

மருவுறு மகானி னொன்றும் வழங்கிய மகானும் வந்தாங், குறைதரு மாயை யுள்புக் கொளித்திடு மாயை தானும், புரையறும் புருட னோடும் போதமா யநாதி யாகிப், பெருகொளி யாகி வைகும் பிரமத்தி னடங்கு மன்றே. 689

இன்னணந் தோற்று மாறே யியைந்தன வியாவும் போகத், துன்னிய பிரள யப்பேர் சொல்பிரா கிருத மாகு, மன்னவப் பிரம மொன்றே வயங்குநித் தியமாங் காண்கிற், பின்னமி லாத ஞானப் பிரளயங் கூறு வாமே. 690

சேலமாய்ச் சேலத் துற்ற சித்திரம் பலவா றால் போல், ஞாலமே முதல வாகி நவையறு முயிர்க ளாகிக், காலமாய்க் கருவி யாகிக்கார ணமாகி யொன்றாய்,மூலமா யழிவொன் றின்றி முதன்மையாம் பிரமம் வைகும்.

[கூறிவந்தமுதன்மையாய்ச் சுதசித்தமான தன்சொரூபம் தோன்றாது மறைப்பது இஃதெனத் திருட்டாந்தத்தாற்கூறல்].

விண்ணெழும் பருதி தன்னால் விளைந்தன மஞ்சு வெய் யோனை, மண்ணிடை நின்று யார்க்கும் வயங்கு வெஞ் சுடர்க்கூ றுன, கண்ணுறன் மறைத்தல் போலக் கருதரும் பொருளி னாலே, நண்ணகங் காரந் தேரு நற் பொருண் மறைக்கு மாதோ. 692

[அம்மறைப்புநீங்கி வெளியாவதையுந் திருஷ்டாந்த முகமாய்க் கூறல்].

கரும்புயல் நீங்கி வெய்யோன் கண்ணிடைத் தனது கூறு, யரும்பொளி பொருந்த வொன்று யவிரு மவ் வாறு போலப், பெரும்பொரு ளகந்தை நீங்கிற் பேசுதன் கூறுய்த் தன்பாற், றிரும்புயிர் கலந்தொன் றுகித் திகழ்ந்திடுந் தேரின் மாதோ. 693

[இவ்விதந் தேகதாரிகளால் சாதிக்கப் படாதேனின், அதற்கு விடைகூறல்].

அறிந்திடு ஞான வாளா லகந்தையாம் வனத்தை நீக்கி,நிறைந்திடும் பிரம மாகி நித்திய மாவர் வேறுய்ப், பிறந்திடு முயிருங் காணர் பின்னமாய்ப் பிரிந்து நீங்கி, யிறந்திடும் பொருளுங் காணு ரேகமா யிருப்ப ரன்றே.

[திருஷ்டாந்தத்தோடு முற்கூறியதை நிலைநிறுத்திச் சங்கதியை முடித்தல்.]

நடையறுந் தொடைய லொன்றே நாகமாய் விளைந்த வாபோல், தடையுறு மாயை நீக்கித் தற்பர மாவு

ராய்ந்தோர், விடலரு ஞானயோக வித்தக விவேகத்
திவ்வா, றடைதரும் பிரளயப்பேப ராத்தியந் திகமென்
றுமே. 695

இன்னதொன் றூலை மாய னிலங்கவ தாரமாகி,
மன்னுநா ராய ணப்பேர் மருவிய முனிவன் கூற, நன்
னரம் புளர்ந்து பாடும் நாரத முனிவன் றேர்ந்து, முன்
னமென் றுதை கேட்க முழுவதுந் தெரித்திட்டானே.

தாதையென் றுரைக்கும் வேதத் தலைவனுள்
ளுவப்ப மேவி, யோதின னெனக்கவ் வண்ண முரைத்
தன னினக்கிவ் வாறிக், காதையைச சவுன காதி கருத
ருந் தவத்தோர் கேட்பச், சூதனு நைமி சப்போர்
சொல்வனத் திருந்து கூறும். 697

## பரிச்சித்து முத்தி பெற்றது.

பிறத்தலு மிறத்தலும் பேசி லாக்கைக
ளுறத்தகு முண்மையா வுற்ற நல்லுயிர்க்
கறத்துறை யரசவக் குணங்க ளின்மையா
லிறத்தன்மற் றுனக்கில்லை யென்றும வைதுவாய். •698

உறங்குழிக் கனவிடை யொருவன் றன்றலை
கறங்கெனச் சுழல்பவர் கையிற் கொய்தெழு
மறங்கிளர் வேலவ மாணங் காண்கையா
லிறந்திடு மாக்கைநீ யென்று மல்லையே. 699

கடத்துறை வானுமக் கடமு டைக்கில்வா
னிடத்தொடு மொன்றுபட் டிருக்கு மாறுபோற்
சடத்துறை யுணர்வுமச் சடந்த ணக்கினீங்
கடக்கரும் பரத்திடுன் றுகி வைதமே. 700

[கர்மபந்த முண்டாகும் ஏதுவைக் கூறல்].

மாயையான் மனமெழு மனத்தி னானுட
னேயமோ டடைதரு நிகழ்ந்த வாக்கையான்
மேயசீ வனுக்குமோர் வினைக்கட் டுண்டெனத்
தூயநூ லுணர்பவர் சொல்லு வாரரோ. 701

[அப் பந்ததேக நீடித்ததோ வெனின், திருஷ்டாந்தத்தை
முன்னிட்டு ஆக்கையென்னும் வியவகாரம்
இம்மட்டே யெனல்].

சொற்றருந் தயிலநூல் தொலையு மட்டுமே
விற்றரு தீபமென் பெயர்வி ளங்குமாற்
பெற்றிடு முக்குணம் பிறங்கு மவ்வள
வுற்றிடு மாக்கையென் றுரைவ ழக்கமே. 702

வில்=ஒளி.

[கூறிவந்த வகையை வற்புறுத்தி 4-செய்யுளால்
தெளிவித்தல்].

வினைத்திறம் பொருந்திய மெய்யை மெய்யென
நினைத்திட லன்றிநீ நீங்க லாதிவ
னுனித்துண ரறிவிடை நூவனு மொன்றென
மனத்தைவைத் துறைகுதி மன்னர் மன்னனே. 703

யாவரு மிறக்கில ரெடுத்த வாக்கையே
சாவது நினையுநீ தண்ணந் தாமரைப்
பூவிரி கருமுகில் போலு மாயவன்
சேவடி படர்தியாற் றெளிந்த கேள்வியோய். 704

தீக்கனல் கட்செவி தீருகுஞ் சிற்றமோ
டாக்கையிற் கதுவுமற் றதுநி னைத்திடேல்

போக்கறு பொலந்துகிற் பூவை வண்ணனை
நீக்கமொன் றின்றிநீ நினைத்தல் செய்தியால். 705

பொலம்=பொன்.

அரவுவாய் பொழிந்தநஞ் சாக்கை சேரினொன்
றொருதனி முதல்வனை யுளத்தி னுள்ளுணர்ந்
திருவிசும் பேக்கறு மீறி லின்பமாம்
பெரியதோ ரின்பநீ பெறுதி யென்றனன். 706

மண்ணிய மணியிற் றோன்று மாயவன் றன்மை யெல்லாம், புண்ணியம் போலத் தோன்றும் புங்கவ னுரைப்பக் கேட்டுக், கண்ணுறும் பிறவி வேலை கடந் தன னுய்யப் பெற்ற, வண்ணல்பே ரின்ப வேலை யலை யிடைக் குளித்திட் டானே. 707

விழிபொழி கருணை தன்னால் வெவ்விய பிறவி மாசு, கழுவினை நின்னை யிங்குக் காட்டிய தவமற் றென்னே, முழுதுணர் முனிவ வென்று முருகவிழ் கமலப் பொற்று, டொழுதனன் சென்னி சூடச் சுகனகன் றேகினானே. 708

என்றுநல் லுணர்வு வாய்ந்த விருந்தவ முனிவர்க் கெல்லா, மன்றலந் துளவு சூடு மரகதக் குன்று போல, நின்றவன் கமலப் பாத நினைதருளங் குளிர்ந்த சூத, னன்றெடுத் துரைத்து மீட்டு நடந்தன நவிற்றினானே. 709

துறந்தநன் முனிவர் சூழச் சுகமுனி போய பின்னர்ச், சிறந்ததன் மனத்தை யொன்றுய்த் திகழு வான் மாவிற் சேர்த்தி, யறந்தரு வேந்தர் வேந்த னரிய

தோர் காட்ட மேபோல், நிறைந்தலை யெரிநீர்க் கங்கை
நீள்கரை யிருந்திட் டானே. 710

நஞ்சினை மீட்ப வந்த நான்மறை யோனை மீட்டு,
வெஞ்சினத் தடைந்த நாகம் வெவ்வரா வுயர்த்தோ
னஞ்சச், செஞ்சிலை குழைத்த காளைத் திருமகன்
றன்னை ஞால, மஞ்சிமற் றுவா வென்றுங் கதிர்ந்திடக்
கதுவிற் றன்றே. 711

தீத்தவ ழுயிர்ப்பு நாகஞ் சிற்றமோ டடைந்த
வாறு, நாத்தலை புரட்டி வெய்ய நஞ்சுகக்கடித்தவாறும்,
பார்த்திலன் சுடிகை நெற்றிப் பஃறலை யரவி னூடுங்,
கூத்தனை நினைந்து நெஞ்சங் குழைந்திழைந் திருக்கின்
றானே. 712

குழைந்திழைந்து=நெகிழ்ந் தொன்றாகிக் கலந்து.

விரிதலை யரவு கான்ற வெவ்விட வழலி னுக்கை
யெரிதர முழுநூற் கேள்வி யின்னமு தெய்தி நின்றோ
மருவிரி தருவி னீழல் வாழ்பவர் வியந்து போற்ற [ன்
வாவணைத் துயிலு மாய னடிநிழ லெய்தி னானே. 713

[ஜனமேஜயனுக்கு வியாழபகவான் உரைத்தல்.]

முன்னமு துண்ட கால மொழிதரு பகுவாய் நாக
மன்னது தன்னை யெங்க ளூரழல் வீழ்த்தி பாய்த்தார்
மன்னவர் மன்ன முன்செய் வல்வினை வந்து நல்கு
மின்னலு மூப்பு நோயு மிறப்பதற் கேது வாமே. 714

அவரவர் வினைக ளேமற் றவரவர்க் கழிவுசெய்யுங்
கவர்படு நாவி னுகக் கணங்களைக் கனவின் மாய்த்த
துவர்படு வேலை ஞாலத் துற்றதோ ரறங்கோ லம்ம
வெவரிவை துணிந்து செய்வா ரிறைவனென் றியம்பி
[னானே. 715

[சூதர்சொல்லி முடித்தல்.]

ஆழியா னன்பர் நாளு மியாமெம தென்று பாரா,
ரேமொழாடே முலக மாதி யெவைகளு மொன்றாய்
நோக்கி, வாழிமால் பாதஞ் சேர்வ ரென்றனு மகிழ்ச்சி
கூர்ந்து, சூழுமா தவரெல் லோருஞ் சூதனைப் புகழ்ந்து
சொல்வார். 716

[மார்க்கண்டேயருக்குப் பகவான் தரிசனம்.]

மல்லலந் துழாயவன் வயிற்றி லோர்புடைப்
பல்லுயிர்ப் பகுதியும் பாவை ஞாலமுஞ்
செல்லொடு மதிதவழ் செம்பொற் குன்றமுங்
கடலென வதிர்கருங் கடலுங் காணுமால். 717

[புராண வளவை.]

கனைத்துவண் டிமிர்துழாய் கண்ணன் மாக்கதை
மனத்துற வழங்குநர் மகிழ்ந்து கேட்குநர்
வினைத்திரு கற்றுறு மெய்ம்மை யாதியாம்
நினைத்தன பெற்றிவ ணீடு வாழியே. 718

ஸ்ரீமத் பாகவதத் திரட்டு

முற்றுப்பெற்றது.

# புஸ்தக விளம்பரம்.

## சிவப்பிரகாசப் பெருந்திரட்டு.
(குறுந்திரட்டுடன்).
இது சொரூபானந்தரால் திரட்டப்பட்டது;
இதுகாறும் வெளிவராதது;
சாஸ்திரரூபமாயுள்ளது.

இதில் 224 அதிகாரங்க ளிருக்கின்றன. முமுட்சுக்களு க்கேயன்றி, மதங்களின் சொரூபங்களையும் அவற்றின் பேதங் களையும் அறிய விருப்ப முடையாருக்கும், உபந்நியாசர்கட்கு மிந்நூல் பெருங் கருவியா யுள்ளது. இதில் 2821 செய்யுட்க ளிருக்கின்றன; பெருந்திரட்டிலில்லாதகுறுந்திரட்டின் 424செய் யுட்களு மிருக்கின்றன. இது டிம்மி 8 - பக்கங்கொண்ட 80 - பாரஅளவுள்ள புத்தகம். விலை ரூபாய் மூன்று.

---

## ரிபுகீதைத்திரட்டு (குறிப்புரையுடன்.)

மகா இதிகாசங்களு ளொன்றாகிய சிவரகசியத்தின் ஆறா வது அம்சத்திலுள்ள ரிபுகீதை வடமொழிப் பயிற்சியுடையார்க் கன்றித் தமிழருக் குபயோக மாகாதிருத்தலை நோக்கித் திரு விடை மருதூர்ப் பிட்சு சாஸ்திரிகளென்று வழங்கும் உலக நாத சுவாமிக ளவர்களால் 1924 பாடலாகத் தமிழில் மொழி பெயர்த் தருளப்பட்டது. அது தமிழ்மக்க ளியாவருக்கும் பெரி தும் உபயோகமாகும்படி விஷயப் பொருத்தம் விடாது 874-பாடலாகத் திரட்டப் பட்டு அவசியமான விடங்களிற் குறிப் புரை எழுதப்பட்டு உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் சுத்தப்பிரதியாக அச்சிடப்பட் டிருக்கின்றது. இது முமுட்சுக்க ளொவ்வொருவ ரும் அத்தியாவசியகமாய் விரும்பத்தக்க தென்பது மிகு பிரசித் தம். காலிக்கோ பைண்ட் - விலை ரூபாய் 1 - 0 - 0.

---

## விவேக சூடாமணி.

சுத்தபாடம் - பாக்கேட்சைஸ் - விலை அணா 8.

இது ஸ்ரீசங்கர பூஜ்ய பகவத்பாதாசாரிய சுவாமிக ளவர்களால் திருவாய்மலர்ந் தருளப்பட்டது இந்நூல் தமிழ்மக் கட்குப் பெரிதும் பயன்படுமாறு திருவிடை மருதூர்ப் பிட்ச சாந்திரிக ளென்னும் உலகநாத சுவாமிகளவர்களால் 671 பாட லாக மொழி பெயர்த்தருளப் பட்டது இதில் 164 அரியபெரிய விஷயங்க ளடங்கி யிருக்கின்றன இது முமுட்சுக்களெவ் வொருவராலும் பொன்னே போல் போற்றப் படுவது; ஆத்மா நாத்ம விவேகமடைதற்குப் பரம சாதனமாயுள்ளது.

---

## நாநாஜீவ வாதக் கட்டளை

(குறிப்புரையுடன்). திருத்தமான இரண்டாவது பதிப்பு.

ஆரம்பத்தில் வேதாந்தம் படிப்பவர்களுக்கு இப்புஸ்தகம் பெரிதும் உபயோகமா யுள்ளது. உபாத்தியாயர் சகாய மில்லா மலே இதனால் வேதாந்தத்தின் பிரக்கிரியைக ளெல்லாம் நன் றாய்த் தெரிந்து கொள்ளலாம். இப்புத்தகம் படிப்பவர்கள் வேறு எந்த வேதாந்த புத்தகங்களையும் படிப்பதற்கு அதிகாரிகளாவர்; இது விரிவாக எழுதப்பட்ட குறிப்புரையுடன் கூடிய இரண்டா வது பதிப்பு இதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் சிஷ் யர் சுவாமி ராமகிருஷ்ணாநந்த ரவர்களும், கோவிலூர் பொ ன்னம்பல சுவாமிகளவர்களும், தஞ்சை—குப்புசாமி ராஜு அவர்களும் நல்லபிப்பிராயம் கொடுத்திருக்கின்றனர். அணா 4.

## மெய்ஞ்ஞான போதம்.

இது 1911 - வது வருஷத்து லோகோபகாரியின் முதற் பக்கத்தில் வெளியாய வேதாந்த விஷயங்களின் திரட்டு. அணா 12.

இதில் 52 வேதாந்த விஷயங்க ளிருக்கின்றன. இது டிம்மி 8 - பக்கங் கொண்ட 23 பாரத்தில் முடிவு பெற்றிருக்கின்றது. வேதாந்த விசாரஞ் செய்பவர்க்கு மிகவும் பயன் தருவதாம்.

## வேதாந்த சாஸ்திர ரத்நாவலி.

)திில் நாகஜீவனாதக் கட்டளை, கீதாசாரத் தாலாட்டு, சசி போதம், மஹாராஜா துறவு, வைராக்கிய சதகம், வைரா ீபம், இலக்ஷணவிர்த்தி, வேதாந்த சூடாமணி, கைவல்ய ம் ஆக ஒன்பது புத்தகங்க ளடங்கி யிருக்கின்றன. இது ஜி பாக்கட்சைஸில் 50 பவுண்டு கிளேஸ் கடிதத்தில் அச் ட்டு இரண்டுமேகான்களினது படத்துடன் கூடி யிருக் து இதன் விலை ரூபாய் 1 - 0 - 0.

---

# ஆநந்த ராமாயணம்.

)துகாறும் தமிழில் வாராதது. இது வால்மீகி மகரிஷி படமொழியி லியற்றப்பட்டது இதில் வால்மீகி ராமாய லில்லாத அநேக விஷயங்களிருக்கின்றன. ரூபாய் 5.

---

## கதாசரித் சாகரம்.

)தன் டெம்மி 8 பக்க அளவில் 240 பக்கங்கொண்ட முதல் வெளியாய விட்டது விலை ரூபாய். 1 - 4 - 0.

)து சம்ஸ்கிருதத்தி லிருந்து தமிழில் மொழி பெயர்க்கப் ரு. இதுகாறும தமிழில் வாராதது. படிக்கப் கடிக்கப் பா மா யிருக்கும் இதி லிருக்கும் கதைகளின் போக்கு இது கேட்டிராத நவநவமான யுக்திகளுடன் கூடியதா யிருக் ார்சுக்கதைகளும், அராபிக்கதைகளும், ரெய்நால்ட்ஸ்நாவ ம் இதற்கிணையாகா வென்று கூறலாம்; இதனைப் படிக்க ித்தால் முற்றிலும் படிக்கும்படி செய்யும்; இதன் பெய கற்பக் கதைகள் சாகரம் போலவே யிருக்கும். கதாசரித் தைப் போன்ற கதை வேறொன்றுமில்லையென்று பண் ிட்ட சாஸ்திரிகள் தாமியற்றியுள்ள தினதயாளுமுதலிய ளின் முகவுரையில் கூறியிருப்பது பிரசித்தமாம். இதன் டாம் பாகம் (32 பக்கமுள்ளது) 4 பாசஞ்சிகையாக வெளி ருகின்றது. சஞ்சிகையின் வருட சந்தா நபாய் 1-8-0

ஸ்ரீமத் - பாகவதம் - தசமஸ்கந்தம். கிருஷ்ண லீ
யிகுதியும் காட்டுவது; படங்களுடன் கூடியது. ரூ. 1
ஸ்ரீமத் பாகவதம். 1 - 2 - 3 - 4. ஸ்கந்தங்கள் ரூ.

## வேதாந்த டிண்டிமம்.

(வேதாந்தப் பேரிகை)

இது சம்ஸ்கிருதத்தி லிருந்து கோவிலூர் ஸ்ரீ சுப்பய்ய மிகளால் மந்தரும் உணருமாறு ஏழைகள் செய்யுள் வடிவ அதை விளக்கத் தெளிவான உரையு மியற்றப்பட் டிருந்தது. இது போன்ற வேதாந்த நூற்கள் தமிழில் மிகக் வே. ஆகலின் இது வேதாந்த அப்பியாசிகள் ஒவ்வொருவரும் அவசிய மிருக்க வேண்டும். அணு நான்கு

## வியாஸ தாத்பர்ய நிர்ணயம்.

(இது காறும் தமிழில்வராதது)

சம்ஸ்கிருதத்தில் அப்பய்ய தீக்ஷிதரென்னும் பெ வித்துவானால் வசனவடிவமாக இயற்றப்பட்டுள்ளது. முதற் பரிச்சேதத்தில் சகல வாதிகளையும் பக்ஷபாத ப வாதிப் பிரதிவாதி மத்தியஸ்த பூர்வகம் கண்டித்து வியாசரானது தாத்பர்யம் அத்வைதமே என ஸ்தாபிக்கப்பட் டின்றது. இரண்டாம் பரிச்சேதத்தில் பிரம்மப் ப்ராப்தி தத்ரூப சகுணப் பிரம்மத்தானேயே ஆகும் என மறை களாக கண்டித்து நன்கு ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றது சம்ஸ்கிருத முணர்ந்தாரக்கன்றி மற்றையோருக்குப் பயன் மை கருதி கோவிலூர் ஸ்ரீ காசிகாநந்த சுவாமிகளால் த வசன வடிவமாக மொழி பெயர்க்கப்பட டிருக்கின்றது.

இது போன்ற சாஸ்திரம் இதுகாறும் தமிழில் இல்லை பதும ஒருதலையே - ஆகலின், வேதாந்திக ளெல்லோரும் மதஸ்தரைக் கண்டித்தற்கு இப்புத்தகம் எந்நாளும் கைவி வைத்தற் குரியதாகும் இதனை வாசிப்போர்க்கு இதன் சீரத் தன்மை வெளிப்படும். அணு எட்டு.

லோகோபகாரி ஆபீஸ்,

கோமளேசுவரன்பேட்டை, சென்னை

803
மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்